

KALKI 12-5-91 ரூ. 2.50
கல்கி
நாகேஸ்வர ராவ்:
பாட்டாளிக் குடும்பத்திலிருந்து
பால்கே விருதுவரை...

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு இல்லையேல், உங்கள் குழந்தை சுறுசுறுப்பாக விளங்கத்தேவையான 'சரி' யான கலோரிகளைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு ஸெரிலாக் தருகிறேன்."





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்.

வீரப்பன் ஆதரவாளர்களுக்கு ஓர் இனிப்பான செய்தி!



அ. தி. மு. க. வெற்றி பெற்றால் போக்குவரத்து அமைச்சராகப் போகிறவர் என்று கட்சிக்காரர்களால் கிசுகிசுக்கப்படுபவர் செங்கோட்டையன். இன்று போயஸ் தோட்டத்துக்கு நெருக்கமானவர். எஸ். டி. எஸ். நெடுஞ்செழியன், வீரப்பன் என்று மூத்த திராவிடத் தலைவர்களெல்லாம் ஜெ. தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் நிலையிலும் ஜெயலலிதாவே அடிக்கடி கூப்பிட்டுப் பேசும் நிலையிலுள்ளவர் செங்கோட்டையன். இ. காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சு, தமது சுற்றுப்பயண ஏற்பாடுகள், போன்றவற்றிற்கு ஜெயலலிதா நம்பியது செங்கோட்டையனைத்தான்!

இதற்கு என்ன காரணம்?

1989 தேர்தலில், பெரியார் மாவட்டத்தில், அப்போதைய அமைச்சர் முத்துசாமி ஜானகி அணியுடன் சேர்ந்தார். ஆனால் செங்கோட்டையன் ஜெ. பக்கமே உறுதியாக நின்றார். மாவட்டத்தில் உள்ள பதினொரு தொகுதிகளில் ஏழில் ஜெ. அணிக்கு வெற்றி கிடைக்கும்படி உழைத்தார். செல்வாக்கோடிருந்த முத்துசாமியோடு மோதிச் செங்கோட்டையன் வெற்றி பெற்றதால் ஜெ.க்கு அவர் மீது மதிப்பு ஏற்பட்டது. அதன் பிறகு முத்துசாமியும் ஜெ. அணியில் சேர்ந்தார் என்றாலும் இப்போது செங்கோட்டையன் தயவில்தான் முத்துசாமி அரசியல் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

1977லிருந்தே கோபிச்செட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் செங்கோட்டையன் ஒரு தீவிர எம். ஜி. ஆர். பக்தர். பணக்கார விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தொகுதியைப் பொறுத்தமட்டில் எந்தக் கட்சியினராக இருந்தாலும் உதவி செய்பவர். இந்த முறை பெரியார் மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு சட்டமன்றத் தொகுதி கூட ஒதுக்காததற்குக் காரணம் செங்கோட்டையன்தான். 'பதினொரு தொகுதிகளிலும் அ. தி. மு. க. வெற்றிக் கொடி நாட்டும்' என்று நம்பிக்கையுடன் சொல்கிறார் செங்கோட்டையன்!

ஒருவர் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்தால் கூட குற்றவாளி என்று நிரூபிக்கப்படாத வரையில் தேர்தலில் வேட்பாளராக நிற்க முடிகிறது. ஆனால் சந்தேக கேஸிலோ, அல்லது அரசியல் காரணங்களுக்கோ ஒருவர் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கும்போது, அவரால் வோட்டுப் போட முடியாது! இவ்வாறு குற்றம் ரூசுவாகாமல் விசாரணைக் கைதிகளாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் சுமார் ஐந்து லட்சம் நபர்களுக்கு வோட்டுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார் சமூக நீதிக்கான பிரசார கழகத்தின் செயலாளர் எஸ். ராதாகிருஷ்ணன்.

வீரப்பன் ஆதரவாளர்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தி. வீரப்பனுக்கு இந்தத் தேர்தலில் ஜெ. டிக்கெட் தரவில்லையே என்று இனியும் வருத்தப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டாம். தாம் போட்டியிடும் இரண்டு தொகுதிகளிலும் வெற்றி நிச்சயம் என்பதால், ஏதாவது ஒரு தொகுதியில் ராஜினாமா செய்து, அந்தத் தொகுதிக்கு வரும் இடைத் தேர்தலில் வீரப்பனை வேட்பாளராக நிறுத்த ஜெ. முடிவு செய்திருக்கிறாராம்!


- கௌசல்யா

படம்: ராஜன்

செங்கோட்டையன்



ராதாகிருஷ்ணன்



நாகேஸ்வர ராவ்:

பாட்டாளிக் குடும்பத்திலிருந்து பால்கே விருதுவரை...

'ஏ. என். ஆர்.' என்று அழைக்கப்படுகிற ஏ. நாகேஸ்வரராவ் பற்றிய அறிமுகமே தேவையில்லை. 'பால்கே விருது' பெற்ற அவர், கல்கிக்காக ஹைதராபாத்திலுள்ள அவரது இல்லத்தில் அளித்த சிறப்புப் பேட்டி இது...

ஆந்திர கிராமத்து மக்கள் அவரைக் கூர்ந்து பார்க்கிறார்கள். வணங்குகிறார்கள். ''நான் இப்போது நீங்கள் சினிமாவில் பார்த்த மகாகவி காளிதாஸோ, விப்ர நாராயணனோ, பக்த துக்காராமோ, தெனாலி ராமகிருஷ்ணாவோ அல்ல. சாதாரண மனிதன். ஒரு நடிகன். நான் சொல்ல என்ன இருக்கிறது? சொல்வதை என் படங்களில் சொல்லி விட்டேன்!''

சிரித்துக் கைகூப்பி, அவர்களை அனுப்பி விட்டு, நமது பேட்டிக்காக மாடியில் வந்து அமர்கிறார். இன்னும் இரண்டு பஸ்களில் ஜனங்கள் வந்து நிற்கிறார்கள். மீண்டும் இறங்கிப் போய் வணங்குகிறார். சிரிக்கிறார். அனுப்பி விட்டு வருகிறார்.

''இது அலுக்கவில்லையா?''

அறுபத்தேழு வயதான அந்த சூப்பர் ஹீரோ புன்னகை செய்கிறார்.

''அலுப்பு என்றால் அலுப்புத்தான். ஆனால், சந்தோஷமாய் அந்த முகங்கள் என்னைக் கௌரவித்து, எங்கிருந்தோ என்னைத் தேடி வருகையில், அவர்களுக்கு என் வணக்கங்களைச் செலுத்துவதுதான் மரியாதையானது.''

கல்கியின் சார்பில் அவருக்கு வாழ்த்துக்களைக் கூறுகிறோம். உடனே, ''எத்தனை எழுத்தாளர்கள் கல்கியால் உருவாகியிருக்கிறார்கள்'' என்று கல்கியின் சில நாவல்கள் சினிமாப் படங்களானதை நினைவூட்டி, கல்கி சதாசிவம், எம். எஸ். ஆகியோரைப் பற்றி விசாரிக்கிறார்.

''விருது பெற்றது பற்றி...?'' - முதல் கேள்வியை ஆரம்பிக்கிறோம்.

''வாழும் காலத்திலேயே ஒரு கலைஞன் அங்கீகரிக்கப்படுவது எத்தனை சந்தோஷமானது. அரசாங்கம் இந் நாட்டின் ஒரு சிறந்த விருதை நடிகனான எனக்குத் தந்திருப்பது, சந்தோஷமளிக்கிறது. ஏழைக் குடும்பத்திலிருந்து வந்து நடிகனான ஒருவனை அங்கீகரித்திருக்கிறது. இந்த விருது என் முன்னோடிகளுக்கும், சமகாலக் கலைஞர்களுக்குமான பொதுவான அங்கீகாரம்... எனக்கான தனிப்பட்ட அங்கீகாரமல்ல என்றுதான் கருதுகிறேன்.''

''இன்றைய கலாசார சீரழிவு, நல்ல கலைஞர்களுக்கான அங்கீகாரமின்மை போன்றவற்றை மனத்தில் கொண்டு, இவ்வகையான விருதுகளை நிராகரிக்க வேண்டுமென்று எப்போதாவது நினைத்ததுண்டா?''

''அரசாங்கம் அல்லது நிறுவன அமைப்புகளுக்கு எதிராக, நான் செயல்பட நினைத்ததில்லை. நான் கலகக்காரனல்ல. அகிம்சையின் மீது நம்பிக்கை கொண்டவன். எந்தச் சீரழிவும் என்னையும் சேர்ந்ததுதான். ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கத் தேவையில்லை. விருதுகள் இல்லாவிட்டாலும் நல்ல கலைஞர்கள் காலத்தால் என்றைக்கும் அங்கீகரிக்கப்படுவார்கள்.''

''இவ்வாண்டு, தேசிய விருதுகள் பற்றி நிறைய சர்ச்சைகள், கமர்ஷியலானவர்களுக்குத் தரப்பட்டது என்று. அமிதாபச்சனுக்கான சிறந்த நடிகர் விருது பற்றின சர்ச்சையின் நிழல், தங்கள் விருது மேலும் பட்டு, தாங்கள் இ. காங்கிரஸிற்கு ஆதரவாளர் என்பதால் தரப்பட்டதாய்...''

''அதிர்ச்சியாக இருக்கிறது. இப்படியொரு சாயம் பூசப்படுவது.''

''சிவாஜி போன்றவர்கள் நிராக ரிக்கப்பட்டு...''

''சிவாஜிக்கும் எனக்கும் போட்டி என்றால், எனக்கு விருது கிடைத்தி ருக்கிற போது, நிச்சயம் சிவாஜி கணேசன் பெருமிதமும், சந்தோஷமும் கொள்வார். பெருந்தன்மையான மனி தர் அவர். இந்த விருது அவருக்குக் கிடைத்திருந்தால் நான் பெருமிதம் கொள்வேன். அப்படியிருக்க, இதன் மேல் சாயம் பூசப்படுவது வருத்தம் தருகிறது...''

''தமிழ் சினிமாவில் தாங்கள் நிலைத்திருக்க முடியாமைக்கு...''

''1940 முதல் தமிழ் சினிமாவில் நடித்திருக்கிறேன். 52ல் தான் சிவாஜி கணேசனும், ஜெமினி கணேசன் போன்றவர்களும் வந்தார்கள். தனித் தன்மையான, தமிழ் நடிகர்களாக நிலைநிறுத்திக் கொண்டார்கள். தமிழ் தெரிந்தாலும், பக்கம் பக்கமான வசனங்க ளைப் பேச வேண்டிய அந்தக் கால கட்டத்தில், நிறையச் சிரமங்களை நான் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. என்னைத் தவிர, ஒரிரு தெலுங்கு நடிகர்களும் அப்போது தமிழ்ப் படங்களில் நடித்த போது, பாஷை யின் காரணத்தால், தெலுங்கு டப்பிங் படமோ என்ற பிரமையை எங்களின் சில படங்கள் உருவாக்கின. அதனால் - பாஷை ஒரு முக்கியமான விஷயமானதால் நான் தெலுங்கைத் தேர்ந்தெடுத்தேன். தெலுங்கு என் தாய்மொழி என்பதால் அதைத் தேர்ந் தெடுத்தேனே தவிர - எனக்கென்று ஒரு சிறப்பான தனி பாணி வேண்டுமென்பதற் காகத் தேர்ந்தெடுத்தேனே தவிர - நான் தமிழில் நிலைக்க முடியாமல் போனதற்காக அல்ல.





'தேவதாஸ்' படத்தில்....

''தமிழ் சினிமாவில் தங்களின் சிறந்த நண்பர்கள் பற்றி?''

''சிவாஜி கணேசன், கருணாநிதி முக்கியமானவர்கள். கருணாநிதி என்னை 'தேவதாஸ்காரு' என்றுதான் அழைப்பார். நம்பியார், பாலையாவும் நல்ல நண் பர்கள்...''

மேஜையின் மேல் மூன்று போட் டோக்கள். ஒன்று விவேகானந்தர், இன் னொன்று சிவாஜி கணேசன், தாசரி நாரா யணராவ், மகன் நாகார்ஜுனன், இவர்க ளுடன் நாகேஸ்வரராவ். இன்னொன்றில் குடும்பப் படம். வீட்டு முகப்புத் தூண்களாய் நாகேஸ்வரராவும், நாகார்ஜுனனும் இரு புறங்களில். கோபுரக் கலசம் போல் உச்சியில் அவர் மனைவி.

''பெண்களுக்கான உரிய மரியாதையை எப்போதும் தருபவன் நான். என் அம்மா எனது நிஜமான தெய்வம். என் மனைவி நல்ல விமர்சகர், வழிகாட்டி....''

''தமிழ் சினிமாவின் புதுப் போக்குகள்...''

''பாலச்சந்தருக்குப் பின் தமிழ் டைரக் டர்கள், நடிகர்கள் பற்றி அதிகம் எனக்குத் தெரியவில்லை. கமலஹாசன் அற்புதக் கலை ஞன்... என் 233 படங்களில் 26 தமிழ்ப் படங்கள். ஒரு வகையில் சினிமாவில் என் தாயகம் தமிழ் எனலாம். விருந்தோம்பலும், மனிதர்களை மதிப்பதும் நான் தமிழகத்தில் கற்றுக் கொண்டவை....''



''சம்பளக் கவரைக் கொண்டு போய் அப்படியே தாயார்கிட்டே கொடுக்கிறாரே, அவரையா பெண்டாட்டிதாசன்னு சொல்றீங்க?''

''தினமும் லஞ்சக் கவர் மனைவிகைக்குப் போகிற விஷயம் உங்களுக்குத் தெரியாது போலிருக்கு!''

-- சீர்காழி வி. ரேவதி

''தெலுங்குப் படங்களைத் தென்னிந்தியப் படங்களுடன் ஒப்பிடுகையில்...''

''நான் சினிமாப் பார்ப்பது ரொம்பவும் குறைவு. இந்த ஆண்டில் நான் பார்த்த ஒரே தெலுங்குப் படம் நான் நடித்த, 'சீதாராமை யாகாரு மனவராலு'தான்!'' என்று சிரிக்கிறார். தொடர்ந்து, ''ரோகிணி ஹட்டங்காடி - காந்தி படத்தில் கஸ்தூரிபாவாக நடித்த இந்தி நடிகை - அதில் என் மனைவியாக நடித்தார். பாஷைகளுக்கு அப்பாற்பட்டது கலை என்பதை நடிப்பால் நிரூபித்தார்.''

''சினிமாவின் நவீன வளர்ச்சி என்பது...?''

''தலை பெருத்தோ, கை கால்கள் வீங்கியோ உள்ள நோயாளியைப் போலத்தான் நமது சினிமாவின் நவீன வளர்ச்சி. சீரான வளர்ச்சி இல்லை. கேமராவும், டைரக்ஷனும் சினிமாவில் சர்வதேசப் பாஷைகளைக் கொண்டு வந்து விட்டன. ஆனால் கலாபூர்வமாக இல்லை. கதையம்ச ரீதியில் பூரணத் தன்மை இல்லை...''

''ஆர்ட் பிலிம்களில் கூடவா இல்லை?''

''சினிமாவில் நல்ல சினிமா, மோசமான சினிமா என்றிருக்கிறது. ஆர்ட் சினிமா, கமர்ஷியல் சினிமா என்ற கோடு தேவையற்றது. வெகு நிதானமான ஆர்ட் சினிமாக்கள், நம் வறுமையை, சீரழிவை வெளிநாட்டில் சுலபமாக விற்கத் தோதானவை!''

''ரசனைத் தளத்தில் ஆர்ட் பிலிம்கள் உயர்ந்து நிற்கவில்லையா?''

''வெவ்வேறு வகையான ரசனைத் தளங்கள் இல்லை. எல்லோருக்குமான பொதுவான சினிமாதான் உயர்ந்த சினிமா. சார்லிசாப்ளின் போன்றவர்களின் உன்னத சினிமாக்கள் என்றைக்கும் எல்லோருக்குமான பொதுவான படங்கள்தானே...''

''இலக்கியத்தில் மனித அவலமும், வறுமையும், சீரழிவும் காட்டப்படுகையில் அவை உன்னதமாகின்றன. அவையே சினிமாவில் என்கிற போது மட்டும் முகம் சுளிப்பானேன்?''

''இலக்கியம் பாதிப்பது சிலரை. சினிமா பெரும்பான்மையோரை. பெரும்பான்மையோரை நசிவு விஷயம் பாதிப்பது கவலை தரும் விஷயம்தானே!''

''அவை சொல்லப்படக் கூடாது என்கிறீர்களா?''

''சொல்லப்பட வேண்டும்தான். அதற்கு வரையறை உண்டு. வன்முறை காட்டப்படுவதன் அளவும் இதே அளவில் இமயமாகி நிற்கிறது. மேலும், வெறும் யதார்த்தம் என்பது கலையாகி விடாது. யதார்த்தமான ஆர்ட் சினிமா என்கிறபோதும் நடிக்க ஆரம்பிப்பதே செயற்கைதானே! பிறகு அவை யதார்த்த சினிமா என்றாகி விடுமா? எல்லோருக்கும் பொதுவாக - அம்மாவுடன் பேத்திகளும் உட்கார்ந்து பார்த்து ரசிக்கிற படமாக மட்டும் இருந்தால் போதாது; அனைவரும் அதைப் புரிந்து கொள்கிறதாகவும் இருக்க வேண்டும்...''

''நடிகன் என்பவனுக்கு நடிப்புக் கலை மட்டும் போதாது. இலக்கியம், இசை இன்னும் பிற கலைகள் அவனைச் செழுமைப்படுத்தும். அந்த வகையில் பிற கலைகள் உங்கள் மீது செலுத்தும் பாதிப்பு பற்றிச் சொல்லுங்களேன்!''

''முழுமையான கலைஞனுக்கு இலக்கியமும், இசையும், ஓவியமும் பிற கலைகளும் அவசியம் தேவை. ஐந்தாவது படிக்கிறபோதே மோசமான வறுமை காரணமாக நாடகத்திற்குச் சென்று விட்டேன். அதனால் எனக்கு இளமைப் பருவத்தில் இலக்கியம் படிக்க வாய்ப்பில்லை. நடிகனான பின் சமயம், கிடைக்கையில் பயன்படுத்திக் கொண்டேன். அதுவும் ரொம்பச் சொற்பம் தான். ஆனால் நல்ல இலக்கியவாதிகளுடன் இசைக் கலைஞர்களுடன் நெருங்கின தொடர்பு உள்ளது. அவர்களுடன் நிறையப் பேசுகிறேன். அவர்களின் வார்த்தைகளை அனுபவங்களாய் வரித்துக் கொள்கிற, நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளேன்.''

''சினிமாவுக்கு வந்தது குறித்த மறுபரிசிலனை, வருத்தம் எப்போதாவது ஏற்பட்டதுண்டா..''

''நிச்சயமாக இல்லை. அடுத்த பிறவி என்றிருந்தால் அதிலும் நான் நடிகனாகத்தான் ஆக விருப்பம்...''

''சினிமாத் துறைக்கு நுழைந்ததை உங்கள் குடும்பம் எந்தவகையில் எதிர்கொண்டது...''

''அம்மாவுக்குப் பெண் குழந்தைகள் இல்லை. அதனால் என்னைப் பெண் குழந்தை போல் அலங்கரிப்பார்கள். அக்காலத்து நாடகங்களில் ஆண்களே பெண் வேஷம் போடுகையில், நானும் வறுமை காரணமாகப் படிப்பை விட்டு விட்டுப் பெண் வேஷங்களில் நடிக்க ஆரம்பித்தேன். பின்னர் சினிமாவிற்கு வர தளமாக இருந்தது



வேலைக்கு ட்ரையோ ட்ரை பண்ணினேன். கடைசியா ஒரு ஐடியா தோணிச்சு! மானேஜருக்கு ஒரு கிரேட் ட்ரையோ வாங்கிக் கொடுத்தேன்! காரியம் முடிஞ்சுடுச்சு!
காளிடுன்
KALI
TR
TRIO
ட்ரையோ
நினைத்தாலே இனிக்கும் ஆரஞ்சு இன்சுவை!
KALI MARK
இது ஒரு காளி மார்க் தயாரிப்பு
ADWAVE/KALI/4206 TAM

அது...''

''சினிமாவின் குரூரங்கள், பலிகள்...''

''எதில்தான் குரூரம் இல்லை இப்போது? வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள் பவனுக்கு நம்பிக்கையான வாழ்க்கைதான். ஞானமும், நம்பிக்கையும் வாழ்க்கை. மனித மதிப்பீடுகள் தாற்காலிகமாகச் சிலரால் நசிவதும், அழிவதும் சகஜம். ஆனால் அவை மனித மதிப்பீடுகளாகவே எப்போதும் இருக் கும். குரூரம் சில சமயம் ஜெயிக்கும். எப் போதுமல்ல..''

''சினிமாவைத் தவிர தங்களுக்குப் பிடித்தமான வேறு துறைகள்...''

''என் வறுமை என்னைப் படிக்க விடாமல் செய்தது. அதனால் சினிமா தந்த பணம், ஏழை மாணவர்களுக்குப் பயன்படக் கல்லூரியும், பள்ளிகளும் நடத்துகிறேன். ஆந்திரா, சென்னை, திருப்பதி, பெங்களூர், பம்பாய், கேரளா, ஹைதராபாத் பல்கலைக் கழகங்களில் என் பெயரில் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்கள் உள்ளன. ஆத்மார்த்தமா னவை இவை. இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கென நண்பர்களுடன் பல தொழிற்சாலைகளும் அமைத்திருக்கிறேன்.''

''சினிமா தவிர, எழுத்தும் ஆத்மார்த்தமாய் உணர வைத்ததுண்டா...''

''உண்டு. அமெரிக்கப் பயணக் கதை, சுயசரிதம், அஆனாக்கள் என்ற சொற்கோலக் கவிதை - என்ற மூன்று நூல்களும் இலக்கி யத்துக்கான என் பங்காய்க் கொடுத்தி ருக்கிறேன்.''

''சினிமா, கூட்டு இயக்கக் கலையா?''

''நிச்சயமாக..''

''ஆனாலும் தனிமனிதர்களின் பலங்களால் தான் சினிமாக்கள் நிலைப்பது போல் இருக்கிறதே?''

''தனிமனிதன் என்பவன் சினிமாவைப் பொறுத்தவரை போர் வீரனே தவிர, கமாண்டர் அல்ல!''

''டைரக்ஷனுக்கு நுழைய விருப்ப முண்டா?''

''இல்லை...''

''அரசியலில் நுழைய...''

''விருப்பமில்லை.''

''இளைய தலைமுறையினருடன் சினிமா வில் பணிபுரிவது பற்றி?''

''சந்தோஷமாயிருக்கிறது. புதுப்புது விஷயங்களைச் சுவீகரிக்க முடிகிறது. கலைக்குத் தலைமுறை இடைவெளி என்று எதுவும் இருக்க முடியாது. அப்படி நினைக்கிறவன் கலைஞனாகத் தொடர முடியாது. தேங்கி விடுவான். நாகார்ஜுனனையும், கமலஹாசனையும் நான் அங்கீகரிக்கா விட்டால், நான் மட்டும் தனியாக எங்கு நிற்க முடியும்?''

பேட்டி: ஆர். பி. எஸ்.
அட்டை வண்ணப்படம்:
க்ளோ கலர் லேப்ஸ்

அடுத்த இதழ்

தேர்தல் சிறப்பிதழ்



தேர்தல் பற்றிய பல்வேறு விஷயங்களையும் அலசி ஆராய்வதோடு, அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளும் அலசி யெடுக்கப் படுகின்றன....



நளினிசிங் - துணிச்சலின் மறுபெயர்

துணிச்சலுக்கு மறுபெயர் நளினி சிங்!

நளினிசிங் - ஞாபகமிருக்கிறதா? சென்ற தேர்தலின் போது, மேஹம் தொகுதியில் வாக் குச் சாவடியைக் கைப்பற்றிய செய லைப் படமெடுத்து, டீ.வி.யில் ஒளிபரப்பச் செய்தாரே அவரேதான்! அண்மையில் ஐ. ஐ. டி. மாணவர்களின் அழைப்பின் பேரில் சென்னை வந்திருந்தார். சில அனுபவங்க ளைச் சொன்னார்.

★★ மேஹம் தொகுதியில் குறிப்பிட்ட பகுதியில் இத்தகைய ஜனநாயக விரோதச் செயல்களில் குண்டர்கள் ஈடுபடப் போகி றார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்தது. காமிரா யூனிட்டுடன் காத்திருந்தேன்.

எனக்குத் தகவல் தந்தவரே வந்து அழைத்துப் போனார். காரை நிறுத்தி விட்டு, வாக்குச் சாவடியினுள் காமிரா சகிதம் நுழைந் தோம். வாக்குச் சாவடியைக் கைப்பற்றி யிருந்த குண்டர்களுக்கு மிகவும் வேண்டப் பட்டவர்தான் எனக்குத் தகவல் தந்தவர். எனவே குண்டர்கள் உடனடியாக எங்கள் குழுவினரைத் தாக்க முன்வரவில்லை. தலைமை அதிகாரி, வாக்குச் சீட்டுக்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க, ஒரு குண்டர் வாக்குச் சீட்டுக்களில் முத்திரை பதிக்க, இன்னொருவர் சீட்டுக்களை மடித்துப் பெட்டியில் போட்டுக் கொண்டி ருந்தார். காவலுக்கு ஆயுதமேந்திய அடி யாட்கள்! சுமார் முப்பது வினாடிகளுக்கு, வாக்குச் சாவடியினுள் நடந்த மேற்படி செயல்களைப் படம் பிடித்துக் கொண்டு, காருக்கு ஓடி வந்து பறந்து விட்டோம்!

★★பம்பாயில் சிவப்பு விளக்குப் பெண் கள் பற்றிய ஒரு நிகழ்ச்சிக்காக அப் பகு திக்குப் போனேன். ஒரு வீட்டின் மாடிப் பகுதியில் ஒரு சி. வி. பெண்ணைப் பேட்டி கண்டு கொண்டிருந்தேன். லக்னோவிலிருந்து முப்பதாயிரம் ரூபாய்க்கு வாங்கி வரப்பட்ட அந்தப் பரிதாபத்துக்குரிய பெண், தன் சோகக் கதையை மனம் திறந்து சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென்று தெருவில் போலீஸ் சைரன் ஒலி கேட்டதும் எனக்குப் பகீரென்றது. கேமராமேனும் ரொம்பப் பயந்து விட்டார். ஆனாலும் சமயோசிதமா கச் செயல்பட்டார். கேமராவை ஸ்டாண்டில் நிறுத்தி 'ஆன்' செய்து விட்டு, அறையை விட்டு வெளியேறி விட்டார். போகும் போது, சாமார்த்தியமாய் அறையை வெளிப் பக்கம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு போய் விட் டார். அறையின் உள்ளே, பேட்டி தொடர்ந்து நடக்க, கேமரா இயங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் பேசி முடித்த பின், நான் கேமராவை ஆஃப் செய்து, கேஸட்டை மறைத்து வைத்துக் கொண்டு, கேமராவை பாக் செய்து விட்டு, உள்பக்கத்தி லிருந்து லேசாய்த் தட்டிக் குரல் கொடுக்க, காமிராமேன் கதவைத் திறந்தார். உடனடி யாக அந்தப் பகுதியை விட்டு வெளி யேறினோம்!

★★பீகாரில் பகல்பூர் பகுதியில் நடந்த கொடூரமான ஜாதிச் சண்டையில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர், தாங்கள் கொன்ற இன்னொரு சமூகத்தினரின் உடல்களை ஒரு கிணற்றில் போட்டு மூடி விட்டனர். இரண்டு வாரங்கள் கழித்து, இதனால் பிரச்னை வரக்கூடும் என நினைத்து, கிணற்றிலிருந்து பிணங்களை அகற்றி, ஊரின் ஒதுக்குப் புறமான நிலப் பகுதிக்குக் கொண்டு போய்ப் பள்ளம் வெட்டிப் பிணங்களைப் புதைத்து விட்டனர். அதன் மேல் நிலத்தை உழுது, காலிஃப்ளவர் பயிரிட்டு விட்டார்கள்!

இது நடந்து சுமார் ஆறு வாரங்கள் கழித்து, விஷயம் வெளிப்பட்டது. நான் உடனே அந்த ஊருக்குப் போனேன். பச்சைப் பசேல் என்று காலிஃப்ளவர் செடிகள் இருந்த அந்தக் குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிய போது... ஐயோ! அந்தப் பயங்கரத்தைக் கூறவே முடி யாது! கலவரத்தில் இறந்த ஒருவரின் வீட்டில் பேசிய போது, நெஞ்சுருகிப் போனேன். உடம்பெல்லாம் வெட்டுக் காயங்களுடன், மருத்துவ உதவிக்கு வீட்டிலிருந்து வெளியே யாரும் செல்ல முடியாத நிலையில் 'தண் ணீர்... தண்ணீர்' என அவர் தவித்த தவிப்பு... அதை இறந்தவரின் மனைவியும், குழந்தை யும் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்த போது, நானும் அவர்களோடு சேர்ந்து குலுங்கி அழ ஆரம்பித்து விட்டேன்.

''அடுத்து நீங்கள் டீ.வி.க்காக எடுத்துக் கொள்ள விருப்பப்படும் சப்ஜெக்ட் எது?''

''உல்ஃபா. அதோடு இந்தத் தேர்தலில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றினாலும் நிச்சயமாய் அதை நான் படம்பிடிக்கப் போவேன்!''

சந் திப் பு:எஸ் . சந் திரமௌலி

படம் : ரமணன்



வா, ராம ராஜ்யம் நடத்துவோம்... நீதான் ராமராம், நான்தான் லட்சுமணராம்...
இல்லே, நீதான் ராமர், நான்தான் லட்சுமணர்...
அடேங்கப்பா, இவங்களை தாண்டி அடிக்கிற மாதிரி நாம என்ன வேஷம் போடறது?
என்ன, இந்த ஆளு ஜனாதிபதி மாளிகை வளாகத்தையே அசிங்கப் படுத்தறாரு. கிளம்பு, கிளம்பு...
'தேவையால் நமக்கு ஒதுக்கப் பட்ட வீட்டை மாட்டுப்பண்ணை-யாக மாற்றி வருகிறார்' -செய்தி
இந்தா, இதை உடுத்திக்க... ஆட்சி கலைக்கப் பட்டதுக்கு நியாயம் வழங்கு!
இந்தா, இதைப் போட்டுக்க... தி.மு.க.வை தோற்கடிச்ச எனக்கு நீதி வழங்கு!



கல்கி

1991 மே 12
மலர் : 49 இதழ் : 41
பிரஜோத்பத்தி சித்திரை 29



தலைவரே தெய்வம்; அரசியலே வியாபாரம்!

திரும்பின பக்கமெல்லாம் அதிருப்தி. டிக்கெட் தரப்படவில்லை என்று உண்ணாவிரதம் இருப்போர் ஒருபுறம்; போட்டி வேட்பாளராக மனு தாக்கல் செய்வோர் மறுபுறம்; கட்சியிலிருந்து வெளியேறி, அல்லது வெளியேற்றப்பட்டு வசைபாடுவோர் வேறு ஒருபுறம். தேர்தல் நெருங்க, எல்லாக் கட்சிகளுக்குள்ளும் எத்தனை அதிருப்தி நிலவுகிறது என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது! தலைவர்கள் பாடு கஷ்டம்தான். அனுபவம் மிக்கவர்களுக்கு டிக்கெட் தந்தால், 'கொடுத்தவர்களுக்கே திரும்பத் திரும்பக் கொடுக்கிறார்கள்' என்ற புகார் எழும்; இளைஞர்களுக்குத் தந்தால், 'ஆண்டாண்டு காலமாகக் கட்சிக்கு உழைத்தவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்' என்ற பழிச் சொல் புறப்படும். எப்படியும் கெட்ட பெயர்தான்! இதற்கு என்ன செய்வது?

உட்கட்சி ஜனநாயகம்தான் வழி. தொகுதியில் இருப்பவரையெல்லாம் சென்னைக்கு வரச் சொல்லி, தலைவர்கள் சிலர் அமர்ந்து கொண்டு பேட்டி கண்டு, நேர்முகத் தேர்வு நடத்துவானேன்? இது என்ன கல்லூரிப் பரீட்சையா அல்லது உத்தியோகத் தேர்வா? யார் நல்ல உழைப்பாளி; யாருக்கு மக்களிடம் அக்கறை என்பது தொகுதி மக்களுக்குத்தான் தெரியும். எனவே, அந்தத் தொகுதியில் உள்ள கட்சியின் அங்கத்தினர்கள்தாம் தங்கள் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். போட்டியிருந்தால் வோட்டுப் பதிவாக வேண்டும். இவ்வாறு நடந்தால் அதிருப்தி ஏது? கட்சி மாறுவதற்கும் போட்டி வேட்பாளராக நிற்பதற்கும் இடமெங்கே? இவ்வாறு பல்வேறு கட்சிகளும் தங்கள் வேட்பாளரைத் தேர்வு செய்த பிறகு, அந்த வேட்பாளர்கள் மக்கள் முன் நிற்க, பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களித்துத் தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து விட்டுப் போகிறார்கள். இந்த முறையில், இன்றோ நாளையோ, வேட்பாளராக விளங்க விரும்பும் அனைவருமே கட்சிக் கண்ணோட்டமின்றி மக்களுக்காக உழைத்து நற்பெயரெடுக்க முயற்சி செய்வார்கள். தனித்தனியே தொகுதிகள் நலன் பெற, மொத்தத்தில் நாடே உயர்வதற்கு வாய்ப்பு.

உட்கட்சி ஜனநாயகம் இல்லை; தலைவர் வைத்ததுதான் சட்டம் என்னும் போது வேட்பாளர்கள் மக்களை மறந்து விடுகிறார்கள். தலைவரைத் திருப்திப்படுத்துவது ஒன்றே காரியமாகி விடுகிறது. கையெடுத்துக் கும்பிட்டால் போதாது என்று காலில் விழுகிறார்கள்! வேட்பாளராக விரும்புவோர், டிக்கெட்டுக்காக எக்கச்சக்கமாகப் பணம் தர வேண்டிய கொடுமை வேறு. தவிர, 'நீ எவ்வளவு செலவழிப்பாய்? உன் ஜாதி என்ன? உன் தொகுதியில் உன் ஜாதிக்காரர் எத்தனை பேர்?' என்ற அநியாயக் கேள்விகள். இதனாலெல்லாம் மக்களுக்குப் பாடுபடும் எண்ணமே போய், அரசியல் வெறும் வியாபாரமாகி விடுகிறது. தேர்தலில் செலவழித்த பணத்தை வட்டியும் முதலுமாகத் திரும்ப எடுப்பதே தலையாய நோக்கமாகி விடுகிறது.

உட்கட்சி ஜனநாயகம் என்பது ஆரோக்கியமான ஜனநாயகத்தின் இன்றியமையாத அம்சம். இதற்குச் சட்டம் கிடையாது. தலைவர்கள்தாம் நல்ல மரபுகளை உருவாக்க வேண்டும். உட்கட்சி ஜனநாயகம் பலப்படாவிட்டால் அக்கிரமங்கள் பலவித வடிவங்களில் தலைதூக்கும். குண்டர்களின் அட்டகாசம்; வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல்; கள்ள வோட்டுப் போடுதல் போன்றவை உட்கட்சி ஜனநாயகம் வளர்ச்சி பெறாததன் விளைவுகளே. அமைச்சர்கள், அநீதியான முறையில் தேர்தலுக்கு முன்னதாக டெலிஃபோன்களையும் காஸ் சிலிண்டர்களையும் வாரி வழங்குவதையும், அதிகாரிகளைக் கண்டபடி மாற்றுவதையும் உட்கட்சி ஜனநாயகம் ஓங்கி வளர்ந்த நாடுகளில் காண முடியாது.

ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி என்பது கிடையாது. ஆட்சிக்கு வருகிறவர் மக்கள் சார்பில் ஆள்கிறார். ஆட்சிக்கு வரமுடியாதவர் அதைவிட முக்கியமான எதிர்ப்புப் பணியை மக்கள் சார்பில் நடத்துகிறார். இதனை நன்கு உணர்ந்து, நாட்டை உயர்த்தக் கூடியது உட்கட்சி ஜனநாயகமே.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. -- பாரதியார்.

குழப்பத்திலிருக்கும் தில்லிவாலாக்கள்!



தேர்தல் சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டதோ இல்லையோ, நாடெங்கிலும் கோடை வெயில் சுறுசுறுவென்று ஏறிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக வோட்டுச் சாவடிகளுக்கு வருவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறையலாம் என்று வேட்பாளர்களுக்கு இப்போதே ஏகக் கவலை. இருப்பினும் மக்களின் தலைகளில் டன்டன்னாகஜஸ் வைத்து, அவர்களை உச்சி குளிரவைக்கும் கலையை, யாராவது நமது அரசியல் கட்சிகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமா, என்ன!

தில்லியில் சென்ற தேர்தலின் பொழுது, ஓர் அரசியல் கட்சி, குளிர்காலம் ஆரம்பம் என்பதைப் பயன்படுத்திச் சேரிவாழ் மக்களுக்குக் கம்பளி, ரஜாய் எல்லாம் விநியோகம் செய்து, அவர்கள் மனத்தைக் கவர்ந்தது. இம்முறை அந்தக் கட்சி, வாக்காளர்களுக்குக் குளிர்பானங்கள் வழங்கி உபசரித்தாலும் உபசரிக்கலாம்! குளிர்பானங்கள் தயாரிப்பாளர்களும், இந்தப் பானங்களை நன்கொடையாக சப்ளை செய்தாலும், நாம் ஆச்சரியப்படுவதற்இல்லை. எல்லாம் ஆதாயத்துக்குத்தான். அந்த அரசியல் கட்சியைக் கைக்குள் போட்டுக்கொண்டதாகி விடுமே! பின்னால் அறுவடை செய்யலாமே!

முன்பெல்லாம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் இரண்டு, மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து தொலைக் காட்சியில் திரைப் படங்கள் காண்பிக்கப்படும் என்பதில் பலருக்கு, குறிப்பாக இல்லத்தரசிகள் குழந்தைகளுக்கு ஒரு தனி உற்சாகம் இருந்தது. ஆனால், இப்பொழுதோ தில்லியில் வீட்டுக்கு வீடு வீடியோ, கேபிள் டீ.வி! தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்பும் திரைப்படங்கள் யாருக்குப் பிடிக்கிறது? அதனால் தேர்தல், பரபரப்பு ஏதும் உண்டாக்கவில்லை. 'தங் ஆகயா' (இம்சை வந்துருச்சி) என்று அலுத்துக் கொள்ளத்தான் வைக்கிறது.

அப்படியானால், தில்லிவாசிகள் ''ராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?'' என்று மெத்தனமாக இருந்து விடுவார்கள் என்று முடிவு கட்டாதீர்கள்! 'ராமன்' ஆள்வதனால் உண்டாகப் போகும் விளைவுகளைப் பற்றித் தில்லிவாசிகள் நன்கு அறிவார்கள். சமீபத்தில், அதாவது ஏப்ரல் 4 ஆம் தேதி தில்லி போட் கிளப்பில் நடந்த 'அயோத்தி செல்வோம், கோவில் கட்டுவோம்' பேரணியின் சமயத்தில், தில்லியை நோக்கியும், தில்லியிலிருந்தும் ரயில்களிலும், பஸ்களிலும் பயணம் செய்தவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. அதில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்ட அனைவரும் பாரதீய ஜனதா கட்சிக்கு நிச்சயமாக வோட்டுப் போடக் கூடாது என்று சபதமே எடுத்துக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் இது, ஒரு சாராரின் நிலைதான். அன்றைய பேரணியில் காவி உடைச் சாமியார்கள், பிரபல பின்னணிப் பாடகர்கள், பக்த கோடிகள் மற்றும் அரசியல் வாதிகள் அனைவரும் கோஷ்டி சேர்ந்து செய்த பஜனையைக் கண்ட, கேள்விப்பட்ட அரசாங்க ஊழியர்கள், நிச்சயம் பாரதீய ஜனதா கட்சிக்கே தங்கள் வோட்டுக்களை வழங்குவதாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கவும் வாய்ப்பிருக்கிறது! காரணம், எப்படியும் அரசாங்க அலுவலர்கள் ஆபீசில் பஜனை பண்ணத்தான் போகிறார்கள். பி. ஜே. பி.

ரமாமணி சுந்தர்

ஆட்சிக்கு வந்தால், இவர்கள் செய்யும் பஜனைக்கு ஒரு தனி அந்தஸ்து வந்து விடாதா என்ன!

தில்லியில் அரசு அலுவலகங்கள் உள்ள எல்லாப் பகுதிகளிலும், மதிய இடைவேளையில் திறந்தவெளியில் முப்பது, நாற்பது பேர்களாகக் கூடி ராமாயணக் கதை கேட்பது வழக்கம். பி. ஜே. பி. ஆட்சிக்கு வந்தால், இந்த ராம பக்தர்கள் இப்படி வெயிலிலும், மழையிலும் திறந்தவெளியில் உட்கார்ந்து ராமாயணம் கேட்க வேண்டிய தில்லை. இப்படிப்பட்ட உபன்யாசங்கள் நடத்துவதற்கென்று எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் பஜனை மண்டபங்கள் கட்டப்படலாம். இராமாயணக் கதை சொல்பவருக்கு சிறப்புப் படி என்று கூட ஏதாவது வழங்கப்படலாமே!

இது மட்டுமா? ஏப்ரல் 4ஆம் தேதி 'மந்திர் கட்டுவோம்' பேரணியில் பங்கு கொண்ட லட்சக்கணக்கான ராம பக்தர்களுக்கு, இல்லத்தரசிகள் எல்லோரும் பூரி - கிழங்கு பார்சல் தயாரித்து பக்தி சிரத்தையாக விநியோகம் செய்தார்கள். இப் பெண்மணிகளுக்கு, பூரிக் கடை வைத்து வியாபாரம் செய்வதற்கு, இப் பேரணி நல்ல பயிற்சியாக அமைந்தது என்றால் மிகையே இல்லை. இந்த நிலையில் பி. ஜே. பி. தனது தேர்தல் அறிக்கையில் மாதர் நலனுக்காக அறிவித்துள்ள பல திட்டங்களில் 'பூரி வியாபாரம் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு' என்பதையும் இனி சேர்த்தாலும் சேர்த்துக் கொள்ளலாம்!

ஆனால், ரதயாத்திரை புகழ் அத்வானி ஆட்சிக்கு வந்தால் ஓர் அபாயமும் இருக்கிறது. பெட்ரோல் சேமிப்பு என்று சொல்லி, மந்திரிகள், அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளை கார்களுக்கு பதில் குதிரைகள் இழுக்கும் ரதங்களில் அலுவலகத்திற்கு வரும்படி அரசு உத்தரவு பிறப்பிக்கலாம்!

சென்ற ஆண்டு, மண்டல் அறிக்கையை எதிர்த்து, மாணவர்கள் செய்த கிளர்ச்சி, தில்லியை ஒரு கலக்குக் கலக்கியது. அதனால் பல தில்லிவாசிகள், குறிப்பாக மாணவர் சமுதாயம் வி. பி. சிங்கின் ஜனதா தளத்தின் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கமாட்டார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் மண்டல் போராட்டங்களினால் ஆதாயம் அடைந்த மாணவர்களும், அலுவலர்களும் இதற்கு நேர்மாறாகவும் நினைக்கக் கூடும்! மண்டல் போராட்டங்கள், இரண்டு



மாதங்களுக்கு மாணவர்கள் புத்தகங்களை மூட்டை கட்டி வைக்க உதவின; கல்லூரிகளில் அட்டென்டென்ஸ் குறைவாக உள்ளவர்களை மன்னித்தல், பல்கலைக் கழகத் தேர்வுகள் ஒத்திவைப்பு போன்ற ஏராளமான போனஸ்கள் வேறு! அலுவலகங்களிலும் எந்த வேலை நடக்கவில்லை என்றாலும் அதற்கு மண்டல் போராட்டங்கள் நல்ல சாக்காகக் கைகொடுத்தன! இவைகளைத் தவிர வி. பி. சிங்கின் ஆட்சிக் காலத்தில் தில்லி வாசிகள் அனுபவித்த 'பந்த்'கள் வேறு அவருக்குச் சாதகமாகத் துணை நிற்கின்றன!

அடுத்து, சந்திரசேகர் - தேவிலாலின் சமாஜ்வாதி ஜனதா கட்சி. இத் தலைவர்களுக்கென்றும் சில விசிறிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். 'சாக்லேட்' முகங்களையே பார்த்துப் பார்த்து அலுத்துப் போன மக்கள், தாடியும் தார்ப்பாக்கக்கட்டு வேட்டியுமாகப் பவனி வரும், இந்தத் தலைவர்கள்தான், இந்நாட்டு மக்களின் குறிப்பாக கிராமப்புற மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று கருதுகிறார்கள். இல்லையென்றால், ''இந் நாட்டின் எண்பது கோடி மக்களும் அழகிய முகங்களைப் பார்த்து பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை'' என்று சந்திரசேகரே சமீபத்தில் குறிப்பிட்டிருப்பாரா என்ன!

ஆனால் இப்படியே போனால், சந்திரசேகர் - தேவிலால் ஜோடி, தில்லியைக் கிராமமாகவே மாற்றி அமைத்து விடலாம் என்று, மேற்கத்திய மோகம் கொண்ட தில்லி வாசிகளுக்கு - குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு - உள்ளூர ஒரே பயம்! ஏற்கெனவே தேவிலாலின் மகிமையால் சில அரசாங்க நட்சத்திர ஹோட்டல்களில் கிராம வாசிகளுக்குக் கட்டணச் சலுகை உள்ளது. தில்லி அசோகா ஹோட்டலின் ஒரு பகுதியைச் சார்பாய், மோடா, ஹுக்கா, மாட்டுத் தொழுவம், களிமண் பூசிய தரை என்று கிராமமாக மாற்றி அமைத்தாகி விட்டது. தேவிலாலையும், சந்திரசேகரையும் தொடர விட்டால், வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததற்கு நேர்மாறாக, ஆண்களுக்கு வேட்டி, ஜிப்பா, செருப்பு பெண்களுக்குப் புடைவை அல்லது சல்வார் கமீஸ் என்று ஹோட்டல்களில், கிளப்புகளில் நுழைவதற்குப் புதிய உடை நெறிமுறைகளை அறிவித்துவிடுவார்களோ என்கிற பயம்! இதனால், மினி, மைக்ரோ மினி நங்கைகளும், தொளதொளா பாண்ட், குண்டு ஷூ வாலிபர்களும் தேவிலால் - சந்திரசேகர் கட்சிக்கு வோட்டுப் போட மாட்டார்கள் என்று திட்டவட்டமாகவே சொல்லலாம்!

தில்லியிலுள்ள ஆயிரக்கணக்கான 'வியசான் ஆபீசர்கள்' என்ற தொழில்



தரகர்கள்கண்டிப்பாகச்சந்திரசேகர்கட்சிக்கு வாக்களிக்க மாட்டார்கள். தொழிலகங்களின் வலது கையாக விளங்கும் இவர்களின் தலையாய வேலையே அரசாங்க உயர் அதிகாரிகள், மந்திரிகள் குடும்பத்தினரின் (அவர்கள் வீட்டு நாய் உட்பட) பிறந்த நாட்களை நினைவு வைத்துக் கொண்டு, வாழ்த்துடன் கேக் வழங்குவதும் அவர்கள் வெளியூர்களுக்குச் செல்லும் பொழுதும், திரும்பும் பொழுதும் விமான நிலையத்திற்குப் பூச்செண்டுடன் சென்று அவர்களைக் 'காக்காய் பிடிப்பதும்' (இப்படி இவர்கள் காக்காய் பிடித்துப் பிடித்தே, தில்லியில் காக்காய்களே கண்களுக்குத் தென்படுவதில்லை)தான். இந்த நிலையில், சந்திரசேகர் ஆட்சியில் நிர்வாகம் என்பதே இல்லாமல் போய் விட்டதால், இந்த 'லியசான்' ஆபீசர்களின் பாடு ரொம்ப திண்டாட்டமாகப் போய் விட்டது.

ஏற்கெனவே அரசாங்கத்தில் கோப்புகள் எளிதில் நகராது. சந்திரசேகர் ஆட்சியிலோ, என்ன காக்காய் பிடித்தும் அதிகாரிகள் எந்த விஷயத்திலும் அசைந்து கொடுக்கவில்லை. மந்திரிகள்மாறிக்கொண்டிருந்ததால், கடந்த ஓராண்டு காலமாக, இவர்களின் 'காக்காய் பிடித்தல்' விழலுக்கு இறைத்த நீராகவே வீணாகப் போய் விட்டது. அதனால் இந்த லியசான் ஆபீசர்கள், நிலையான ஆட்சி' எப்பொழுது வரும், எப்பொழுது காக்காய் பிடிக்க ஆரம்பிக்கலாம் என்று பூச்செண்டுகளுடன் காத்திருக்கிறார்கள். அப்புறம் எப்படி சந்திரசேகரை இவர்கள் ஆதரிப்பார்கள்!

அதனால்இந்தத்தொழில்தரகர்களும்'தங் ஆகயா' என்று தேர்தலைக் குறித்து அலுத்துக் கொள்ளும் பல தில்லிவாசிகளும் ''ஸ்திரமான அரசு வழங்குவோம்'' என்று தாரக மந்திரம் ஓதும் காங்கிரசுக்கே தங்கள் வாக்குகளை வழங்குவார்களோ என்றால் அப்படியும்எண்ணுவதற்கில்லை. காரணம், தமது ஆட்சிக் காலத்தில் 36 முறை மந்திரி சபை மாற்றங்கள், பொழுது விடிந்து எழுந்தால் முதல்வர்கள் கவர்னர்களின் பதவி நீக்கம், அரசு அதிகாரிகளின் மாற்றம் என்று சாதனை புரிந்த ராஜீவ் காந்தி அரசை நிலையான அரசு என்று ராஜீவ் காந்தி வேணுமானால் கருதலாமே தவிர, 'எந்த மந்திரி அல்லது அதிகாரி நிலைத்திருப்பார்; யாரிடம் போனால் நம் காரியம் நடக்கும்'' என்று காத்துக்கிடக்கும் லியசான் ஆபீசர்கள் அதனை நிலையான அரசாகக் கருத மாட்டார்கள்.

ஆக, தில்லி வாக்குகள் யாருக்கு என்று சொல்ல முடியாதபடி ஒரே குழப்பமான நிலைதான். இதனால்தான் நமது மக்களுக்கு 'அரசியல் முதிர்ச்சி' போதாது என்று பொதுவான ஒரு கருத்து நிலவுகிறதோ என்னவோ!

வட்டமேஜை

வோட்டுப் போடுவதற்கு முன் படிக்க வேண்டிய சிறுகதை...

* கிரெடிட் கார்டின், கிரெடிட் மற்றும் டிஸ்கிரெடிட் ஆகியவற்றை விலாவாரியாக எடுத்துக் கூறி, நடுத்தர மக்களுக்கு, 'கிரெடிட் கார்ட் வசதியா? வேதனையா?' என்ற தலைப்பில் பயன்தரும் கட்டுரை ஒன்றை வெளியிட்டுப் பாராட்டைப் பெற்றுக் கொண்டு விட்டீர்கள்.

திருப்பரங்குன்றம்,
டி. கே. சுப்பிரமணியன்.

* கழைக்கூத்துக் கூட்டத்தில் யுவதியாகக் கலந்து, வளர்ந்து, ஒருவனைக் கரம்பிடித்து, குழந்தை லல்லியையும் பெற்று, அங்கேயே விட்டு விட்டு, மீண்டும் தமது சொந்த ஊருக்கே சென்று விட்ட ராதாபாயின் நிஜக்கதையும், இதய நோயுடன் போராடி, குழந்தையை ஈன்ற வனஜாவின் நிஜக் கதையும் நெஞ்சில் ஆழப் பதிந்த கதைகள்.

நெய்வேலி - 3, ப. உத்தண்டராமன்.

* பிரதம கணக்காயரை - கட்சி அரசிய லுக்கு அப்பாற்பட்டவரை - தங்கள் கட்சி யில் சேர்த்துக் கொண்டு, நல்ல மரபுகளை மண்ணிலே புரட்டிய பி. ஜே. பி.க்கு, சேஷனை இ. காங்கிரஸின் கையாள் என வர்ணிக்க அருகதை இல்லை என்று அடித்துச் சொன்ன தலையங்க வரிகளை வெட்டி எடுத்து, பி. ஜே. பி. தலைவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

வேலாயுதம்பாளையம்,
எம். குணசேகரன்.

* தாமரைச் சின்னம் பற்றிய விவகாரத்தில் இ. காங்கிரசும் பாரதீய ஜனதாக் கட்சியும் அடித்த கூத்துக்களை 'அரசியல் நோக்கில் நடந்த கலாட்டா நாடகம்' என்று தலையங்கத்தில் கூறிய ஒற்றை வரியின் மூலம் நெத்தியடியாக அடித்து விட்டது வெகு ஜோர்!

கும்பகோணம், எஸ். மங்களம்.

* 'பெட்டிக் கடை பங்காருவின் தேர்தல் பயங்கள்' - சிரிக்க வைக்கும் கட்டுரை மட்டு மல்ல; நாட்டின் நிலைமையை எண்ணிச் சிந்திக்க வைக்கும் கட்டுரை.

மகிழஞ்சேரி, கே. கணேசன்.

* 'இலவச சாராயத் திட்டம்' சிறுகதை மூலம், வோட்டு வங்கியை மனத்தில் கொண்டு, பொருளாதாரத்தைச் சீருலைக்கும் நமது அரசியல்வாதிகளின் அரைவேக்காட்டுத் திட்டங்களை அழகாகச் சாடியுள்ளார் கதாசிரியர். தேர்தலில் வோட் டுப் போடு முன்பு வாக்காளர்கள் இச் சிறுகதையை ஒரு முறை படித்து விட்டுச் சென்றால் நமது தேசத்தின் தலைவிதி நிச்சயம் மாற்றப்பட்டு விடும்.

சென்னை - 13, தக்கோலம் புகாரி.

* பாலஸ்தீனம் பற்றிய கட்டுரை ரொம்பவும் பயனுள்ளது. எனக்கு வயது 59. ரொம்ப நாட்களாகவே இந்தப் பிரச்னை பற்றிப் புரியாமல் இருந்த நான், இந்தக் கட்டுரையைப் படித்தவுடன்தான் தெளிவு பெற்றேன்.

சென்னை - 15, கே. ஜி. ஆதிகேசவன்.

* "யாருக்கு வோட்டு?" - என்ற மாணவர்களின் மணியான கட்டுரைகள் எல்லாக் கோணங்களிலும் நின்று பார்க்கப் பட்ட தெளிவான பார்வை!

மருதூர், சித. கருணாநிதி.

* 'கிரெடிட் கார்ட்' கட்டுரையில் கான் கார்ட் பற்றி, செய்திகளுக்குச் சில விளக்கங்கள்: 'கான் கார்ட்' வைத்திருப்பவர்கள் அதை ஆண்டுதோறும் புதுப்பிப்பதற்காகக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. வெளியூர்களுக்குச் செல்லும் போது, அங்குள்ள கனரா வங்கிக் கிளைகள் தவிர, சிண்டிகேட் வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, யூனியன் வங்கி, இந்தியன் வங்கி ஆகிய வற்றிலும் பணமாக ஆயிரம் ரூபாய் வரை வாங்கிக் கொள்ளலாம். (இதை அதிகப்படுத்தும் யோசனையும் உள்ளது) எங்கள் கார்டை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்க ளிடமிருந்து 1.76 சதவிகிதத்திலிருந்து ஐந்து சதம் வரை கமிஷன் பெற்றுக் கொள்கிறோம்.

சென்னை - 18, எஸ். வேதாந்த மூர்த்தி,
கனரா வங்கி.

* ஆசிரியர் பக்கத்தில் 'ரெவின்யூ' ஸ்டாம்பு ஒட்டுவது சம்பந்தமாக எழுதி இருக்கிறீர்கள். ஸ்டாம்புகளை ரசீதில் ஒட்டி, 'கான்ஸல்' செய்து சமாளிக்கலாம். கையெழுத்துக்காகச் சம்பந்தப்பட்ட நபர்களைத் தேடிச் செல்ல அவசியம் இல்லை. இது ஒருபுறமிருக்க, ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டுவ தனால் அரசாங்கத்திற்கு எந்த உபயோகமு மில்லை. இப்படி கிடைக்கும் வருவாய் அந்த ஸ்டாம்புகள் தயாரிப்பதிலேயே செலவு செய்யப்பட்டு விடுகிறது. லாபம் ஒன்றும் இல்லை. எனவே குறைந்தபட்ச ரெவின்யூ ஸ்டாம்ப் மதிப்பை இருபதுபைசாவிலிருந்து ரூபாய் 2/ ஆக உயர்த்தி, அதே சமயம் அது ஒட்ட வேண்டிய ரசீது அல்லது பத்திரத்தின் மதிப்பை ரூ. இருப திலிருந்து ரூ. 2000/- ஆக உயர்த்தினால், குறைந்த செலவில் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புண்டு.

சென்னை - 17, ஆர். சங்கர நாராயணன்.



கற்பூர முல்லை

இயக்குனர் பாஸில் அவர்களுக்கு ஒரு ரசிகனின் கடிதம்.

'வழக்கமாகத் தங்கள் படங்களில் தமிழ் சினிமாத்தனம் இடம்பெறுவதில்லை; 'மசாலா'க்களுக்கு வழிவிட மாட்டீர்கள்; கனமான விஷயங்களை நிச்சயம் எதிர் பார்க்க முடியும்' என்கிற நம்பிக்கையோடு 'கற்பூர முல்லை'யைக் காணச் சென்ற போது, முதல் அரை மணி நேரம் அதில் இடம்பெற்ற அமலா சம்பந்தப்பட்ட அறி முகக் காட்சிகள், சற்று அதிர்ச்சியையே அளித்தன.

என்றாலும், தன் பிறப்பின் பின்னணியில் உள்ள மர்மத்தையும் தன் பெற்றோர் யார் என்பதையும் கண்டுபிடித்து அவர்களை முன்னால் கொண்டு வந்து நிறுத்துவதாக ராஜாவிடம் அமலா சவால் விடுவதைத் தொடர்ந்து, உலகப் புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகியின் மகள்தான் அமலா என்பது வெளியாவதையொட்டி, எஸ்கலேட்டரில் மேலேறி வரும் ஸ்ரீவித்யா வின் அறிமுகத்தோடு மனித உறவுகளின் சிக்கல்களும் அவற்றையொட்டிய உணர்ச்சிப் போராட்டங்களும் இடம் பெற்றுக் கனம் கூடிவிடுகிறது.

அமலா தன் மகள்தான் என்று தெரிய வருவதன் காரணமாக விளையக்கூடிய சிக்கல்களையெண்ணி, அதை வெளியிட மறுத்து, அதன் காரணமாக ஏற்படும் மன உளைச் சல்களை அப்படியே உள்ளுக்குள் விழுங்கி, வெளியே கம்பீரமாக நிமிர்ந்து நின்று, எதையும் விட்டுக் கொடுக்காமல் பேசுவதில் ஸ்ரீவித்யா ஒரு எல்லையைத் தொடு கிறார் என்றால் -

அந்தவொரு காரணத்துக்காகவே அவருடைய முகத் திரையைக் கிழித்து எறிய முனைவதில் அமலா காட்டும் ஆக்ரோஷமும் மற்றொரு எல்லையைத் தொடுகின்றன.

தாய் - மகள் சந்திப்பின் ஒவ்வொரு கட்டமுமே ஒரு சவாலாக விளங்கி, படிப்படியாக உறைபனி உருகித் தாய்ப்பாசம் பெருக்கெடுத்தோடத் தொடங்கும் நிகழ்ச்சிகளை நயமாக அமைத்திருக்கிறீர்கள்.

இளையராஜாவின் தயாரிப்பு என்பதற்காக இஷ்டப்படி பாடல்கள் இடம்பெறவில்லை. அளவாக, கச்சிதமாக, இனிமையாக நாலே நாலு பாடல்கள் + ஒரு கீர்த்தனை.


முடிவுப் பகுதியில், ஸ்ரீவித்யாவின் சார்பில் அவருடைய தொழிலகங்களையும் இதர நிகழ்ச்சிகளையும் நிர்வகித்து வருகிற அந்த நாலு பேரும், அமலா அவருடைய மகள் என்பது வெளிப்பட்டு விட்டால் தாங்கள் ஆண்டு அனுபவித்து வரும் சொத்து - சுகம் எல்லாமே கை விட்டுப் போய் விடும் என்கிற காரணத்துக்காக ஸ்ரீவித்யாவைக் கொலை செய்து விடுவதும், அதனால் பொங்கியெழும் அமலா, அந்த நால்வரையும் சுட்டுக் கொன்று விடுவதும் வேறு ரகப் படங்களுக்குப் பொருந்தக்கூடியவை. இதற்கு" ஊகூம்!

இதையேன் கவனிக்க'.மல் . விட்டு விட்டீர்கள்?

இப்படிக்கு, ரசிகன்.


-சி. ஆர். கே.

பஞ்சாப் தேர்தலில் இப்படி



எல்லாம் நடக்குமா?

விஜய நிகில்



ஆகாசத் தாமரை

18

போன் ஒலித்தது.சந்தியா எடுத்தாள். ''சந்தியா.''

''நான்தான் 'ஆன்ட்டி' பேசுகிறேன், மிஸஸ் சாவ்லா. உடனே வர முடியுமா?''

அவள் குரல் நடுங்கியது.

''என்ன ஆன்ட்டி, என்ன ஆகி விட்டது?''

''உடனே வா.''

மூர்த்தி கேட்டார்: ''யாரு?''

''மிஸஸ் சாவ்லா... ஏதோ 'ப்ராப்ளம்' மாதிரி தெரியறது.''

''நானும் வரேன்.''

''நீங்க எதுக்கப்பா?''

''சாவ்லாவைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. நானும் வரேன்.''

அவர்கள் சாவ்லாவின் வீட்டைப் போய் அடைந்ததும் வேலைக்காரன் கதவைத் திறந்தான்.

மிஸஸ் சாவ்லா இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள். அவள் சந்தியாவைக் கண்டதும் எழுந்து வந்து கட்டிக் கொண்டாள். கண்களில் நீர்த்திரை.

''என்ன 'ஆன்ட்டி'? என்ன பிரச்னை?''

''ஓயாமல் 'ஃபோனில்' பயமுறுத்துகிறார்கள். இடத்தை விற்காவிட்டால் சித்திரவதை செய்வார்களாம். இவரோ எல்லாரையும் சுட்டுத் தள்ளி விடுகிறேன் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார். வயதான காலத்தில் எங்களுக்கு எதற்காக இந்தத் தொல்லை?''

மிஸஸ் சாவ்லா பயந்து போயிருக்கின்றாள் என்று நன்றாகத் தெரிந்தது.

''யார் பயமுறுத்துகிறார்கள்?''

''யாருக்குத் தெரியும்? போலீசுக்குச் சொன்னோம். 'ரியல் எஸ்டேட்'காரர்களுடைய குண்டாக்களாக இருக்கலாமென்ற எங்கள் சந்தேகத்தையும் சொன்னோம். ஒரு நடவடிக்கையையும் அவர்கள் எடுக்க முன் வருவதாகத் தெரியவில்லை.''

''இது எத்தனை நாட்களாக நடக்கிறது?'' என்றார் மூர்த்தி.

''நாலைந்து நாட்களாய். இன்று காலை வீட்டின் பின்புறத்தை ஒரே அசுத்தம் செய்திருக்கிறார்கள். ஒரே நாற்றம். 'அங்கிள்' போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், பொது மக்களுக்குப் பாதுகாப்புத் தராத காவல் நிலையம் எதற்கென்று அங்கிருப்பவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளப் போகிறாராம். துப்பாக்கியைச் சுத்தம் செய்து, குண்டு களை நிரப்பி வைத்திருக்கிறா ர். எனக்கு ஒரே பயமாக இருக்கிறது'' என்றாள் மிஸஸ் சாவ்லா.

''வினோத் எங்கே?'' என்றார் மூர்த்தி.

''உள்ளே இருக்கிறார்'' என்றாள் மிஸஸ் சாவ்லா.

இதற்குள் வினோத்குமார் சாவ்லா, கையில் துப்பாக்கியுடன் அங்கே வந்தார்.

''வினோத், உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?'' என்று கேட்டார் மூர்த்தி.

''இந்த நாட்டில், இப்பொழுதிருக்கிற சூழ்நிலையில் இந்தத் துப்பாக்கிதான் தர்மத்தை நிலைநாட்டும் கருவி.''

''நீ போய் போலீஸ்காரர்களைச் சுட்டு விட்டாயானால், நாட்டில் ''தர்மம் ஸ்தாபனம் ஆகி விடுமா? ரிவால்வரை என்னிடம் கொடு'' என்று சொல்லிக் கொண்டே துப்பாக்கியை அவர் கையிலிருந்து வாங்கினார் மூர்த்தி.

சாவ்லா கண்களை மூடிக் கொண்டு பேசாமல் நின்றார். அவர் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையிலிருக்கிறார் என்று சந்தியாவுக்குப் புரிந்தது.

''இப்படி உட்கார்'' என்று சாவ்லாவை தோள்களைப் பிடித்து உட்கார வைத்தார் மூர்த்தி.

''தேநீர் கொண்டு வருகிறேன்'' என்றாள் மிஸஸ் சாவ்லா.

''இல்லை 'ஆன்ட்டி', நீங்கள் உட்காருங்கள். நான் கொண்டு வருகிறேன்,'' என்று உள்ளே போனாள் சந்தியா.

''சந்தியா இந்த இடத்தைக் கேட்டிராவிட்டால், ஒருவேளை இவ்வளவு பிடிவாதமாக இருந்திருக்க மாட்டாரோ என்னவோ?'' என்றாள் சாவ்லாவின் மனைவி.

''டோண்ட் பி ஸில்லி..'. குண்டாயிஸத்துக்கு அடிபணிய வேண்டுமென்கிறாயா?'' என்று சீறினார் சாவ்லா.

''எனக்குந்தான் ரத்தம் கொதிக்கிறது பல சமயங்களில். நம்மால் என்ன பண்ண

இந்திரா பார்த்தசாரதி

முடியுமென்கிறாய்? சந்தியா வாழ்க்கையை 'ரொமாண்டிஸைஸ்' செய்து, சமூக சீரமைப் புத் திட்டம் அது, இது என்று என்னன்னவோ கனவு காண்கிறாள். அவளுடைய அந்த ரங்கப் பிரச்னைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள அவள் காணும் வழிகளில் இதுவு மொன்று. பாபி சொல்வது சரிதான், இந்த இடத்தை விற்றுத் தொலைத்து விடு...'' என்றார் மூர்த்தி.

''சரணடைந்து விடு' என்கிறாய், அப்ப டித்தானே? ஒரு ராணுவ வீரனிடமிருந்து இந்த யோசனையை நான் எதிர்பார்க்க வில்லை. குடிப்பழக்கம் உன் மூளையை மழுங்க டித்து விட்டது,'' என்றார் சாவ்லா கோபமாகச் சிரித்துக் கொண்டே.

சந்தியா தேநீர் கொண்டு வந்தாள்.

''சந்தியா, உன்னால்தான் வினோத்துக்குப் பிரச்னை'' என்றார் மூர்த்தி.

சந்தியா தேநீர் கோப்பையைச் சாவ்லா விடம் கொடுத்துக் கொண்டிருந்தவள், ஆச்ச ரியத்துடன் மூர்த்தியைத் திரும்பிப் பார்த் தாள்.

''அவன் உளறுகிறான்'' என்றார் சாவ்லா.

''நீ உன்னுடைய சமூகநலத் திட்டத்துக்கு இந்த இடத்தைக் கேட்காமலிருந்திருந்தால், வினோத்துக்கு இப்பொழுது இந்தப் பிரச் னை ஏற்பட்டிருக்காது,'' என்றார் மூர்த்தி.

''அவர்களுடைய மிரட்டலுக்கு அடிபணிய வேண்டுமென்கிறீர்களா?'' என்றாள் சந்தியா.

''அதைத்தான் நானும் கேட்கிறேன்'' என்றார் சாவ்லா.

''நம்முடைய அரசியல் ஒழுக்கக்கேடும், சமூக ஒழுக்கக்கேடும், திரும்பி மீள முடியாத அளவுக்கு ஓர் எல்லைக் கோட்டை அடைந்து விட்டது. மந்திரியிடம் பேசப் போனாய், என்ன ஆயிற்று? நீ தைரியமான பெண், கன் னத்திலறைந்து விட்டுத் திரும்பி வந்தாய்; ஆனால் பிரச்னை தீர்ந்து விட்டதா?'' என்றார் மூர்த்தி.

''வாட்...? இதை நீ என்னிடம் சொல்லவே இல்லையே?'' என்றார் சாவ்லா சந்தியா விடம்.

''அந்த அறையை அவர் என்னிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். இதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் சந்தியா.

''என் துப்பாக்கிக்கு இரை வேண்டும்'' என்றார் சாவ்லா.

''உன் துப்பாக்கிக்கு மட்டுமல்ல, என் துப்பாக்கிக்கும் கூட.. சந்தியாவை விரும்பு வதாகக் கூறி விட்டு, பிறகு ஓர் ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, அவளையும் வீட்டுக்கு அனுப்பி விட்டான், பணத் திமிர் படைத்த ஓர் இளைஞன்... அவன்தான் என் இலக்கு,'' என்றார் மூர்த்தி.





''டெபாஸிட் பணத்தைக் கட்டறதுக்கு முன்னாடி வேட்பாளர் பணத்தை உத்து உத்துப் பார்த்தாரே... ஏன்?''

''மறுபடி பார்க்க முடியுமோ... முடியாதோன்னுதான்!''

— வேதபுரி. எஸ். இரமேஷ்.

சந்தியா மூர்த்தியைக் கோபமாகப் பார்த்தாள்.

''யார் அந்த அயோக்கியன்? என் சந்தியாவை வேண்டாமென்று ஒருவனால் சொல்ல முடியுமென்றால், அவன் பைத்தியமாகத்தானிருக்க வேண்டும்...'' என்றார் சாவ்லா.

''அவன் பைத்தியந்தான். மேதை என்ற போர்வை போர்த்திக் கொண்டு திரிகிறான்'' என்றார் மூர்த்தி.

''யாரவன் சந்தியா?'' என்றார் சாவ்லா.

''இது இப்பொழுது நம்முடைய பிரச்னை இல்லை. உங்களுக்கு இப்பொழுது பாதுகாப்புத் தேவை. அதை என்னால் தர முடியும். போராட்டத்தின் அடுத்த கட்டம், சம்பந்தப்பட்ட அமைச்சர் வீட்டின் முன்னால் 'தர்ணா' செய்யப் போகிறோம். கைது செய்யச் செய்ய நாளுக்கு நாள், 'தர்ணா' செய்யப் போகின்றவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகும். அதற்கெல்லாம் திட்டம் வகுத்தாகி விட்டது. பத்திரிகைகளில் பலர் இப் பிரச்னையைப் பற்றி எழுதப் போகிறார்கள். இதனால் நான் உங்களை வேண்டிக் கொள்வது என்னவென்றால், நீங்கள் யாரையும் தனிப்பட்ட முறையில் சென்று கூட வேண்டிய அவசியமில்லை'' என்றாள் சந்தியா.

''இந்தப் பத்திரிகைக்காரர்களைப் பற்றி யாருக்குத் தெரியாது? அவர்கள் ஏலப் பொருள்கள், அதிக விலை கொடுக்கின்றவன் அவர்களைப் பெறுகிறான்,'' என்றார் மூர்த்தி.

''எல்லாரும் அப்படியில்லை,'' என்றாள் சந்தியா.

''சந்தியா, நான் உனக்கு ஒன்று சொல்லலாமா?'' என்று கேட்டாள் மிஸஸ் சாவ்லா.

''என்ன 'ஆன்ட்டி'?''

''நீ உங்கப்பாவுக்கு ஒரே பெண். சீரழிந்து போய் விட்ட இச் சமூகத்தைச் சீர் திருத்துவது என்பது இயலாத காரியம். பேசாமல் திருமணம் செய்து கொண்டு, நிம்மதியாக இருக்காமல், நீ ஏன் அநாவசியமாக வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறாய்?''

சந்தியா பதில் கூறவில்லை. புன்னகை செய்தாள்.

''நான் சொல்வது உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டாள் மிஸஸ் சாவ்லா.

''நான் விரும்பக்கூடிய ஆண் மகன் இன்னும் பிறக்கவில்லை, 'ஆன்ட்டி'...'' என்றாள் சந்தியா.

''மூர்த்தி இப்பொழுது சொன்னாரே, உன்னை ஒருவன் விரும்பியதாகச் சொன்னாரென்று, அவன் யார்?'' என்று கேட்டார் சாவ்லா.

''அஸோஸியேட் இன்டஸ்டிரீஸ்' நிறுவனத்தின் அதிபரான மஞ்சுளாவின் ஒரே வாரிசு...'' என்றார் மூர்த்தி.

''ஓ..! அந்தப் பெண்மணியா? அவள்பால் எனக்கு மிகவும் மரியாதை உண்டு. பெண்ணாக இருந்தும், ஆண்கள் உலகத்தில் தலைநிமிர்ந்து நிற்கும் துணிவு மிகுந்த பெண்... அவளுடைய மகனா? அவன் உன்னை விரும்பினான் என்றால் என்ன அர்த்தம்? நீ அவனை விரும்பவில்லையா? அவனுக்கு ஏன் பைத்தியம் பிடித்தது என்று இப்பொழுது புரிகிறது'' என்றார் சாவ்லா.

''இவள் விரும்பாத காரணத்தால் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் ஏற்கெனவே பைத்தியம்,'' என்றார் மூர்த்தி.

''அவர் மனச்சிக்கல் கொண்ட ஓர் இளைஞர். அவரைப் பற்றி நாம் இப்பொழுது விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.''

''நீயும் அவனை விரும்பியிருக்க வேண்டும். இதை நீ ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை'' என்றாள் மிஸஸ் சாவ்லா.

சந்தியா அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

''சந்தியா என்ன பழங்காலத்துப் பெண்ணா? அவள் ஒத்துக் கொள்ள ஏன் தயங்க வேண்டும்?'' என்றார் சாவ்லா.

''சந்தியாவும் ஒரு சிக்கலான பெண்ணாக இருக்கலாம். அப்படியில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் மிஸஸ் சாவ்லா.

''நீங்கள் அப்படி நினைக்கின்றீர்களா 'ஆன்ட்டி'?''

''படிப்பு, அழகு, அந்தஸ்து உள்ள எந்தப் பெண்ணும், அவள் சிக்கலில்லாத பெண்ணாக இருந்தால், ஒரு நல்ல பையனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்து, சந்தோஷமாக இருக்கத்தான் விரும்புவாள். ஊர்ப்

பிரச்னைகளையெல்லாம் தன் தலை மேல் போட்டுக் கொண்டு, தன் வாழ்க்கையைச் சிக்கலாக்கிக் கொள்ள விரும்ப மாட்டாள்,'' என்றாள் மிஸஸ் சாவ்லா.

மூர்த்தி கைகளைத் தட்டிக் கொண்டே, ''வெல் - ஸெட், வெல் - ஸெட்'' என்றார். பிறகு சில விநாடிகள் கழித்து, ''அப்படி அவள் தன் வாழ்க்கையைச் சிக்கலாக்கிக் கொண்டால், அதற்கு வலுவான காரணமிருக்க வேண்டும்,'' என்றார் மூர்த்தி.

''என்ன காரணம்?'' என்று சற்று கோபத்துடன் கேட்டாள் சந்தியா.

''எனக்குத் தெரியாது,'' என்றார் மூர்த்தி. அப்பொழுது வாசல் மணி ஒலித்தது.

சாவ்லா வந்தவரை எல்லாருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்: ''தேவி பிரஸாத் ஸகாய். என் பழைய நண்பன். பம்பாயிலிருக்கிறான். இவன் மகன் இங்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. எந்தத் துறையில்?'' என்று அவரையே கேட்டார் சாவ்லா.

தேவி பிரஸாத் பதில் சொல்லவில்லை. புன்னகை செய்தார்.

''நீ எத்தனை நாட்கள் இங்கு இருப்பாய்? அல்லது நிரந்தரமாகவே...''

''நாளைக்குப் போகிறேன்... உன்னிடம் நான் தனியாகப் பேச வேண்டும்'' என்றார் தேவிபிரஸாத்.

''எதைப் பற்றி? மூர்த்தி என் நெருங்கிய நண்பர். நீ பேசலாம்.''

சில விநாடிகள் தயங்கிய பிறகு, தேவி பிரஸாத் சொன்னார்: ''அரசாங்கம் 'ரியல் எஸ்டேட்'காரர்களிடமிருந்து நிலத்தை வாங்கி விட்டது. அங்கு ரஸாயனத் தொழிற்சாலை வர இருக்கிறது. உனக்குச் சொந்தமான இடம் அங்கிருக்கிறதாமே, அதையும் அரசாங்கம் வாங்கி விட இருக்கிறது. இந்தத் தகவலை என் மகன் உன்னிடம் சொல்லச் சொன்னான். ஃபோனில் சொல்ல முடியாதென்பதற்காக நேரில் வந்தேன்.''

சாவ்லா சந்தியாவைப் பார்த்தார்.

''அரசாங்கம் 'ரியல் எஸ்டேட்'காரர்களிடமிருந்து, பயங்கர விலைக்கு வாங்கியிருப்பார்கள்'' என்றாள் சந்தியா.

''நிச்சயமாக'' என்றார் தேவி பிரஸாத்.

''அப்படியானால், நான் பொதுநலத்துக்காக என் நிலத்தை விற்றுத்தான் ஆக வேண்டுமென்ற அர்த்தமா?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

''தனியார் துறை ரசாயனத் தொழிற்சாலை அமைப்பதற்காக, அரசாங்கம் 'பொது நல'மென்று நிலத்தை வாங்குவது சரிதானா?'' என்று கேட்டார் மூர்த்தி.

''அரசாங்கத்துக்கும் இத்தொழிற்சாலையில் பங்கு இருப்பதாக அறிகிறேன்.''

மிஸஸ் சாவ்லா எல்லாருக்கும் தேநீர் கொண்டு வந்தாள்.

''இப்பொழுது என்ன செய்வது?'' என்று கேட்டார் மூர்த்தி.

''போராட்டம் நடந்தே தீரும். குடியிருப்பு இடத்தில் ரஸாயனத் தொழிற்சாலை கொண்டு வருவது தவறு. சுற்றுப்புறச் சுகாதாரத்துக்கு தீங்கு ஏற்படுமென்பது உறுதி. ரஸாயனத் தொழிற்சாலை கழிவுப் பொருள்களை எப்படி அகற்றப் போகிறார்கள்?'' என்றாள் சந்தியா.

''போராட்டத்தில் நானும் கலந்து கொள்கிறேன்'' என்றார் சாவ்லா.

''உங்களால் சாத்விகப் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியுமா? யாரைச் சுடுவதென்று உங்கள் கை துருதுருத்துக் கொண்டே இருக்கிறதே?'' என்றாள் சாவ்லாவின் மனைவி.

''அங்கிள் எங்கள் போராட்டத்தில் வன்முறைக்கு இடமில்லை'' என்றாள் சந்தியா.

அப்பொழுது டெலிஃபோன் ஒலித்தது. சாவ்லா எடுத்தார். பிறகு ஃபோனைச் சந்தியாவிடம் கொடுத்துக் கொண்டே, ''உனக்கு, உன் வீட்டிலிருந்து'' என்றார்.

''உடனே புறப்பட்டு வாங்க. இங்கே போலீஸ்காரங்க வந்திருக்காங்க. பரிசோதனை செய்யணுமாம்'' என்றாள் ருசை பதற்றத்துடன்.

(தொடரும்)

''எதுக்கு நாலு தொகுதிகள்லே நிக்கறீங்க?''

''ஒண்ணுலேயாவது டெபாசிட் கிடைக்காதாங்கிற நப்பாசைதான்!''



இவளால் என்ன லாபம்?

வெள்ளிக் கிழமை.

கோயிலுக்குப் புறப்பட்ட விஜயா, ''நீங்கள் வரல்லையா?'' என்றாள்.

முகத்தில் வேப்பங்காயை அரைத்துப் பூசியவன் போல் உட்கார்ந்திருந்த வாசுதேவன், ''இல்லை'' என்றான்.

''இன்னிக்கு வெள்ளிக் கிழமை.''

''தெரியும்.''

''வாரம் தவறாமல் வருவீர்களே!''

''இன்று தலை வலிக்கிறது.''

பொய். இது தலை நோவல்ல. விஜயாவுடன் சேர்ந்து வெளியில் போகக் கூடாது என்ற வக்கிரம். மன இறுக்கம்.

அலுவல் முடிந்து வந்தது முதல் அவன் இப்படித்தான் கடுகடுவென்றிருந்தான்.

ஏதோ ஒரு நங்கூரம், அவன் இயக்கத்தைத் தடுத்திருக்கிறது.

கிளறலாமா? வேண்டாம். கோயிலுக்குப் போகும் போது வீண் சர்ச்சை. சண்டை போட்டுக் கொண்டா, சாமியிடம் போவது!

பூஜை தட்டை எடுத்துக் கொண்டு மௌனமாய் வெளியேறினாள், விஜயா.

கையில் இருந்த தினசரியைத் தூர விட்டெறிந்தான், வாசு.

அரவிந்தனும், ஆர்த்தியும் டியூஷனுக்குப் போய் இருந்தார்கள். இப்போது அவன் மட்டும் தான் வீட்டில். அதுவரை கனன்று கொண்டிருந்த நெருப்புக்கு அதுதான் சந்தர்ப்பம். கொழுந்து விட்டுப் பிழம்பாய் எரிந்தது.

'இவளால்... இந்த விஜயாவால் எனக்கு என்ன லாபம்? வாழைத் தண்டு மாதிரி வனப்பும், சிவப்பும் இருந்து என்ன செய்ய. ஒவ்வொருத்தனும் மாமனார் வீட்டிலிருந்து ஆயிரம் ஆயிரமாய்த் தொகை, ஃபிரிஜ், வாஷிங் மெஷின் என்று வகை வகையாய்ச் சீர் வாங்கிக் குவிக்கிறார்கள். ஆனால், எனக்கு வந்தவள்...?'

கணக்கு...

லௌகீகம் பற்றிய லாப நஷ்டக் கணக்கு. தாம் பத்யம் துவங்கிய பத்தாவது ஆண்டில் 'பாலன்ஸ் ஷீட்' போட்டுப் பார்த்தான், அவன்!

கொடுப்பினையும், கொள்வினையும் வீட்டுக்கு வீடு, தரத்துக்குத் தரம் வித்தியாசப்படும். அது பற்றிய கவலையே இல்லாமல்தான் இத்தனை ஆண்டுகளாகக் காலம் தள்ளி னான், வாசு.

ஆனால், இன்று.

ஆளுக்கு ஆள் சிதறுகாய் உடைத்து விட்டார்கள் அவன் நெஞ்சில்.

அலுவலகம் துவங்கி, கொஞ்ச நேரம்...

''குட்மார்னிங், வாசு. ஸ்வீட் எடுத்துக் கொள்!'' என்று ஒரு பெரிய பாலிதின் பை நிறைய சாக்லேட் கொண்டு வந்தான் பட்டாபி.

''என்ன விசேஷம்?''

''புது ஸ்கூட்டர் வாங்கி இருக்கிறேன். இன்னிக்குத்தான் ஆபீசுக்கு எடுத்து வந்தேன். வந்து பாரேன்.''

போய்ப் பார்த்தான்.

''அட்வான்ஸா?''

''அதெல்லாம் இல்லை'' என்று அலட்சியமாய்ச் சிரித்தான், பட்டாபி. ''என் மாமனார் உபயம். வீட்டுக்காரிக்கு என்னுடன் ஸ்கூட்டரில் வரணும் என்கிற ஆசை. மூணு மாசமா அப்பாவிடம் அழுது அடம் பிடித்து, எப்படியோ வாங்கிக் கொண்டு வந்து விட்டாள்!'' - உடம்பு முழுக்கப் பெருமை வழிந்தது.

''அதிர்ஷ்டசாலியப்பா, நீ. கல்யாணமாகி இத்தனை வருஷமாகியும் இன்னும் சீர் செய்கிறாரே, உன் மாமனார்.

''அவர் எங்கே செய்தார். எல்லாம் என் பார்ட்னரோட சாமர்த்தியம்.!'

அக் கணமே வாசுவின் உள்ளம் புகைய ஆரம்பித்து விட்டது. பொருமிக் கொண்டே தான் பணிகளைக் கவனித்தான்.

தமிழினியன்





— நா. ஞானமுத்து.

மதிய இடைவேளைக்குப் பிறகு, மேலும் ஓர் இடி.

''நாங்கள் குமரன் நகரில் வீடு கட்டப் போகிறோம்!'' - இமைகளைச் சிமிட்டிச் சிமிட்டித் தகவல் சொன்னான், சிவசாமி.

''அப்படியா, வெரி குட்! பேங்க் லோனா?'' என்றான் வாசு.

''பேங்க் லோனுக்கெல்லாம் நம்மால் வட்டி கட்ட முடியாதுப்பா!''

''பின்னே!''

''என்னுடைய சேம நிதியில் கம்பெனியின் பங்குத் தொகையும் சேர்ந்து அறுபதாயிரம் வந்தது. என் மனைவியின் கணக்கில் ஒரு முப்பதாயிரம். நகைகளைக் கொஞ்சம் மார்ட்கேஜ் பண்ணினேன். மொத்தம் ஒன்னே கால் லட்சத்துக்கு எஸ்டிமேட். ஏழு சதுரம். நாளைக்கு பிளான் எடுத்து வர்றேன், பாரேன்.''

சிவசாமி சொல்லச் சொல்ல, செதில் செதிலாய்த் தகர்ந்து போனான், வாசு.

சிவசாமியின் மனைவி அப்படி ஒன்றும் அதிகம் படித்தவள் அல்ல. சாதா எஸ். எஸ். எல். சி.தான். பக்கத்து அலுவலகத்தில் ஆயிரத்தைந்நூறு சம்பாதிக்கிறாள்.

ஆனால், அவனது விஜயா? சை...

இருந்திருந்தும் எனக்கு இப்படியா ஒருத்தி வாய்க்க வேண்டும். மனைவியாம் மனைவி... மண்ணாங்கட்டி..

''சார்.''

வாசலில் யாரோ கூப்பிட்டார்கள்.

எரிச்சலுடன் எட்டிப் பார்த்தான், வாசு.

குடையும், புத்தகமுமாக ஒரு பெண்.

ஆசிரியை மாதிரி இருந்தது. மாதிரி என்ன டீச்சரேதான்.

''வணக்கம், சார். நான் கான்வென்ட் ஸ்கூல் டீச்சர். ஒரு தகவல் சொல்வதற்காக வந்தேன். அரவிந்தனும், ஆர்த்தியும் உங்கள் குழந்தைகள்தானே.''

''ஆமாம், மேடம் உட்காருங்கள்!'' - மனக் குமைச்சலை ஓரம் கட்டி விட்டு, புன்னகையைப் பூசிக் கொண்டான், வாசு.

''ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இப்போது வந்திருக்கிறேன். உங்கள் மனைவி இருக்கிறார்களா?''

''கோயிலுக்குப் போய் இருக்கிறாள். பரவாயில்லை. சொல்லுங்கள்.''

''ஐந்தாம் வகுப்பில் அரவிந்தனும், நான்காம் வகுப்பில் ஆர்த்தியும் எப்போதும் முதல் ராங்கிலேயே வர்றாங்க. தெரியுமில்லையா.''

தி மயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம்:

(ஸ்தாபிதம் 1872) நெம்பர்கள்: 32 & 33, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை 600 004.

போன்: 71099
71230

கிளைகள்:

பார்க் டவுன் கிளை
207, தங்கசாலை தெரு,
சென்னை 600 003.
போன்: 563588

வண்ணாரப்பேட்டை கிளை
528, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை 600 021.
போன்: 551346

சைதாப்பேட்டை கிளை
11, ஜோன்ஸ் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை 600 015.
போன்: 442568

அமைந்தகரை கிளை
302, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
சென்னை 600 029.
போன்: 611306

அடையார் கிளை
95, பலகைவாராவதி ரோடு,
அடையார்,
சென்னை 600 020.

பங்குதாரர்களிடமிருந்து பிக்செட் டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன

6 மாதங்களுக்கு	11% வீதம் வட்டி
1 வருடத்துக்கு	12½% வீதம் வட்டி
2 வருடத்துக்கு	13½% வீதம் வட்டி
3 வருடத்துக்கு	14½% வீதம் வட்டி
5 வருடத்துக்கு	15½% வீதம் வட்டி

ரூ. 5000/-மும் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டின்மீது வட்டித் தொகை பிரதி மாதம் நேரில் வழங்கப்படும் அல்லது அவர்கள் விருப்பப்படி, அவர்களுடைய வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

மறுமுதலீடு திட்டம்

டெபாசிட் தொகை	36 மாதங்கள்	54 மாதங்கள்	72 மாதங்கள்	120 மாதங்கள்	180 மாதங்கள்
ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
500	780	1,000	1,260	2,340	5,070
1,000	1,560	2,000	2,520	4,680	10,140
5,000	7,800	10,000	12,600	23,400	50,700
10,000	15,600	20,000	25,200	46,800	1,01,400

இன்றே ரூ.757/- ஐ எங்கள் பணப் பத்திரங்களில் முதலீடு செய்து 24 மாதங்கள் கழித்து ரூ.1000/- ஐ பெற்றுக் கொள்ளுங்கள்

ரெக்கரிங் டெபாசிட்டுகள்

டெபாசிட் தொகை	மாதங்கள்					
ரூ.	12	24	36	48	60	72
10	128	275	438	620	830	1,050

3 வயதான ஒரு குழந்தையின் பேரில் டெபாசிட் செய்யப்படும் ரூ.10,000/- 180 மாதங்கள் முடிவில் ரூ.1,01,400/- ஆக பெருகும்.

மற்ற விவரங்களுக்கு செயலாளருக்கு விண்ணப்பிக்கவும்:

டி.எம். சண்முகம்
துணைத்தலைவர்

ஆர். சம்பந்தம்
ஆக்டிங் செயலாளர்

எம். கே. பாலன்
தலைவர்

* பங்குதாரர்களுக்கு மட்டும்

''புராகிரஸ் ரிப்போர்ட்டிலே பார்க்கிறேனே... ரொம்ப நன்றி!'' சிரித்தான் வாசு.

''அது மட்டும் இல்லை. எந்த க்விஸ் புரோகிராம் வைத்தாலும் ஆர்த்திக்கும், அரவிந்தனுக்கும்தான் அதிக பாயிண்ட்ஸ். சமீபத்தில் சுற்றுப்புறச் சுத்தம் பற்றி ஒரு நிகழ்ச்சி வைத்தோம். உள்ளூர்ப் பள்ளிகளுக்கான போட்டியில் உங்கள் பிள்ளைகளால்தான் எங்கள் பள்ளிக்கு ஷீல்ட் கிடைத்திருக்கிறது. அடுத்த ரவுண்ட் மாவட்டப் போட்டி. அரவிந்தனும், ஆர்த்தியும் அதில் கலந்து கொள்கிறார்கள்.''

அப்படியா. ரொம்ப சந்தோஷம்!'' - உச்சி குளிர்ந்தது, வாசுவுக்கு. நாற்காலி யில் தரிக்க மாட்டாமல் நெளிந்தான், அவன்.

அப் பெண்மணி தொடர்ந்தாள்.

''அண்ணன், தங்கை இருவருமே இது போல் ஐ.க்யூ. அமைவது அபூர்வம், சார். பொன், பொருளைத் தேடிக் கொள்ளலாம். ஆனால், அறிவு இயற்கையில் கிடைக்கும் வரப்பிரசாதம். யாருக்கும் கிடைக்காது. கிடைத்தால் அது மிகப் பெரிய 'கிப்ட்'. அத்தகைய குழந்தைகளின் பெற்றோர் என்ற முறையில் உங்களையும், உங்கள் மனைவியையும் எத்தனை பாராட்டினாலும் தகும். அப்படி பாராட்ட வேண்டியது எங்கள் கடமையும் கூட. எங்கள் பள்ளியின் சார்பிலும், ஹெட்மிஸ்ட்ரஸ் சார்பிலும் உங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்கள். நான் வர்றேன், சார்!'' - எழுந்து கொண்டாள், அவள்.

வாசு, காப்பி உபசாரம் செய்ய முயன்றான்.

''வேண்டாம்!'' என்று புன்னகையுடன், விடைபெற்றுக் கொண்டாள், அந்த ஆசிரியை.

வாசுவின் மனத்தில் புத்துணர்ச்சியும், புதிய தெம்பும் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தன.

'அட... எனது இரண்டு குழந்தைகளும் ஊர் மெச்சும் புத்திசாலிகளா! புகழுக்கும், பாராட்டுக்கும் உரிய சாதனைச் செல்வங்களா, அவர்கள். அந்த அறிவுச் சுடர்களின் மூல ஸ்தானமாய் விளங்கியது எது? விஜயாவின் மணி வயிறுதானே.. அது எத்தனை பெரிய பாக்கியம்! எவ்வளவு பெரிய பொக்கிஷம்! அதைப் புரிந்து கொள்ளாமல், 'அவளால் என்ன லாபம்' என்று மாட்டுத் தரகர் போலவா கணக்குப் போட்டுப் பார்ப்பது. சே... சே.. நான் ஒரு சர்வ முட்டாள்...'

தன்னை இகழ்ந்தவனாய் வாசலுக்கு ஓடினான், வாசு.

பூஜைத் தட்டுடன் வந்து கொண்டிருந்தாள், விஜயா.

ஜென்மம்

நிச்சயமாய் நாலைந்து தடவை உலுக்கியிருக்க வேண்டும். சிரமப்பட்டு விழித்த போது பூரணியின் முகத்தில் பதற்றத்தைப் பார்த்தேன்.

''என்னது?''

''என்னன்னு தெரியலீங்க. திடீர்னு சுஜாக்கு உடம்பு கொதிக்குது. தூக்கிப் போடுது...''

நடு இரவில் இது என்ன அவஸ்தை என்று எரிச்சல்தான் முதலில் வந்தது. திரும்பி சுஜாவைப் பார்த்தான். நெற்றியில், மார்பில், கால்களில் கை வைத்துப் பார்த்ததில் அனலடித்தது. இரண்டு, மூன்று நிமிடங்களுக்கு ஒரு முறை உடம்பு தூக்கிப் போட்டது.

''ஜுரத்துக்கு இப்ப கையில மருந்து எதுவும் இல்லையா?'' என்றான்.

''போன தடவை வாங்கினது இருக்கு...''

''அதைக் கொடுத்தியா?''

''ஊஹூம். திடீர்னு அவ அனத்தவும்... பயந்து போய்...'' ஏதோ சொல்லிக் கொண்டே போனாள்.

எழுந்தான். அலமாரியில் தேடி மருந்துப் பாட்டிலை எடுத்தான். தானே சுஜாவின் வாயில் ஒரு ஸ்பூன் விட்டான்.

''இப்ப எந்த டாக்டரையும் பார்க்க முடியாது...'' என்றான் முனகலாக.

மணி இரண்டு என்று சுவர்க்கடிகாரம் காட்டியது. விளக்கை அணைத்து விட்டான். 'ஜுரம் தொடர்ந்து இருந்தால், மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை கொடுங்க' என்று முன்பு இந்த மருந்தைக் கொடுத்த டாக்டர் சொல்லியிருந்தார்.

''...எனக்கு பயமா இருக்குங்க...'' என்றாள் பூரணி.

மறுபடியும் எரிச்சல் தலை தூக்கியது. விடிந்தால் அலுவலகம் விடுமுறை. அவனும் சங்கருமாக ஒரு ஆங்கிலப் படம் போகத் தீர்மானித்திருந்தார்கள். நிச்சயம் போக முடியாது.

பூரணி சுஜாவை நெற்றியில் கைவைத்துப் பார்த்து உதட்டைப் பிதுக்கினாள்.

''குறையலியே...''

''உடனே எப்படிக் குறையும்? பேசாம இரு...''

''என்ன ஜுரம்னு புரியலியே...''

எழுந்து பாத்ரூம் போனான். பாதித் தூக்கத்தில் எழுந்த அதிர்ச்சி, இவளின் அர்த்தமில்லாத பயம்... திரும்பிய போது, பூரணி சமயபுரம் விபூதியை சுஜாவின் நெற்றியில் இடுவது தெரிந்தது.

''நீ பேசாம படுத்துக்க...'' என்றான்.

மறுபடி ஏதாவது கேட்கப் போகிறாள்...

''சரிங்க...'' என்றாள்.

''ஒண்ணும் ஆகாதில்லே...'' என்றாள் படுத்துக் கொள்ளுமுன்.

ஏனோ அவனையும் அறியாமல் சுந்தரியின் நினைவு வந்தது. அவன் அலுவலகம்தான் அவளும். மூன்று குழந்தைகள் அவளுக்கு. பார்த்தால் தெரியாது. எப்படி உடம்பை வைத்திருக்கிறாள்! பூரணியும் இருக்கிறாளே... சுஜா ஒரே குழந்தை. பிரசவத்திற்குப் பிறகு பார்க்கச் சகிக்கவில்லை.

'ஏதோ எக்ஸர்ஸைஸ் பண்ணியிருக்கணுமாம். போவுது போங்க. குண்டா இருந்தா என்ன. நீங்க வேண்டாம்னா சொல்லப் போறீங்க...'


சொல்ல முடியாது. எப்படி முடியும். 'உனக்கு நீ; எனக்கு நான்' என்று பட்டயம் எழுதி வைத்தாகி விட்டது.

உடம்புதான் ஸ்லிம்மாக இல்லை. காரியம் செய்கிற சாமர்த்தியம்? துளிக் கூட இல்லை. மீண்டும் சுந்தரிதான் நினைவில் வந்தாள். அவள் கணவன் கிரஹப் பிரவேசப் பத்திரிகையில் பெயர் போட்டுக் கொண்ட பெருமை மட்டுந்தான். சுந்தரி என்னமாய்க் கவனித்துக் கொண்டாள்.

'கொடுத்து வச்சவர் உங்க வீட்டுக்காரர்...' என்று பாதிப் பொறாமையும் பாதி உண்மையுமாக மற்றவர்களைப் போல இவனும் பல முறை சுந்தரியிடம் சொல்லி இருக்கிறான்.

சுஜா மருந்தின் தாக்கத்தில் உடம்பு அதிர்வது நின்று தூங்கிக் கொண்டிருந்தாள். ஆனாலும் சுட்டது. காலையில் டாக்டரிடம்

ரிஷபன்



போயே தீர வேண்டும். அவர் என்ன சொல்லப் போகிறாரோ! கன்சல்டிங் ஃபீஸ் மட்டும் ஒவ்வொரு தடவையும் ஏறி விடுகிறது. ஏஸி, சுழல் நாற்காலி என்று வசதிகள் அதிகரித்து... பழகிய மனிதர் இப்போது புது மாதிரி தோற்றம் தருகிறார்.

பூரணி புரண்டு படுத்தாள். இவன் விழித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, அவன் கையைப் பற்றினாள். சில விநாடிகள் பொறுத்து உதறிக் கொண்டான்.

நினைத்திருக்கக் கூடாதுதான். ஆனாலும் நினைக்கத் தோன்றியது. இப்போது என்றில்லை. முன்பே சில நேரங்களில் அரை குறையாகத் தோன்றிய மன பிம்பம்தான். இன்று முழு வடிவமாய்... பூரணமாய்... வடிவெடுத்தது.

பூரணிக்குப் பதிலாய்... சுந்தரியை மணந்திருந்தால்... அவள் மட்டும் என் மனைவி யாக வந்து இருந்தால்....

மனச்சாட்சி மெல்ல முனகிவிட்டு ஓய்ந்தது. நினைப்பே ஒரு விதச்சுகம் தந்தது. அவனை எழுப்பியிருக்க மாட்டாள். சட்டென்று முடிவு எடுத்திருப்பாள். மருந்து கொடுத்தும் கேட்க வில்லை என்றால்தான் அவன் ஆலோசனை கேட்டிருப்பாள். அவ்வளவு ஏன்.... மாலையே ஊகித்தி ருப்பாள்... சுஜா வழக்கமான தோற்ற மில்லை. சாப்பிடப் படுத்தினாள். ஏதோ உடம்புக்கு வரப் போகிறது... முன்னெச்சரிக் கையாக டாக்டரிடம் போகலாம். இப்படி ஏதாவது...

சுஜாவைப் பார்த்துக் கொள்வது

இரண்டாம் பட்சம். பூரணியைப் பார்த்துக் கொள்ளவே ஆள் வைக்க வேண்டும். எப்போது பார்த்தாலும் ஏதாவது முனகல். 'அது முடியலை. இது முடியலை' என்று. தன்னையே ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளத் தெரியாது. எதற்கெடுத்தாலும் அவன்.... சுயமாய் எதுவும் செய்யும் சாமர்த்தியம் இன்றி...

பூரணியிடமிருந்து விலகி விஸ்தாரமாய்ப் படுத்தான். தன் குமுறலை வெளிப்படுத்தாமல் இருப்பதை அவளுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, எப்படி எல்லாம் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்கிறாள்.

நினைக்க நினைக்க பூரணி மனத்தில் மறைந்து சுந்தரி வியாபித்தாள். அடுத்த ஜென்மத்திலாவது அந்த மாதிரி ஒரு மனைவி கிடைக்கணும்.

காலையில் டாக்டரிடம் போய் வந்தாகி விட்டது.

'ஒண்ணும் இல்லே. பயப்பட வேணாம். அதே மருந்தைக் கன்டினியூ பண்ணுங்க... சரியாயிடும்...' என்று ஃபீஸை மட்டும் மறக்காமல் வாங்கிக் கொண்டார்.

இப்போது சுஜா ஜுரம் குறைந்து, கொஞ்சம் முகம் தெளிந்திருந்தாள். இவளா நேற்றிரவு பயமுறுத்தியவள் என்று தோன்றியது.

உடம்பு அசதியில் சுஜா படுத்துத்தூங்கிப் போக, பூரணி சமையலறைக் கதவை மூடிவிட்டு அவனிடம் வந்தாள்.

''நீங்க படுத்துக்குங்க. பாவம்... என்னால ராத்தூக்கம் போச்சு...'' என்றாள்.

அவன் எதுவும் பேசவில்லை. காலையின் பூரண வெளிச்சம் இரவின் மனப் பிரமைகளைத் தகர்த்து, ஒரு வித அபத்தத்தை அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது. நிகழ இயலாததை நிஜம் போல உணர்ந்து... என்னவொரு கனவு... ஏக்கம்.

தோளில் ஏதோ ஜில்லென்று பட்டது. பூரணி அழுதிருக்கிறாள். நின்ற நிலையில் கண்ணீர் சொட்டி அவன் மேல் பட்டுத் தெறித்தது.

''நீங்க மட்டும் இல்லைன்னா...'' என்றாள் பாதிப் புலம்பலாக.

என்ன சொல்கிறாள்...

''கொஞ்சம் கூட நிதானம் கலையாமே... திடமா... தைரியமா... சுஜாவுக்கு மருந்து கொடுத்து, ராக்கண் முழிச்சு... என்னால முடிஞ்சிருக்காது. பதறி அலறி யிருப்பேன்...''

பேசாமல் அவளையே வெறித்தான்.

''ஸ்வாமிகிட்டே வேண்டிண்டேன்... எப்பவும்... எல்லா ஜன்மத்துலயும் நீங்கதான் எனக்குக் கணவரா வரணும்னு...''

முழுக்க முழுக்க அவன்தான் சகலமும் என்ற பாவனையில் ஜலம் ததும்பிய விழிகளுடன் அவனை அணைத்துக் கொண்டாள்.

அவன் மனத்தின் மூலையில் ஏதோ வலித்தது.

''என்கிட்ட எப்படி வேலை வாங்கணும்னு எங்க மானேஜர் நல்லாத் தெரிஞ்சு வெச்சிருக்கார்!''

''எப்படி?''

''நான் செய்ய வேண்டிய வேலையை, டைப்பிஸ்ட் கீதாவைச் செய்யச் சொல்லி ஆர்டர் போடுவார்; கீதாவுக்காக நான் செய்து கொடுத்துடுவேன்!''





''ஆட்சியைக் கலைத்தது கூட எனக்கு வேதனையா இல்லை...''

''வேற எது வேதனையா இருக்கு?''

''மறுபடியும் மக்களைச் சந்திக்கும்படி பண்ணிட்டாங்களே, அதுதான்!''

-- சீர் காழி வி. ரேவதி.

சிவகாமியின்

இருபத்தெட்டாம் அத்தியாயம்

சுகரிஷியின் வரவேற்பு

அதிசயமான பயங்கர சம்பவங்கள் நிகழ்ந்த அன்றிரவில் அசோக புரத்துப் பாழடைந்த புத்த விஹாரத்தில் என்ன நடந்தது என்று இப்போது பார்ப்போம்.

அந்த விஹாரத்தில் தன்னந் தனியாக வசித்து வந்த வயோதிக பிக்ஷு இருண்ட சைத்யத்தில் நாகநந்தியுடன் பேசி விட்டுத் திரும்பி வந்தவுடனேயே, ஆயனரிடம் அங்கிருந்து உடனே புறப்பட்டுச் செல்வது நலம் என்று பிரஸ்தாபித்தார்.

சிவகாமியை அழைத்து ஆயனர் கேட்ட போது, சிவகாமி ஒரே பிடிவாதமாக அங்கிருந்து கிளம்ப முடியாதென்று சொல்லி விட்டாள். அங்கே சண்டை நடக்கலாமென்று பிக்ஷு சொன்னது, அங்கே இருப்பதற்கு அவளுடைய ஆவலை அதிகமாக்கிற்று. அப்படி நடக்கும் சண்டையைக் கண்ணாலே பார்க்க வேண்டும் என்ற விசித்திரமான ஆசை அவள் உள்ளத்தில் உதித்தது. அந்த ஆசையின் மூலகாரணம் மாமல்லர் போர்க் களத்திலே நிகழ்த்தும் வீரச் செயல்களைப் பார்க்க வேண்டுமென்பதுதான். அவளுடைய கற்பனைக் கண்ணின் முன்னால் போர்க்களக் காட்சிகள் தென்படலாயின. நாலாபுறமும் சூழ்ந்துவரும் எதிரிகளுக்கு மத்தியில், மாமல்லர் தன்னந்தனியாக நின்று வாளைச் சுழற்றி எதிரிகளின் தலைகளை வெட்டி வீழ்த்துவது போல் அவள் கற்பனை செய்து கொள்வாள். மறுகணம் அந்தக் கற்பனைக் காட்சியின் கோரத்தைக் காணச் சகியாமல், மனத்தை விட்டு அக்காட்சியை அகற்றி விட முயல்வாள்.

இரவு ஒரு ஜாமம் ஆனபிறகு மறுபடியும் அந்த வயோதிக பிக்ஷு ஓடிவந்து "அபாயம், அபாயம்! உடனே கிளம்புங்கள்! இல்லாவிட்டால், தப்பிப் பிழைக்க முடியாது!" என்று உரத்த குரலில் பரபரப்புடன் கூறினார்.

அமரர் கல்கி

"அடிகளே! இன்னும் என்ன புது அபாயம் நமக்கு வரப்போகிறது?" என்று ஆயனர் அவநம்பிக்கையுடன் கேட்டார்.

"இங்கே யுத்தம் நடக்கலாமென்று நான் முன்னே சொன்னது, உண்மையைச் சொன்னால் ஒருவேளை நீங்கள் நம்பமாட்டீர்கள் என்றுதான். திருப்பாற்கடல் ஏரி உடைத்துக் கொள்ளும் போலிருக்கிறதென்று கேள்விப் பட்டேன். அதனால்தான் போய் விடலாமென்று யோசனை சொன்னேன். இப்போது உண்மையாகவே ஏரி உடைத்துக்கொண்டு விட்டது. உடனே கிளம்புங்கள்!" என்றார்.

"சுவாமி! ஏரி உடைத்துக்கொண்டால் என்ன? அதற்காக நாம் ஏன் ஓடவேண்டும்!" என்று சிவகாமி சாவதானமாகக் கேட்டாள்.

"திருப்பாற்கடல் ஏரியை நீ பார்த்திருந்தால் இப்படிச். சொல்லமாட்டாய்! நாளைப் பொழுது விடிவதற்குள் இங்கேயெல்லாம் ஒரே வெள்ளமாயிருக்கும்!" என்றார் பிக்ஷு.

சிவகாமி ஆயனர் பக்கம் திரும்பி, "அப்பா! நான் வெள்ளமே பார்த்ததில்லை. நாம் இங்கேயே இருந்து வேடிக்கை பார்க்கலாம். பிக்ஷு வேணுமானால் போகட்டும்!" என்றாள்.

"பெண்ணே! அறியாமையால் பிதற்றுகிறாய்! வெள்ளம் வந்தால் வேடிக்கையாயிராது! பனைமர உயரம் பிரம்மாண்டமாக வரும். இந்த விஹாரம், சைத்தியம் எல்லாம் மூழ்கிப் போய் விடும். அப்புறம் என்ன வேடிக்கையைப் பார்க்கிறது?"

"சுவாமி! அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுகிறீர்களே, தங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ஆயனர் கேட்டார்.

"பத்து வருஷத்துக்கு முன்னால் இப்படித்தான் ஒரு தடவை திருப்பாற்கடல் ஏரி உடைப்பு எடுத்துக் கொண்டது, அப்போது நானே பார்த்திருக்கிறேன். இந்தப்

சபதம்

பள்ளத்தாக்கில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் செத்துப் போனார்கள். மீதியிருந்தவர்கள் இங்கே குடியிருப்பது அபாயம் என்று வேறு மேட்டுப்பாங்கான இடங்களுக்குக் குடிபோய் விட்டார்கள். அந்த வெள்ளத்திற்குப் பிறகுதான் இந்த அசோகபுரம் இப்படிப் பாழடைந்து கிடக்கிறது!''

இதை எல்லாம் கேட்ட போது ஆயனருக்கும் சிவகாமிக்கும் மனக்கலக்கம் உண்டாயிற்று. ஆயினும், இரவில் கிளம்ப அவர்கள் மனம் இசையவில்லை. அதோடு, அப்போது பெருங் காற்றும் மழையும் ஆரம்பித்திருந்தன.

சிவகாமி திடீரென்று நினைத்துக் கொண்டு, ''அப்பா! குண்டோதரன் சாயங்காலம் வந்தான்; மறுபடியும் மாயமாய் மறைந்து விட்டானே? இந்தக் காற்றிலும் மழையிலும் எங்கே அகப்பட்டுக் கொண்டானோ, தெரியவில்லையே?'' என்று கவலையுடன் கூறினாள்.

''அவனுடைய நடவடிக்கையே இப்போது விசித்திரமாய்த்தானிருக்கிறது!'' என்றார் ஆயனர்.

''அதோ கேளுங்கள் சத்தத்தை!'' என்றார் பிக்ஷு.

ஆம்; அதுவரையில் கேளாத ஒரு புதுவிதமான சத்தம் அப்போது இலேசாகக் கேட்டது.

ஆயனருக்கும் சிவகாமிக்கும் மனக் கலக்கம் அதிகமாயிற்று. ''சிவகாமி, அது என்ன சத்தம்?'' என்றாள்.

''ஏரி உடைத்துக் கொண்டுவிட்டது... நாளைப்பொழுது விடிவதற்குள் இங்கே ஒரே வெள்ளமாயிருக்கும்!'' என்றார் பிக்ஷு.

''தெருவெல்லாம் தண்ணீர் ஓடுமோ? இந்த விஹாரத்துக்குள்ளே கூட ஜலம் வந்து விடுமோ?'' என்றாள் சிவகாமி.





''வீடு வீடாப் போய் வோட்டுக் கேட்டுக்கிட்டு வந்தீங்களா? போட றேன்னாங்களா?''

''எல்லார்கிட்டேயும் நல்லாக் கேட்டுக் 'கிட்டு வந்தோம். போட்டு அனுப்பாத குறை தான்!''

''விஹாரத்துக்குள்ளே மட்டுமில்லை; விஹாரத்துக்கு மேலேயுங்கூட வந்துவிடும்!'' என்றார் பிக்ஷு.

''சுவாமி! இப்போது என்ன யோசனை சொல்கிறீர்கள்?'' என்று ஆயனர் கவலையுடன் கேட்டார்.

''இப்போது நான் என்ன யோசனையைச் சொல்வது? சாயங்காலமே போய் விடலாமென்று சொன்னேன்; நீங்கள் கேட்கவில்லை. பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய் ஒரு பானைத்தெப்பம் கொண்டு வருகிறேன். அதுவரையில் நீங்கள் இங்கேயே இருங்கள். இன்றிரவு நாம் தப்பிப் பிழைத்தால், புத்த பகவானுடைய கருணைதான். ஆஹா! நாகநந்தியடிகள் எப்பேர்ப்பட்ட பொறுப்பை என்னிடம் ஒப்புவித்து விட்டுப் போய் விட்டார்?''

இவ்விதம் கூறிவிட்டு அந்த வயோதிக புத்த பிக்ஷு நள்ளிரவில் புயலிலும் மழையிலும் விஹாரத்திலிருந்து வெளியில் சென்றார்.

புத்த பிக்ஷு வெளியில் போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் அவர் கூறியபடியே உடைப்பு வெள்ளம் அசோகபுரத்தை அடைந்து விட்டது. முதலில் கொஞ்சமாகத்தான் வந்தது. அப்புறம் மளமளவென்று பெருக ஆரம்பித்து விட்டது. விஹாரத்துக் கதவுகளின் இடுக்கு வழியாகத் தண்ணீர் உள்ளே வரத் தொடங்கியது. சிறிது நேரத்துக்கெல்லாம் கதவுகளைப் பிளந்து தள்ளிவிட்டு உள்ளே குபுகுபுவென்று பாய ஆரம்பித்தது.

வெள்ளம் பெருகத் தொடங்கியதும் ஆயனர் முதலியோர் முதலில் விஹாரத்தின் வெளிவாசல் திண்ணையில் வந்து நின்றார்கள். ஆனால் மழை, புயல், மின்னல் அசாத்தியமாயிருந்தபடியால் அங்கே நிற்க முடியவில்லை. பிறகு உள்ளே சென்றார்கள். உள்ளே தண்ணீர் புகுந்ததும் மேடைகளில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். மேடைகளிலும் தண்ணீர் வந்ததும், மேல் தளத்துக்குப் போகும் மச்சுப் படிகளில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களை விடாமல் தண்ணீர் மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

''அப்பா! என் அசட்டுத்தனத்தினால் உங்களை இந்த கதிக்கு ஆளாக்கினேன்!'' என்று சிவகாமி ஆயனரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு புலம்பினாள். ''ஐயோ! இந்த மானையும் கிளியையும் எதற்காக அழைத்து வந்தேன்?'' என்று வருந்தி, அவற்றை அன்புடன் தடவிக் கொடுத்தாள்.

மானும் கிளியும் ஏதோ பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்து, சிவகாமியின் அருகில் வந்து ஒட்டிக்கொண்டு நின்றன.

''குழந்தாய்! நீ என்ன செய்வாய்? இப்படி நாம் கூண்டோடு கைலாசம் போகவேண்டுமென்று விதி இருக்கும்போது எப்படித் தடுக்க முடியும்? அந்த நாகநந்தியின் பேச்சைக் கேட்டு இப்படியாயிற்று!'' என்று ஆயனர் கூறிச் சிவகாமியின் முதுகில் அருமையுடன் தட்டிக் கொடுத்தார்.

''நாகநந்தியின் மேல் ஒரு தவறுமில்லை; எல்லாம் மாமல்லரால் வந்தது, அப்பா!'' என்றாள் சிவகாமி.

சிவகாமியின் உள்ளம் அன்றிரவு அடிக்கடி மாமல்லர்பால் சென்று கொண்டிருந்தது. வாசலில் நின்று தன்னைப் பார்த்தவர், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் போய்விட்டதை நினைத்து அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அவர் நின்று பேசித் தங்களையும் கூட அழைத்துப் போயிருந்தால் இப்படி நேர்ந்திராதல்லவா?

எனவே, இந்த வெள்ளத்தில் நாம் செத்துப்போவதே நல்லது. நம்மை இங்கே பார்த்துவிட்டுச் சென்ற மாமல்லருக்கு, ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நாம் இங்கேயே வெள்ளத்தில் முழுகிச் செத்துப்போனது தெரியாமல் போகாது. அப்புறம், அவர் வாழ்நாளெல்லாம் இதை நினைத்து நினைத்துத் துக்கப்படுவாரல்லவா? சற்று நின்று சிவகாமியுடன் பேசாமல் வந்து விட்டோமே என்று வருத்தப்படுவாரல்லவா? படட்டும்! பட்ட்

டும்! அவ்வளவு கல்நெஞ்சமுடைய மனிதருக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்! அப்படி அவரை வருத்தப் படுத்துவதற்காகவே நாம் இங்கே வெள்ளத்தில் செத்துப் போவது நல்லதுதான். ஆனால், பாவம்! - அப்பாவும் அத்தையும் ரதியும் சுகரும் ஏன் இந்தக் கதிக்கு உள்ளாக வேண்டும்? பகவானே! திடீரென்று ஏதாவது ஒரு அற்புதம் நேரக் கூடாதா? தன்னைத் தவிர மற்றவர்கள் உயிர் பிழைக்கக் கூடாதா? - நான் மட்டும் சாகக் கூடாதா? - தன்னுடைய துரதிர்ஷ்டம், தலைவிதி, அவர்களையும் ஏன் பற்ற வேண்டும்?

இப்படிப்பட்ட எண்ணங்களில் எவ்வளவு நேரம் போயிருக்கும் என்று தெரியாது. புயலும் மழையும் கொஞ்சம் ஓய்ந்திருப்பது போலத் தோன்றியது. மச்சுக்குப் போய்ப் பார்க்கலாம் என்று நினைத்து எல்லாரும் மேலே போனார்கள். உண்மையாகவே, புயல் ஓய்ந்து, மழையும், விட்டிருந்தது. சிறு தூறல்தான் தூறியது. கீழ்த்திசையில் பரவியிருந்த மங்கலான வெளிச்சம் விரைவில் உதயமாகப் போகிறதென்பதைக் காட்டியது.

அந்த உதய நேரத்து ஒளியில் ஆயனர் முதலியோர் சுற்று முற்றும் பார்த்தபோது, அவர்கள் என்றும் பாராத அதிசயமான காட்சி தெரிந்தது. எங்கெங்கும் ஒரே தண்ணீர்ப் பிரவாகமாயிருந்தது. சற்றுத் தூரத்திலிருந்த கிராமத்துக் குடிசை வீடுகளின் கூரையைத் தொட்டுக் கொண்டு வெள்ளம் ஓடிற்று. வீட்டுக் கூரைகளும், வைக்கோல் போர்களும், பெரிய பெரிய விருட்சங்களும் அந்தப் பெரு வெள்ளத்தில் மிதந்து சென்றன.

சிவகாமியின் உள்ளத்தின் அந்தரங்கத்தில், 'ஒருவேளை எங்கிருந்தாவது எப்படியாவது மாமல்லர் நம்மைக் காப்பாற்றுவதற்காக வரக் கூடாதா?'' என்ற எண்ணம் தோன்றியது. ''வீணாசை!'' என்று அவளே தன்னைத்தானே திருத்திக் கொள்ள முயன்றாள்.

ஆனால், இதென்ன விந்தை! - கனவு காண்கிறோமா? சித்தப்பிரமையா? - அல்லது உண்மைதானா? - நடக்காத காரியம் நடக்கிறதே? - கைகூடாத ஆசை கைகூடுகிறதே? - அதோ வெள்ளத்தில் நீந்திக் கொண்டு வரும் குதிரை மேல் இருப்பவர் மாமல்லர்தானே?... கண்களே! சரியாகப் பாருங்கள்! நெஞ்சே! கொஞ்சம் நிதானித்துக் கொள்! - ஆம், ஆம்; அவர்தான் சந்தேகமில்லை! நடராஜப் பெருமானே, பராசக்தித் தாயே! அருள் புரியுங்கள்! மீதியுள்ள தூரத்தை அவர் அபாயமில்லாமல் கடந்து வந்து சேர வேண்டுமே? - அப்பா! அப்பா! யார் வருகிறார் என்று பார்த்தீர்களா? அத்தை! நீ பார்த்தாயா? - ரதி! உனக்குக் கண் தெரிகிறதா? சுகப்பிரம்ம ரிஷியே! - உமக்கு வாய் அடைத்துப் போய் விட்டதா, என்ன?....

உண்மையில், சுகப்பிரம்ம ரிஷிக்கு வாய் அடைத்துப் போகவில்லை. இரண்டு மூன்று தடவை தலையை இந்தப்புறமும் அந்தப்புறமும் வளைத்துப் பார்த்துவிட்டுச் சுகப் பிரம்மரிஷி ''மாமல்லா! மாமல்லா!'' என்று கூவி வரவேற்புக் கூறினார்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

பானைத் தெப்பம்

சுகரின் வரவேற்புக் குரலைக் கேட்டதும் மாமல்லரின் முகத்தில் புன்னகையின் சாயல் தோன்றியது. சிவகாமி கிளியை அடிப்பதற்காகக் கையை ஓங்க, கிளி அவளுடைய அடிக்குத் தப்பி இறகுகளைச் சட சடவென்று அடித்துக் கொண்டு ஒரு வட்டமிட்டு வந்து சிவகாமியின் தோள்களில் உட்கார்ந்த காட்சி, அவருடைய முக மலர்ச்சியை அதிகமாக்கியது.

அச்சமயம் விஹாரத்தின் ஓரமாகப் பானைத் தெப்பத்தில் வந்து கொண்டிருந்த குண்டோதரனை மாமல்லர் பார்த்தார். கையின் சமிக்ஞையினால் ''நில்லு!'' என்று ஆக்ஞையிட்டார்.

அதே நேரத்தில் மேலேயிருந்து குனிந்து பார்த்த சிவகாமி, ''அப்பா! இதோ குண்டோதரனும் வந்து விட்டானே! பானைத் தெப்பம் கொண்டு வருகிறான்!'' என்று கூறிக் கையைக் கொட்டி மகிழ்ந்தாள். இரவெல்லாம் அவளுடைய மனத்தில் குடி கொண்டிருந்த கவலையும் பீதியும் மறைந்து, இப்போது ஏதோ பெரிய வேடிக்கையில் ஈடுபட்டிருப்பது போன்ற குதூகலம் காணப்பட்டது.

தெப்பம் விஹாரத்தின் தூண்களின் மீது இடிக்காதபடி குண்டோதரன் அதைச் சாமர்த்தியமாகத் திருப்பி விட்டுக் கொண்டு மாமல்லரின் குதிரையண்டை வந்தான். ''பிரபு! படகுக்கு வந்து விடுங்கள்!'' என்றான்.

''யார் அப்பா நீ! எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே!'' என்று மாமல்லர் கேட்டார்.

''சத்ருக்னனுடைய ஆள், சுவாமி!'' என்று கூறிக் குண்டோதரன் தலைப்பில் முடிந்து வைத்திருந்த இலச்சினையைக் காட்டினான்.

''இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?''

''என்னுடைய எஜமானர் உத்தரவின் பேரில் எட்டு மாதமாக இவர்களுடன் இருக்கிறேன், பிரபு!'' என்றான் குண்டோதரன்.

''தெப்பம் எப்படிக் கிடைத்தது?''

''ஒரு வயோதிக புத்த பிக்ஷு தள்ளிக் கொண்டு வந்தார். அவரை வெள்ளத்தில் நான் தள்ளி விட்டு விட்டு இதைக் கொண்டு வந்தேன்!''

''பிக்ஷுவையா வெள்ளத்தில் தள்ளினாய்? அட, பாவி! ஏன் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்தாய்?''

''தெப்பத்தில் அவருக்கு இடம் காணாதென்றுதான்! தங்களையும் சேர்த்துக் கணக்குப் பண்ணிப் பிக்ஷுவுக்கு இடம் காணாதென்று பிடித்துத் தள்ளினேன்!''

''நான் வருவேனென்று எப்படித் தெரியும்?''

'அதுகூடத் தெரியாவிட்டால் மஹேந்திர பல்லவரின் ஒற்றர் படையிலே இருக்க முடியுமா, பிரபு?''

மாமல்லர் குதிரையின் முதுகிலிருந்து தாவி, பானைத் தெப்பத்தில் வெகு லாகவமாக ஏறிக் கொண்டார். பிறகு குதிரையின் முகத்தை இரண்டு தடவை தடவிக் கொடுத்து அருமை ததும்பிய குரலில், ''தனஞ்செயா! எங்கேயாவது ஓடித் தப்பிப் பிழைக்கப் பார். கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்!'' என்று கூறினார்.

உடனே தனஞ்செயன் என்னும் அந்தக் குதிரை, வெள்ளத்தில் வேகமாக நீந்திக் கொண்டு, மரங்கள் இரு வரிசையாகத் தண்ணீருக்கு மேலே தலை நீட்டிக் கொண்டிருந்த சாலையை நோக்கிச் சென்றது.

குண்டோதரனும் மாமல்லரும் பானைத் தெப்பத்தைப் பத்திரமாகச் செலுத்திக் கொண்டு விஹாரத்தண்டை சென்றார்கள். மேல் மச்சில் இருந்தவர்களைத் தெப்பத்தில் இறக்குவதற்கு வெகு பிரயாசையாகப் போய் விட்டது. முக்கிய மாக, சிவகாமிதான் அதிகத் தொந்தரவு கொடுத்தாள். சற்று முன்னால் வெள்ளத்திலே சாவதற்குத் துணிந்திருந்த வளுக்கு இப்போது உயிரின் மேலே அளவில்லா ஆசையும் வெள்ளத்தைக் கண்டு பெரும் பயமும் உண்டாகி இருந்தன.

யார் முதலில் தெப்பத்தில் இறங்குவது என்பதிலேயே தகராறு ஏற்பட்டது. ரதியை முதலில் இறக்கப் பார்த்தார்கள். அது ஒரே பிடிவாதம் பிடித்து இறங்குவதற்கு மறுத்தது.

ஆயனர் ரொம்பவும் வற்புறுத்திச் சொன்னதின்பேரில் சிவகாமி இறங்கச் சம்மதித்தாள். மேலேயிருந்து ஆயனரும் அத்தையும் பிடித்து இறக்க, கீழே தெப்பத்திலிருந்து மாமல்லர் கைகளினால் அவளைத் தாங்கி இறக்கி விட்டார். இறங்கியதும் தெப்பம் ஆடிய போது, சிவகாமி ரொம்பவும் பயந்து அலறினாள். மாமல்லர் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்கார வைத்துத் தைரியம் சொன்னார்.

பிறகு, அத்தையும் ஆயனரும் இறங்கிய போது, தெப்பம் ஆடியதனாலும் சிவகாமிக்குப் பயம் ஏற்பட்டது.

சுகர், மேலே வட்டமிட்டுக் கொண்டே இருந்தவர், எல்லோரும் தெப்பத்தில் இறங்கியதும், தாமும் வந்து ஒரு மூலையில் உட்கார்ந்து அண்ணாந்து பார்த்து, ''ரதி! ரதி!'' என்று கூவினார். அப்போது தெப்பம் கொஞ்சம் நகரவே, ''ஐயோ! ரதியை விட்டு விட்டுப் போகிறோமே'' என்று சிவகாமியும் சேர்ந்து அலறினாள்.

ரதி மேலேயிருந்து ஒரே தாவாகத் தாவித் தெப்பத்தில் குதித்தது. அதனுடைய முன்னங்கால் ஒன்று தெப்பத்துக்கு அப்பால் தண்ணீருக்குள் இறங்கி விடவே, மறுபடியும் சிவகாமி, ''ஐயையோ'' என்று கூச்சலிட்டாள்.

எல்லோரும் உட்கார்ந்து எல்லாம் ஒழுங்கான பிறகு, குண்டோதரன், ''பிரபு! சற்றே படகை நிறுத்தி வையுங்கள். இதோ வந்து விடுகிறேன்!'' என்று சொல்லி விட்டு, தெப்பத்திலிருந்து குதித்து நீந்திக் கொண்டு, விஹாரத்துக்குள்ளே போனான்.

குண்டோதரனுக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்ற கவலை சிவகாமியைப் பிடித்தது. அவன் திரும்பி வருவதற்குள், நேரமாக ஆக அவளுடைய ஆர்ப்பாட்டமும் அதிகமாயிற்று.

கடைசியாகக் குண்டோதரன் மேல் மச்சின் வழியாக எட்டிப் பார்த்து, ''இதோ வந்து விட்டேன்!'' என்றான். அவன் கையிலே ஒரு

அருள் வாக்கு

'தாளீ' என்றால் பனை. தாலி கூட அதிலிருந்து வந்ததுதான். ஸம்ஸ்கிருதத்தில் 'ல'வுக்கும் 'ள'வுக்கும் பேதம் கிடையாது.



ஸ்திரீகளின் ஸௌமங்கல்யத்துக்கு முக்கியமான சின்னங்கள் காதுத் தோடும் கழுத்திலுள்ள மங்கல ஸூத்ரப் பதக்கமும்தான். ஆதியில் ரொம்பவும் எளிமையாக நம் பெரியோர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொடுத்திருந்த போது இந்தக் காதணி, கழுத்தணி, இரண்டுமே பனையோலையால் ஆனதாகத்தான் இருந்தன. அதனால்தான் வைரத் தோடானால் கூட அதைப் பிற்காலத்திலும் வைர ஓலை என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. 'ச்யாமளா நவரத்னமாலை'யில் அம்பாளையே 'தாளீ பலாச தாடங்காம்' என்று சொல்லியிருக்கிறது. அம்பிகையே பனை ஓலையைத்தான் தாடங்கமாகச் சுருட்டிப் போட்டுக் கொண்டிருக்காளாம். கழுத்தின் மங்கள ஸூத்ரப் பதக்கமாகவும் அந்த ஓலை நறுக்கே இருந்திருப்பதால்தான் அதற்குத் தாலி என்று பேர் ஏற்பட்டிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

**

மூட்டை இருந்தது. மூட்டையை முதலில் கொடுத்துவிட்டுக் குண்டோதரனும் தெப்பத்தில் இறங்கியதும், "மூட்டையில் என்ன?" என்று ஆயனர் கேட்டார்.

அத்தை மூட்டையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "அவல்!" என்று தெரிவித்தாள்.

"இந்த ஆபத்தான சமயத்தில் கூடக் குண்டோதரன் வயிற்றுப் பாட்டை மறக்கவில்லை!" என்று சொல்லிச் சிவகாமி சிரித்தாள்.

"உங்களுக்குத்தான் என் விஷயம் தெரியுமே, அம்மா! நான் எதுபொறுத்தாலும் பொறுப்பேன்; பசி மட்டும் பொறுக்க மாட்டேன்!" என்றான் குண்டோதரன்.

"நல்ல முன் யோசனைக்காரன்!" என்றார் மாமல்லர்.

"சமயசஞ்சீவி என்றால் நம் குண்டோதரன் தான்! பிக்ஷு அவல் வைத்திருந்தது உனக்கு எப்படி அப்பா தெரிந்தது?"

இப்படிக் குண்டோதரனை எல்லோரும் பாராட்டிய பிறகு, தெப்பத்தின் ஒரு முனையில் குண்டோதரனும், இன்னொரு முனையில் மாமல்லருமாக உட்கார்ந்து தெப்பத்தைச் செலுத்தினார்கள்.

விரைவாக ஓடிய வெள்ளத்தில் பானைத் தெப்பம் இலகுவாக மிதந்து சென்றது. ஆனால் வழியில் தென்பட்ட மரங்களில் மோதாமலும் வெள்ளத்திலே வந்த கட்டைகள் தாக்காமலும் தெப்பத்தை மிக ஜாக்கிரதையாக விட வேண்டியிருந்தது.

வானத்தில் மேகங்கள் இன்னும் குமுறிக்கொண்டிருந்தன. காற்றின் வேகம் குறைந்து போயிருந்ததென்றாலும், இலேசாக அடித்த காற்று, உடம்பில் சில்லென்று பட்டது. அவ்வப்போது நீர்த் துளிகள் கிளம்பிச் சுரீரென்று மேலே விழுந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம் சிவகாமியின் பயம் பறந்து விட்டது. குதூகலமாய்ச் சிரிக்கவும் விளையாடவும் ஆரம்பித்து விட்டாள்.

"இப்படியே தெப்பத்தில் எத்தனை நாள் போய்க் கொண்டிருப்போம்?" என்று அவள் மாமல்லரைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன்! கஷ்டமாயிருக்கிறதா?" என்றார் மாமல்லர்.

"இல்லை, இல்லை, இந்தத் தெப்போத்ஸவம் முடிந்து விடப் போகிறதே என்றுதான் கவலையாக இருக்கிறது" என்றாள் சிவகாமி.

"முடியக் கூடாதா?"

"ஆமாம்; இப்படியே முடிவில்லாமல் என்றென்றைக்கும் வெள்ளத்தில் மிதந்து போய்க் கொண்டிருந்தால் என்ன?"

"ஒருவேளை நீ நினைக்கிறபடி நடந்தாலும் நடக்கலாம். இந்த வெள்ளம் நேரே சமுத்திரத்தில் போய்த்தான் சேரும். தெப்பமும் சமுத்திரத்துக்குப் போய் விட்டால்....?"

"முடிவேயில்லாமல் மிதந்து கொண்டிருக்கலாமல்லவா?.... ஒன்று மட்-

டும் சந்தேக மாயிருக்கிறது.''

''என்ன சந்தேகம், சிவகாமி?''

''இதெல்லாம் கனவா, உண்மையா என்றுதான்!''

''கனவு என்பதாக ஏன் உனக்குத் தோன்றுகிறது?''

''இம்மாதிரி தெப்பத்தில் ஏறி முடிவில்லாத வெள்ளத்தில் மிதந்து செல்வதாக அடிக்கடி நான் கனவு காண்பதுண்டு. அதனாலேதான் இதுவும் ஒரு வேளை கனவோ என்று சந்தேகப்படுகிறேன்.''

''இந்த மாதிரி சம்பவம் ஒரு நாள் நேரிடக்கூடும் என்று நான் எப்போதும் எண்ணியது கிடையாது. ஆகையால் எனக்கும் இது கனவோ என்று சந்தேகமாயிருக்கிறது.''

''ஆனால் என்னுடைய கனவிற்கும் இப்போது நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. கனவில் நான் காணும் படகிலே நானும் இன்னும் ஒரே ஒருவருந்தான் இருப்போம், இந்தப் படகிலே பலர் இருக்கிறோம்!''

''அந்த ஒருவர் யார்?''

''சொல்ல மாட்டேன்!''

பொழுது சாயும் சமயத்தில், கொஞ்ச தூரத்தில் பூமியும், பாறைகளும் மரங்களும் அடங்கிய காட்சி காணப்பட்டது. எப்போதும் முடிவில்லாமல் தெப்பத்தில் போய்க் கொண்டிருக்க ஆசைப்பட்ட சிவகாமிக்குக்கூட அந்தக் காட்சி ஆனந்தத்தை அளித்தது.

ஒவ்வொருவரும் தத்தம் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பலவிதமாகத் தெரிவித்தார்கள். குண்டோதரனுடைய முகத்தில் மட்டும் மலர்ச்சி காணப்படவில்லை.

''குண்டோதரா! இது என்ன இடம் தெரியுமா? இங்கே நாம் இறங்க வேண்டியது தானே?'' என்றார் மாமல்லர்.

''ஆம், பிரபு! இறங்கவேண்டியதுதான். ஆனால் தீவின் ஓரமாக வெள்ளத்தின் வேகம் கடுமை என்று தோன்றுகிறது, பாறைகள் வேறே இருக்கின்றன!'' என்றான் குண்டோதரன்.

தீவை நெருங்க நெருங்க தெப்பத்தின் வேகம் அதிகமாயிற்று.

கரையோரமாக நின்ற சிறு சிறு பாறைகள் தெப்பத்திலிருந்தவர்களின் கண்களுக்குப் பிரம்மாண்ட மலைகளாகத் தோன்றின.

(தொடரும்)

''உள்ளூர்லேயே கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு.''

''ஏன்... மனைவி அடிக்கடி பிறந்த வீட்டுக்குப் போயிடறாங்களா?''

''ஊஹும்... பிறந்த வீட்டுக்குப் போயிருக்காளேன்னு நிம்மதியா இருக்க முடியலை. உடனே திரும்பி வந்துடறா!''

— சீர்காழி வி. ரேவதி.





''ஆர். கே. நாராயண் நன்னோட குழந்தைப் பருவத்தைப் பற்றிக் கட்டுரை எழுதினா, அதுக்கு என்ன பேர் வைப்பாருன்னு சொல்லு பார்ப்போம்?''

''தெரியலையே...''

''இது தெரியாதா, 'பால் குடி டேஸ்!''

— டி. என். பாலகிருஷ்ணன்.




''என் சொத்துக்களை ரெண்டு மகன்களுக்கும் சரிபாதியாப் பிரிச்சுக் கொடுக்கும் போது ஏற்பட்ட சண்டையால மூணாப் பிரிக்க வேண்டியதாயிடுச்சு...!''

''அதெப்படி...?''

''கேஸாடின வக்கீலுக்கு ஒரு பங்கு போயிடுச்சு...!''

— ஏ. ஆர். வீரராகவன்



நிதர்சனங்கள்

அவர்கள் இருவரும் புதிதாக வங்கிக் கணக்குத் துவங்க வந்திருந்தனர். பெயர், வேலை, விலாசம்... எல்லாம் கேட்டு கார்ட் நிரப்பும் வேலை முடிந்தபின், ''உங்கள் அக்கவுண்டை யார் அறிமுகம் செய்வார்கள்?'' என்று கேட்க, இருவரும் திருதிருவென்று புரியாமல் விழித்தார்கள். முன்னே பின்னே பாங்கில் கணக்கு வைத்த அனுபவமில்லை என்பது ஸ்பஷ்டமாகப் புரிந்தது.

''எங்களுக்கு யாரைத் தெரியும்?'' என்று அவர்கள் சொல்ல, பிரச்னை துவங்கியது. அவர்கள் கையில் இருந்ததோ இருபத்தைந் தாயிரத்துக்கு இரண்டு செக்குகள். ரூபாய் ஐம்பதாயிரம். பெரிய தொகை! எப்படி 'இன்ட்ரொடக்ஷன்' இல்லாமல் அக்கவுண்ட் திறப்பது?

சிறிது நேரம் எங்களுக்குள் சர்ச்சை செய்த பின் மானேஜரைக் கேட்க, அவர் கேபினிலிருந்து வெளியே வந்து, அவர்களைத் தம் பங்குக்கு விசாரித்தார். அந்த ஆள் ப்யூனாக வேலை செய்யும் கம்பெனி ஐடென்டிட்டி எடுத்துப் பார்த்துத் திருப்தியடைந்தவராய், ''திறங்க... அறிமுகம் இடத்தில் கம்பெனி 'ஐ - கார்ட்' என்று எழுதுங்க. எல்லாம் முடிச்சு எங்கிட்ட அனுப்புங்க. நான் ஸைன் பண்றேன்,'' என்றார்.

போகிற போக்கில் மானேஜர், ''அது போகட்டும், இவ்வளவு பெரிய தொகை எப்படிக் கிடைச்சுதாம்?'' என்று ஆங்கிலத்தில் துப்பறிய, அதையே நான் மராத்தியில் கேட்டேன்.

உடனே அந்தப் பெண்மணி அழத் தொடங்கினாள். அந்த மனிதர் அவளைச் சமாதானப் படுத்திவிட்டுக் கம்மிய குரலில் ஆரம்பித்தார்.

''இரண்டு மாசத்துக்கு முன்னே... போரிவிலி கிட்ட ட்ரெயின் ஆக்ஸிடெண்ட் நடந்துச்சே... லேடீஸ் பெட்டி தீப்பற்றி எரிஞ்சுதே.. அதிலே எங்க பொண்ணுங்க இரண்டு பேர் எரிஞ்சு போயிட்டாங்க. அதுக்கு நஷ்டஈடாகக் கெடைச்ச பணம் இது.''

பானுகுமார்

''என் ரத்தத்தோட விலைம்மா இது...'' என்று அந்தப் பெண்மணி மறுபடி குரலெடுத்து அழ, வங்கி ஊழியர்கள் எல்லோரும் தம் வேலைகளை விட்டுத் திரும்பிப் பார்த்தனர். கஸ்டமர் எதிரில் இல்லாததால் ஃப்ரீயாக இருந்த சிலர் என் டேபிள் அருகில் கதை கேட்கும் சுவாரசியத்துடன் வந்து கூடினர்.

''கோவண்டில இருக்கிற எங்க பொண்ணுங்க ஏன் அன்னிக்கினு போரிவிலி போகணும்? ஏதோ சிநேகிதி கல்யாணம்னு பெரியவ கிளம்பினா. 'தனியாப் போகாதே... கூட தங்கையையும் துணைக்குக் கூட்டிப் போ'ன்னு நான்தான் சொன்னேன். பாவி, சாவுக்குத் துணையாப் போயிட்டா. கல்யாணத்துக்குப் போறோமேன்னு தீபாவளிக்கு வாங்கின புதுப் புடைவை, முத்து மாலையெல்லாம் போட்டுக்கிட்டு அழகாக் கிளம்பின ரெண்டு பேரையும்... கருகிப் பொணமாப் பார்ப்பேன்னு நான் நெனைக்கலே. அதுவும் அடையாளம் தெரியாம... ஒருத்திக்கு இருபது முடிஞ்சது. ஒருத்திக்குப் பதினெட்டு. பணம் சேர்த்து இந்த வருஷம் கல்யாணம் பண்ணணும்னு நெனைச்சோம்... அதுக்



குள்ள இப்படி... சாகற வயசா இது? சொல்லு...?'' என்று பிழியப் பிழிய அழுதாள்.

எந்த ஒரு விபத்தும் - அதில் தோன்றும் இழப்பும், இழப்பின் பரிமாணமும் பேப்பரில் செய்தியாகப் படிக்கும் போதோ, அல்லது டீ. வி.யில் பார்க்கும் போதோ அத்தனை அதிகம் பாதிப்பதில்லை. ஆனால் இழந்தவரை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதில் அவர்கள் இழப்பின் ஆழமும் சோகமும் புரியும் போது, நம்மை அது பலமாகத் தாக்குகிறது.

யாரும் பேசும் நிலையில் இல்லை. ஆனால் வழக்கத்தை விட வேகமாக அக்கவுண்ட் திறக்கும் வேலையெல்லாம் முடிந்தன. வழக்கமாகப் பத்துத் தடவை கூப்பிட்டாலும் காதில் விழாத மாதிரி போகும் ப்யூன் அவர்கள் கையிலிருந்து எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு போய்த் தானே டெபாஸிட் செய்து, ரசீதுடன் வந்தான்.

செக் க்ளியர் ஆகி ஒரு வாரம் கழித்து இருவரும் வந்தனர். ''பணம் எடுக்கணுமா?'' என்று கேட்டதற்கு, ''ஐயோ, எங்களுக்கு வேண்டாம் அந்தப் பணம். இரண்டு உயிர்களை விலையாகக் கொடுத்து வந்த பணம். ஏதாவது தர்ம காரியத்துக்குத் தரலாம்னு இருக்கோம். இன்னும் முடிவு பண்ணலே.''

''அதுவரை மூன்று வருஷ ஃபிக்ஸட் டெபாஸிட்ல போட்டு வைக்கலாம். வட்டியும் வரும்...'' - எங்கள் வங்கி நாக்கு வழக்கம் போல் டெபாஸிட் பின்னால் அலைய, நாற்பதாயிரம் ரூபாய்க்கு ஜாயின்ட் எப்டியில் போட்டோம்.

''உங்களுக்கு வேற குழந்தைங்க இருக்கா?'' என்று பொதுவாக விசாரித்தேன்.

ஒரு பையன் ஸ்கூல் படிக்கிறான். அப்புறம் ஒரு பொண்ணு...எட்டு வயசாறது. நிரந்தர நோயாளி...''

வேலை முடிந்து அவர்கள் கிளம்பினார்கள்.

ஒரு வருடம் கழித்து, மறுபடி என் டேபிளுக்கு வந்த பொழுது முதலில் எனக்கு ஞாபகம் வரவில்லை. மௌனமாக சேவிங்க்ஸ் அக்கவுண்ட் புக்கை அந்த அம்மாள் நீட்டியதும், பிரித்துப் பார்த்தவுடன் 'சட்'டென்று ஞாபகத்திற்கு வந்தது. உள்ளே என்ட்ரீஸ் பார்த்தேன். அதில் ஆரம்பத்தில் இருந்த பத்தாயிரத்தைச் செலவு செய்திருந்தார்கள்.

இப்போது ஃபிக்ஸெட் டெபாஸிட்டிலிருந்து எப்படிப் பணம் எடுப்பது என்று என்னிடம் கேட்க வந்திருந்தார்கள். வட்டி நஷ்டம் ஆகாமல் இருக்க ரூபாய் பத்தாயிரம் லோன் எடுக்கச் சொன்னேன்.

''என்ன செய்யறதும்மா. இவருக்கு உடம்பு சரியில்லை. டாக்டர் செலவு. தவிர, ஒழுங்கா வேலைக்குப் போகாததாலே அன்ஃபிட் பண்ணி வேலையை விட்டு எடுத்துட்டாங்க. நாங்க நாலு வயிறும் சாப்பிட்டாகணுமே...'' என்று கடன் வாங்குவதை அவள் நியாயப்படுத்தினாள்.



அவள் கஷ்டம் அவளுக்கு என்று லோன் பத்திரங்களை நிரப்பி, பத்தாயிரத்தை அவர்கள் சேமிப்புக் கணக்கில் போட்டேன்.

மீண்டும் ஆறே மாதங்களில் மறுபடியும் கடன் வாங்க வந்தார்கள். மழையிலே வீடு விழுந்து ரிப்பேர் ஆன செலவு, மாமியார்க் கிழவி கிராமத்தில் செத்துப் போய் ஈமக் கடன் செலவு... என்று பலவிதக் கணக்கு விவரங்கள்.

நமக்கு எதுக்குக் கணக்கு விவரம்? அவர்கள் பணம், அவர்கள் செலவு செய்கிறார்கள். மறுபடி பத்தாயிரம் லோன்.

ஒரே வித்தியாசம் என்னவென்றால், இந்தத் தடவை நாலே மாசத்தில்,திரும்ப வந்தார்கள். ஊரில் நிலம் வாங்குவதாக முடிவு செய்திருந்தனர். ''பணம் வேண்டும். ஒரு பத்தாயிரம் போதும்!'' என்றனர்.

சரி, மேலும் மேலும் கடன் வாங்குகிறார்களே தவிர, இவர்களால் திருப்பி அடைக்க முடியாது... அதிக வட்டி கொடுத்து நஷ்டம் அடைய வேண்டாமென்று... அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

எல்லாக் கணக்கையும் பார்த்து, அவர்களிடம் கடிதம் வாங்கிக் கொண்டு, ஃபிக்ஸெட் டெபாஸிட்டை 'டிஸ்கவுண்ட்' செய்து, கடன் தொகை, வட்டி போக மிச்சத்தை அவர்கள் சேமிப்புக் கணக்கில் கட்டினேன். சேமிப்புக் கணக்கா அது? வெறும் செலவுக் கணக்காக ஆகிவிட்டதே? புக்கில் 'என்ட்ரி' போட்டுக் கொடுத்தேன்.

பத்து நாட்களுக்கு ஒரு தடவை அந்தப் பெண்மணி வருவாள்... நூறு இருநூறு என்று எடுக்க. நாங்கள் யாராவது எழுதித் தர மௌனமாகக் கையெழுத்துப் போடுவாள் கோணல் மாணலாக.

கடைசி நூறு ரூபாய்களை எடுக்கும் போது அவள் முகத்தில் அப்பட்டமான வேதனை. ஏதோ குற்றம் செய்கிற பாவனை. குனிந்த தலை நிமிரவில்லை.

அவள் வருத்தம் நன்றாகவே புரிந்தது. வாழ்க்கையின் எல்லா ஆதர்சங்களையும் மீறியது பணம் என்ற நிதர்சனத்தில் அடிபட்டுப் போயிருந்தாள் அந்தப் பெண்மணி!



அமரர் கல்கி நினைவாக— பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப் படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசீலித்துப் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

O கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் பொன் விழா சிறுகதை நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற சுயவிலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம்.- கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4வ ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.

O பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.

O எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

நேற்றுவரை

நந்தவனம்

4

"ஏன்னு கேட்டா எப்படி சார்... அங்கே ஒரு பொம்பிளை - கைக்குழந்தைக்காரி உட்கார்ந்திட்டிருக்காங்க. இல்லே, அந்தம்மாவை முன்னாலே வரச் சொல்றேன்... நீங்களும், இந்த சாருமா அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் பின்னாடி உட்காருங்க..."

"வேற யாரையாவது அட்ஜஸ்ட் பண்ணிக்கச் சொல்லுங்க... இவ தனியா வரப் பயப் படுவா..."

கீர்த்தி, தன் மனைவியின் கையைத் தன் பிடியிலிருந்து விடாமலேயே சொல்கிறான்.

எங்கே, கைப் பிடியைத் தளர்த்தினால், அவள் எழுந்து விடுவாளோ என்கிற பயம்...

"பார்க்கறதுக்குப் படிச்சவங்களா இருக்கிங்க... நீங்களே வேணுமானாலும் எழுந்து நின்னு பாருங்க.. வேற யாரையாவது நகர்த்த முடியுமான்னு... நீங்க ஒரு ஜோடி தான் மாத்தி உட்கார வசதியா இருக்கிங்க...."

கண்டக்டர் சொல்லி முடிப்பதற்குள் - முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்த தர்மராஜன், இடக்காகச் சொல்கிறார்.

"சார்தான் சொல்லிட்டாரில்லே... தனியா வர்றதுக்குப் பெண்டாட்டி பயப்படுவான்னு... வண்டியில முன் பக்கம் மாத்திரம் காலையில எட்டு மணிக்கு மெட்ராஸ் போகப் போவுது. பின் பக்கம் நிதானமா மதியம் ஒரு மணிக்கு வந்து சேரும் இல்லே... அதான், சம்சாரம் பயப்படறாங்க... இவங்களைச் சொல்லிக் குத்தமில்லைய்யா. நாடே அப்படித்தான் இருக்குது... படிச்சவனுக்குப் பஸ்லே வர பாஸஞ்சர் கூட கொஞ்சம் அனுசரிச்சுப் போக முடியலே.... அப்புறம் எப்படி அரசியல்லே மாத்திரம் ஒத்துமை நிலவணும்னு பார்க்கறீங்க..."

கீர்த்தி, அந்த ஒரு இமைப் பொழுதில் உஷ்ணத்தின் உச்சிக்கே போய் விட்டான்.

"யோவ்! எங்கேதான் அரசியல் பேசறதுன்னு ஒரு நியதி கிடையாதா? நான் நகர மாட்டேன்... நீர் வேணுமானா உங்க மருமகளை நகரச் சொல்லுங்க..."

"தாராளமா. நான் அழைச்சிட்டு வந்து என் பக்கத்துல இடம் கொடுப்பேன்... அவ பக்கத்துல ஒரு பாட்டி இப்பவே சாமியாடுதே... நீ தூக்கி மடியில வச்சுக்கறியா.. ஆ... ங்... மாட்டே... சின்னப் பொண்ணா இருந்தா வச்சுப்பே.."

இதற்குள் தெய்வ நாயகி, கீர்த்தியைப் பார்த்துப் பெண் புலியாய்ச் சீறுகிறாள்.

"மிஸ்டர், மைண்ட் யுவர் பிஸினஸ்... உங்களாலே இடம் கொடுக்க முடியாதுன்னா முடியாதுன்னு சொல்லிட்டுப் போங்க.. அதை விட்டு, என் கிட்ட எதுக்கு வம்புக்கு வர்றீங்க... அந்தக் காட்டாளுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லே.."

மீராவுக்கே கூட கீர்த்தி அப்படிப் பேசியது பிடிக்கவில்லை.

'எதற்காக வீண் வம்பை விலைக்கு வாங்க வேண்டும்?'

இத்தனைக்கும் நடுவில், பஸ்ஸில் இடம் கிடைத்ததே மெடிகல் காலேஜில் இடம் கிடைத்தது போன்ற நிம்மதியில், வெளியே பெட்டியும் கையுமாய் நின்ற மகனிடமும், மனைவியிடமும் இரைந்து கத்துகிறார் புதுசாய் ஏறிய பயணி.

"அடேய்... அடுத்த பஸ் பிடிடா.."

"சரிப்பா... நீ உட்காரு..."

"பரவாயில்லே... போகப் போக இடம் கிடைச்சிடும்... அம்மாவைப் பார்த்துக்கோ. மாலுக் குட்டி... தூங்கிடாதே.. அம்மாவாலே தூக்க முடியாது கண்ணம்மா..."

"நானும் உன் கூட வர்றேம்பா..."

ஏழு வயதுச் சிறுமி, தாயின் பிடியிலிருந்து திமிறிப் பார்க்கிறாள். பெற்றவள், மகளை ஓர் அதட்டல் போட்டு விட்டு, ஜன்னல் பக்கம் சிரமப்பட்டு எம்பிக் குதித்துக் குதித்துச் சொல்கிறாள்.

"பணம் போனாப் போகட்டும்... அவருக்கு ஆஸ்பத்திரிதான் வசதியா இருக்குன்னா இருக்கட்டும். இத்தனை நாள் செலவழிச்சாச்சு. கடைசி காலத்துல போய் கையைச் சுருக்கி, கஞ்சப் பட்டம் வாங்கிக்க வேண்டாம்."

"நான் வாயைத் திறக்க மாட்டேன்..."

"உங்க பையில கங்கை செம்பு வச்சிருக்கேன். போய்ச் சேர்ந்ததும், அப்பா வாயில ரெண்டு ஸ்பூன் விட்டுடுங்கோ..."

அனுராதா ரமணன்

''ஆகட்டும். நீ ஜாக்கிரதை... பணம் போதுமா?''

''ஒரு ராத்திரிதானே. சமாளிச்சுப்பேன்...''

மீரா, கீர்த்திக்கு மட்டும் கேட்கும் தொனியில் ரகசியமாய்ச் சொல்கிறாள்.

''சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்கிறது கொஞ்சம் கூட நன்னாயில்லே..''

''எனக்கும் தெரியறது... சண்டைய ஆரம்பிச்சிட்டேன். எங்கே நிறுத்தறதுன்னு தெரியலையே...''

அவனும் அதே தொனியில் சொல்கிறான்.

மீராவுக்குச் சிரிப்பு அடக்க மாட்டாமல்...

''இந்த ஒரு விஷயத்துல மட்டும், நீங்க அச்சு அப்படியே நாகு மாமாதான். சரி... வழி விடுங்கோ...''

''என்ன மீரா இது...''

அவள் பதில் பேசாமல், கையில் எடுத்த





''வேறே ஒண்ணுமில்லே...
அவருக்குக்
குடைச் சின்னம்.''

பிளாஸ்டிக் கூடையுடன் எழுந்திருக்கிறாள்...

''இது என்னத்துக்கு?''

''உம். உங்க வேஷ்டி, பாலிகைக் கிண்ணம்... வாட்டர் பாட்டில்...''

''எனக்குத் தாகமெடுத்தா?''

''எழுந்து வந்து கேளுங்கோ...''

அவள், அவனை ஜன்னலோரத்திற்கு நகரச் சொல்லி விட்டு, தன் ஸீட்டை விட்டு வெளியே வர முயற்சி செய்ய, உட்கார்ந்த நிலையிலேயே கீர்த்தி, அவளின் சின்ன இடுப்பில் உதட்டால் உரசுகிறான்...

'குப்'பெனச் சிலிர்த்துப் போகிறாள் மீரா. அவனைப் பொய்யாய் முறைக்கிறாள். அவனோ, உதட்டைத் தேய்த்தபடி அப்பாவி யாய்க் கேட்கிறான்.

''கூடைய நான் கொண்டு வந்து வைக்கட்டுமா?''

''ஒண்ணும் வேண்டாம்...''

அவள், பின் ஸீட்டுக்குப் போகும் போது, இவர்களின் பிரிவுக்குக் காரணமாய் இருந்த மனிதர், வியர்வை வழிய, 'தாங்க்ஸ்' சொல்கிறார்.

தர்மராஜன் சிறிது நேரம் இவர்களை முறைத்துப் பார்த்து விட்டு, பேச்சை மாற்று கிறார்.

''என்னப்பா கண்டக்டர்...; திருவிளை யாடலைத் தவிர வேற எதுவும் போட மாட்டியா... உன் பஸ்ஸில ஏறி, ஏறி, எனக்குத் திருவிளையாடல் வசனம் பூரா மனப்பாடமாயிடுச்சேப்பா...''

''அய்யா வரப் போறீங்கன்னு வண்டி கிளம்பறப்பதானே சொன்னாங்க... முன்னாலேயே தெரிஞ்சிருந்தா வேற படம் கொண்டாந்திருப்பேன்...''

மீரா, பஸ்ஸின் கடைசி ஸீட்டுக்கு முன்னால் இருந்த காலி ஸீட்டில் போய் உட்காருகிறாள்.

ஜன்னலோரமாய்க் கைக்குழந்தையுடன் - கறுப்புச் சிலையாய் கிராமத்துப் பெண்.

தன்னை முன்னிட்டுத்தான் பஸ்ஸில் இத் தனை தகராறே ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாதவளாய் - முகம் முழுக்கச் சிரிப்பாய், டீ.வி. திரையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

''அதுல என்ன... சினிமாப் போடு வாங்களா?''

''ஆமா.''

''இங்கிட்டிருந்து பார்த்தா நல்லாத் தெரியுமா?''

''நல்லாவே தெரியும்.''

''ஆங்...''

அவள், மீண்டும் ஒரு முறை, முதுகை நிமிர்த்திப் பார்க்க, அது நேரம் வரையில் தாயின் மார்பில் தலை புதைத்திருந்த கறுப்புக் குழந்தை, தன் சொர்க்கம் பறி போன பதைப்பில் வீறிடுகிறது...

''ஜோ... ஜோ... அழாதே ராசா. அங்கிட்டுப் பார்த்தியா. படம் காட்டப் போறாங்க. அப்பாரு கிட்டச் சொல்லுவியா... நானும் ஆத்தாளும் பஸ்ஸில் படம் பார்த்தோமின்னு... என் கண்ணு... பொட்டித் தங்கம்... காராம் பசு...''

மீராவுக்குச் சினிமாவை விட, அருகிலிருப்பவளின் பேச்சே ரசனைக்குரியதாய் இருக்கிறது.

கையிலிருந்த பிளாஸ்டிக் கூடையை இன்னும் கீழே வைக்கவில்லை. அதிலிருந்து, இரண்டு 'முறுக்கையும், அதிரசத்தையும் எடுத்து, பக்கத்திலிருந்தவளிடம் கொடுக்கிறாள்.

''யாருக்குத் தாயீ?''

''உனக்குத்தான்.. குழந்தை சாப்பிடுமா?''

''அது இன்னும் பால் குடிதான் தாயீ. ஆறு மாசம்தான் ஆகுது. அதும் அப்பாரு பட்டணத்துல கப்பல் நிறுத்தற டேசன்லே வேலை பார்க்கறாரு.... இங்கிட்டு என் தங்கச்சிக்குப் பாக்கு வெத்தலை மாத்தினாங்க... அவரு வர முடியலே... என்னைய அனுப்பப் பிரியமே இல்லேதான். பச்சைப் புள்ளக்காரியின்னு... நான்தான் மூணு நாளு அழுது, ஆகாத்தியம் செஞ்சி புறப்பட்டுட்டேன். நீங்களும் கல்யாணத் துக்குத் தான் வந்தீங்களா?''

''இப்பத்தான் கல்யாணமே முடிஞ்சிருக்கு... இன்னும் பத்து நாள் கூட

கல்விச் செலவு குறித்துக் கவலையே இல்லை!

நன்றி!
இந்திரா விகாஸ் பத்திரத்திற்கு



20% உயர்வட்டி

நீங்கள் ரூ.500/- மட்டுமே செலுத்தி ரூ.1000/- மதிப்புள்ள இந்திரா விகாஸ் பத்திரம் வாங்கலாம். ஐந்தே ஆண்டுகள் பொறுத்திருந்து அப்பத்திரத்தை திருப்பிக் கொடுத்து ரூ.1000/- பெற்றுக் கொள்ளலாம்.

ரூ.200, ரூ.500, ரூ.1000, ரூ.5000 ஆகிய மதிப்புகளில் இந்திரா விகாஸ் பத்திரங்களை எந்த அஞ்சலகத்தில் வேண்டுமானாலும் பாதித் தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்திரா விகாஸ் பத்திரம் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பரிசளிக்க உகந்தது.

மகனின்/மகளின் திருமணத்திற்கும் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அளிப்பதற்கு ஏற்ற பரிசு இந்திரா விகாஸ் பத்திரங்கள்.

- இந்திரா விகாஸ் பத்திரங்கள் வாங்கத் தனியாக விண்ணப்பப் படிவம் ஏதும் தேவையில்லை.
- உச்சவரம்பு ஏதுமின்றி தனிநபர்களும் நிறுவனங்களும் எவ்வளவு பத்திரங்கள் வேண்டுமானாலும் வாங்கலாம்.
- 20% உயர்வட்டி உங்கள் முதலீட்டை ஐந்தே ஆண்டுகளில் இரட்டிப்பாக்கி விடுகிறது.
- இந்திய அரசு அளிக்கும் உத்தரவாதம் உங்கள் முதலீட்டுக்கு உறுதியான பாதுகாப்பு.
- பத்திரங்களை அடமானம் வைத்து வங்கிகளில் கடனுதவி பெறலாம்.

முதலீடு இரட்டிப்பாகும் விதம்
5 ஆண்டுகளில் ரூ. [illegible]/- ரூ. [illegible]/- ஆகிறது
5 ஆண்டுகளில் ரூ. [illegible]/- ரூ. [illegible]/- ஆகிறது
5 ஆண்டுகளில் ரூ. [illegible]/- ரூ. 1,000/- ஆகிறது
5 ஆண்டுகளில் ரூ.[illegible]/- ரூ. [illegible]/- ஆகிறது
5 ஆண்டுகளில் ரூ.[illegible]/- ரூ.10,000/- ஆகிறது

பயனளிக்க பாதுகாப்பான முதலீட்டுக்கு இந்திரா விகாஸ் பத்திரங்கள்!

அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

தேசிய சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வீர்

அனைவருக்கும் ஏற்ற முதலீடு

கிசான் விகாஸ் பத்திரங்கள்



உச்சவரம்பு ஏதும் இன்றி எவ்வளவு தொகை வேண்டுமானாலும் முதலீடு செய்வதற்கு ஏற்றவை கிசான்விகாஸ் பத்திரங்கள்.

கிசான் விகாஸ் பத்திரங்களில் உங்கள் முதலீடு 18.18% உயர்வட்டி பெற்று ஐந்தரை ஆண்டுகளில் இரட்டிப்பாக அதிகரிக்கிறது.

முதலீடு செய்த இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் தேவைப்பட்டால் முதலீட்டை வட்டியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

- கிசான் விகாஸ் பத்திரங்கள் ரூ.100, ரூ.1000, ரூ.5000, ரூ.10,000 என்ற மதிப்புகளில் எல்லா அஞ்சலகங்களிலும் கிடைக்கும். எந்த அஞ்சலகத்தில் வேண்டுமானாலும் பத்திரங்களை ஒப்படைத்து உரிய தொகையினைப் பெறலாம். ஓர் அஞ்சலகத்தில் வாங்கிய பத்திரங்களை இந்தியாவில் உள்ள எந்த அஞ்சலகத்திற்கும் மாற்றும் செய்யலாம்.
- பத்திரங்களை அடமானம் வைத்து வங்கிகளில் கடனுதவி பெறலாம்.
- பத்திரங்களுக்கு வாரிசுதாரரை நியமிக்கலாம்.
- தனிநபர்கள் மட்டுமின்றி நிறுவனங்களும் வாங்கிப் பயனடையலாம்.

காலம் (மாதங்களில்) 1	கிசான் விகாஸ் பத்திர வட்டி விகிதம் (சதவிகிதத்தில்) 2	கிடைக்கும் தொகை (ரூ.1000/- முதலீட்டுக்கு) 3
30	11. 2	ரூ.1300/-
36	12. 7	ரூ.1380/-
42	13. 0	ரூ.1450/-
48	14. 8	ரூ.1590/-
54	15. 3	ரூ.1690/-
60	17. 6	ரூ.1880/-
66	18.18	ரூ.2000/-

வங்கிகள், தனியார் முதலீட்டு நிறுவனங்களை விடக் கூடுதலான சலுகைகள்!

இந்திய அரசு உத்தரவாதமளிக்கும் முழுபாதுகாப்பான முதலீடு!

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002
தொலைபேசி: 840223/846209.

கிசான் விகாஸ் பத்திரங்கள் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்.

DIPR: 978 MS/91 Efficient

ஆகல்லே...''

இதைச் சொல்லும் போதுதான் திடீரென மீராவுக்கு வெட்கம் பற்றிக் கொள்கிறது...

அந்தப் பெண் குறுகுறுவென மீராவையே பார்க்கிறாள்.

''அடுத்த வருசம், இது மாதிரி ஒண்ணு பெத்துக்க. சும்மா தள்ளிப் போடாதே... வயசாகிப் பிள்ளைப் பெத்தா, பிள்ளையும் ஆரோக்கியமா இருக்காது... எங்கே, பால் சுரப்பே வத்திடுமில்லே...''

பேசிக் கொண்டு போனவள் - ரொம்பவும் பழகியவள் மாதிரி, மீராவின் காதோடு கிசுகிசுக்கிறாள்:

''நீங்க எல்லாம் பட்டணத்துப் பொம்பிளைங்க... தாய்ப் பாலு கொடுப் பீங்களா?''

''......''

''அய்யே, கேட்கறேனில்லே... புள்ளை பொறந்து, பெத்தவ பால் கொடுக்கறதுல இருக்கற நிம்மதியும், சுகமும் வேற' எதுலேயும் இல்லே ஆத்தா... பாருங்க... பாருங்க... கடிக்கறான் இப்பவே... எனக்கு இவன் பொறந்தப்ப மூணு நாளு பாலே இல்லே... 'ஓ'ன்னு அழுவேன்.... என் ஆத்தாதான்... வெள்ளைப்பூண்டும், சோம்பும் கசாயம் வச்சுக் கொடுத்துக் கொடுத்து...''

மீரா, சிரிப்பைக் கைக்குட்டையில் அடக்கிக் கொண்டாள்.

வீடியோவில் திருவிளையாடல்....

முத்துராமன், சாம்பிராணி புகை போட்ட தேவிகாவின் கூந்தலை முகர்ந்து பார்த்துக் கொண்டிருக்க....

மீரா, மஞ்சள் படர்ந்த புது வேஷ்டியை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறாள்.

ஒன்பது மணிக்கெல்லாம் தூங்குகிறவள் இல்லை... ஆனாலும் இந்தப் பத்து நாள் அலைச்சலில், கண்களும், உடம்பும் கெஞ்சு கின்றன.

தூக்கமுமில்லாத, விழிப்புமில்லாத இரண்டுங்கெட்டான் நிலையில் அவள் மிதக்கிறாள்.

பொதிகை மலையிலிருந்து புறப்பட்ட தென்றலையும் தாண்டி, பக்கத்து வீட் பெண்ணின் குழந்தை பால் குடிக்கும் ஓசை....

மீராவுக்கு நெஞ்சு குறுகுறுப்பது போல ஒருவிதப் பிரமை...

அடுத்த வருஷம் இந்த நாளுல குழந்தை பெத்துக்கப் போறேனா....?

'ஆமா.... எத்தனை பெத்துக்கப் போறோம்..? பிள்ளையோ - பொண்ணோ ஒண்ணு... ஸிஸேரியன் கூடாது... வலிக்கணும். இடுப்பு வலியின்னா என்னன்னு தெரிஞ்சுக்கணும். இவர், என் பின்னாலேயே கையைப் பிசைஞ்சிட்டு, 'மீ ரா ரொம்ப வலிக்கிறதா'ன்னு கேட்டு, சுத்திச் சுத்தி வரணும்...

'அப்புறம்... நானும் இவளை மாதிரி நானே என் குழந்தைக்கு...'

மீரா தூக்கத்தில் புன்னகை செய்கிறாள். நடுவே ஒரு முறை விழிப்பு வந்த போது, கையிலிருந்த முகூர்த்த வேட்டியில், முகத்தில் துளிர்த்த வியர்வையை ஒற்றி எடுக்கிறாள். கையை உயர்த்தி மணி பார்க்கிறாள்.

மணி ஒன்பதே கால்தான்...

சின்ன ஒளிச் சதுரத்தில் சிவாஜி, நாகேஷிடம் உறுமிக் கொண்டிருக்கிறார்:

''கேள்வியை நீ கேட்கிறாயா... அல்லது நான் கேட்கட்டுமா...''

அவ்வளவுதான்...

அடுத்த கணம் -

மொத்தமாய் ஏழெட்டு இடிகள் ஒரே இடத்தில் ஒட்டுமொத்தமாய் விழுந்தது போன்ற பெரிய முழக்கம்...

இமைப் பொழுதுக்குள் பெரிய நெருப்புப் பந்துக்குள்ளிருந்து சின்னச் சின்ன தீக் கோளங்களாய்ப் பயணிகள் வெடித்துச் சிதறுகிறார்கள்...

''ஐயோ!''

''அம்மா... ம்மா...''

''செத்தேன்...''

''ஓ...ஓ...ஓ...ஓ...''

பஸ் அந்த ராத்திரிப் பொழுதில் நினைத்தாற்போலிருந்து தீபாவளி கொண் டாடுகிறது!

(தொடரும்)



"கட் ஆன கரெண்ட் வரும்வரை பெடலை மிதிச்சுக்கிட்டே இருங்க! டைனமோ லைட்டாவது எரியட்டும்..."



அவன் கேட்ட கேள்வி

கே.கந்தவேல்

பங்களாவின் போர்டிகோவில் டாக்ஸி நிற்க, அசோக் அம்மாவுடன் இறங்கிக் கொண்டான்.

''வாங்க! வாங்க!'' — பெண்ணின் அப்பா நமஸ்கரித்து வரவேற்றார்.

அசோக் உதடுகளில் வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் உள்ளே நுழைந்தான். குனிந்த தலைநிமிராது அம்மாவும் உள்ளே நுழைந்தாள்.

சோபாக்களில் அமர்ந்து கொண்டார்கள். அசோக் பங்களாவை ஆராய்ந்தான். நல்ல வசதியான இடம்தான். இந்த மாதிரியான பங்களாக்களை அவன் சினிமாக்களில்தான் பார்த்திருக்கிறான். இப்படி ஒரு பெரிய இடத்துக்கு மாப்பிள்ளையாக வருவதென்றால்....?

காரணம் அவனது உத்தியோகம்! பேங்கில் அவன் பார்க்கும் மானேஜர் உத்தியோகம்! மாதம் பிறந்தால் களையாய் நாலாயிரம் கொடுக்கும் உத்தியோகம்!

''பொண்ணை வரச் சொல்லுங்களேன்,'' அம்மாதான் சொன்னாள்.

அசோக் கவனம் கலைந்தான்.

அடுத்த சில வினாடிகளில் அவள் வந்தாள். பிரமிக்க வைக்கும் அழகு. தலை குனிந்து நடந்து வந்தவள் எதிர்ச் சோபாவில் தயக்கமாய் அமர்ந்து கொண்டாள்.

''பேரு மாலதி. பொண்ணைப் பிடிச்சிருக்கா?'' — பெண்ணின் அப்பா கேட்டார்.

அம்மா பூரிப்பாய்த் தலையாட்டினாள்.

''மாப்பிள்ளை ஏதும் சொல்லலையே!''

''ம்,'' என்று ஒற்றை எழுத்தில் சம்மதம் சொன்னான்.

''அப்ப... மற்ற விஷயங்களைப் பேசிடலாமா...?'' பெண்ணின் அப்பா ஒரு மாதிரியாய் இழுத்தார்.

''இதோ பாருங்க. வரதட்சணைங்கிற பேச்சே வேணாம். நிறைஞ்ச புன்னகையோட உங்க பொண்ணு மகாலட்சுமி மாதிரி எங்க வீட்டுக்கு மருமகளா வந்தாப் போதும்.''

''நீ சும்மாயிரும்மா,'' அசோக் இடைமறித்தான்.

''இதோ பாருங்க சார். கல்யாணம்னு வந்தாச்சு. பேச வேண்டியதை இப்பவே தீர்மானமாப் பேசிடறது நல்லது. வெளிப்படையா கேட்கறேன். உங்க பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா எனக்கு எவ்வளவு கிடைக்கும்?''

அவருக்குக் கொஞ்சம் திகைப்பாயிருந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு சொன்னார்.

''அறுபது பவுன் நகை போடறதா இருக்கேன். ரொக்கம் ஐம்பதாயிரம் கொடுத்துடறேன். மற்றபடி சீர்வரிசை எல்லாம் நீங்க எதிர்பார்க்கிறதை விடச் சிறப்பாவே செய்வேன்.''

''போதாதே!''

''நீங்க எவ்வளவு எதிர்பார்க்கிறீங்க?'' அதிர்ச்சியுடன் கேட்டார்.

''நகை நூறு பவுனாவது வேணும். தவிர, பணம் ஒரு லட்சம்!''

''அ.... அவ்வளவுக்கு எனக்கு வசதியில்லையே...''

''அப்ப விடுங்க. வேற இடம் பாருங்க.''

''அப்படிச் சொல்லக் கூடாது. கொஞ்சம் தயவு பண்ணணும்.''

''முடியாது. எழுந்திரும்மா. போலாம்.''

அசோக் சோபாவை விட்டு எழுந்து கொள்ள, அதுவரை வாய் மூடி மௌனியாய்த் தலைகுனிந்து அமர்ந்திருந்த மாலதி கோபம் வந்து நிமிர்ந்தாள். அசோக்கை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

''மிஸ்டர்! ஒரு நிமிஷம்!''

''என்ன?'' அசோக் அலட்சியமாய்க் கேட்டான்.

''உங்களுக்கு வெட்கமாயில்லை?''

''ஏன் வெட்கப்படணும்?''

''உத்தியோகத்தைக் காரணமா வச்சுக்கிட்டு, உங்களை நீங்களே விலை பேசிக்க உங்களுக்கு வெட்கமாயில்லை?''

அசோக் சிரித்தான்.

''மிஸ் மாலதி! உங்க பங்குக்கு நீங்க பேசிட்டீங்க. இனி என் பங்குக்கு நான் பேச வேணாமா? இதோ இருக்காரே உங்கப்பா... இவர் வேணா என்னை மறந்திருக்கலாம். ஆனா என்னால் இவரை மறக்க முடியாது. மூணு வருஷத்துக்கு முன்னாலே நான் வேலை தேடி நாயா அலைஞ்சப்ப, உங்கப்பா ஜெனரல்மானேஜரா இருக்கிற அதே கம்பெனியில் எனக்கு ஒரு வேலைக்கு இண்டர்வியூ வந்திச்சு. இண்டர்வியூ பண்ணினது வேறு யாருமில்லை. உங்கப்பா தான். வேலை கொடுக்கணும்னா பத்தாயிரம் லஞ்சம் கேட்டார். அத்தனை பணத்துக்கு நான் எங்கே போறது? பணம் கொடுக்காத ஒரே காரணத்துக்காக தகுதி இருந்தும் என்னை நிராகரிச்சுட்டுத் தகுதியே இல்லாத ஒருத்தனுக்கு உங்கப்பா வேலை போட்டுக் கொடுத்தார். அதுக்கப்புறம் நானே கஷ்டப்பட்டுப் படிச்சுத் தேர்வு எழுதி இந்த பேங்க் வேலை கிடைச்சது. இப்பச் சொல்லுங்க. உங்கப்பாகிட்ட நான் பேரம் பேசினது தப்பா? யூ நோ... ஒரு பைசா வரதட்சணை வாங்கிக்காம ஓர் ஏழைப் பெண்ணைக் கட்டிக்க நான் தயார். ஆனா லட்சம் லட்சமாக் கொட்டிக் கொடுத்தாலும் இந்த மாதிரி ஒரு பெரிய மனுஷன் வீட்டுப் பொண்ணைக் கட்டிக்க மாட்டேன். குட் பை! வாம்மா போலாம்.'' ஆக்ரோஷமாய்ச் சொல்லி விட்டு நடந்தான் அசோக்.

டாக்டர் பதில்கள்:

வழுக்கை விழுவதற்கு என்ன காரணம்?

● **சி. கார்த்திகேயன், நெய்விளக்கு:**

வழுக்கை விழுவதற்கு என்ன காரணம்? பெண்களுக்கு மட்டும் வழுக்கை விழுவதில்லையே, ஏன்?

●● **மிஸஸ். ஜெயஸ்ரீ சங்கர், சென்னை — 28.**

ஆண்களுக்கு வழுக்கை என்பது செக்ஸ் ஜீன் தாக்கத்தினால் ஏற்படும் குறை. ஆண்களுக்கு குரோமோசோம்களில் ஒரு வகை ஜீன் இருந்தால் போதும். மற்ற ஆன்ட்ரோஜென்களுடன் சேர்ந்து வழுக்கையாகி விடுவதற்கு. அதுவே, பெண்களுக்கு என்றால் இரண்டு வகை ஜீன்கள் இருந்தால்தான் வழுக்கை விழும். இது மிக மிக அபூர்வம். அதனால்தான் பெண்களுக்கு, ஆண்களைப் போல் வழுக்கை விழுவதில்லை. ஆனால், ஆண்களும் கூட வம்ச வாரிசாக விழும் வழுக்கையைத் தவிர்க்க முடியாது.

● **பி. முனுசாமி, பெங்களூர் — 21.**

ஆஸ்துமா என்பது எப்படி வருகிறது? இதன் அறிகுறிகள் என்ன? இதை ஆரம்பத்திலேயே மீண்டும் வராமல் தடுக்க முடியாதா?

●● **டாக்டர். சந்திரசேகர சாண்டில்யா, சென்னை — 28.**

ஆஸ்துமா என்பது, ஒரு வகை அலர்ஜியினால் மூச்சுக் குழாய்கள் தாற்காலிகமாகக் குறுகி விடுவதால் தாக்கும் நோய். அந்த மூச்சுக் குழாய்க்குள் உள்ள ஜவ்வுத் தோல் வீங்கி விடுவதாலும், நெஞ்சில் சளி இறுகி விடுவதாலும், மூச்சுக் காற்றைக் கொண்டு செல்லும் சிறிய குழாய்கள் (Bronchioles) போதிய அளவு பிராண வாயுவை நுரையீரலுக்குச் செலுத்த முடியாது போகிறது. இதனால் ஏற்படும் தாற்காலிகமான உபாதையே ஆஸ்துமா. மூச்சு முட்டுதல், அல்லு மாந்தம் (குழந்தைகளுக்கு) போன்றவைதான் அறிகுறிகள். மீண்டும் வராமல் ஆரம்பத்திலேயே தடுக்க, ஈஸனோஃபீலியா, மற்றும் பாக்டீரியா கிருமிகளின் தொற்று போன்றவற்றை அகற்ற வேண்டும். பல நாட்கள் ஆஸ்துமா உடலில் இருந்தால், முற்றிலும் குணப்படுத்த முடியாது. மூச்சு முட்டுதலைக் குறைத்து ஓரளவு நிவாரணம் தர பலவித மருந்துகள் உள்ளன.

தொகுப்பு: எஸ். வி. என்.



சசிகலாவே சகுனம்




ஏழில் நம்பிக்கை




பெரியார் இவர்களை மன்னிக்கட்டும்!

சாதாரண மனிதர்களுக்குள்ள மூடநம்பிக்கைகள் போலவே, அரசியல்வாதிகளுக்கும் உண்டு. அவர்களும் ஜோஸ்யர்களையும் மந்திரவாதிகளையும் தேடி ஓடுகிறார்கள். சமீபத்தில், பார்த்தசாரதி என்ற ஜோஸியர், தம்மிடம் வந்த பிரபலஸ்தர்களின் பட்டியல் ஒன்றைப் பத்திரிகைகளில் கொடுத்திருந்தார். அதில் அரசியல்வாதிகளின் பட்டியல்தான், திரையுலகப் பிரமுகர்களின் பட்டியலுக்கு அடுத்தபடி, நீண்டதாக இருந்தது.

இனிஷியல் மாற்றம்



இரக சாந்தி மோதிரம்



தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பயின்றதாகச் சொல்லிக் கொண்டாலும், தி. மு. க. வினரும் அ. தி. மு. க. வினரும் மூடநம்பிக்கைகளை விட்டு விடவில்லை. எம்.ஜி.ஆர். ஏழு என்ற எண்ணில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால் காருக்கு 'ஏழு' என்ற எண் வரும்படி பார்த்துக் கொண்டார். பிரசாரம் போன்றவற்றை ஏழாந் தேதியிலோ அல்லது கூட்டுத் தொகை ஏழு என்று வரும் தேதிகளிலோதான் ஆரம்பித்தார்.

ஜெயலலிதாவுக்குப் பிடித்த எண் ஒன்பது. அவர் பிரசாரம் செய்யும் வேன் நம்பர் 7200. கூட்டினால் ஒன்பது. இந்தத் தேர்தலில் அவரது கட்சியில் நிற்க வைக்கப்பட்டிருக்கும் அ. தி. மு. க. வேட்பாளர்களின் எண்ணிக்கை 162. கூட்டினால் ஒன்பது. அவர்



பேசும் மேடைகள் 9X9 என்ற அளவில்தான் போட வேண்டும் என்பது அவரது உத்தரவு. பிரசாரம் ஆரம்பித்த தேதி, 21.4.1991. கூட்டு எண் ஒன்பது! ஜெயலலிதாவுக்கு இன்னொரு விநோதமான நம்பிக்கை, சசிகலா எதிரில் வந்தால் போகும் காரியம் வெற்றி பெறும் என்பது. அதனால் தேர்தல் பிரசாரத்துக்கு ஜெயலலிதா கிளம்பும் போது, சசிகலா, வேனின் எதிர்ப்புறத்திலிருந்து நடந்து வந்து தான் ஏறிக் கொள்வார்!

'ஒன்பது' பைத்தியம் இந்த முறை தி. மு. க. வைக் கூட விட்டு வைக்கவில்லை. அவர்கள் நிறுத்தி வைத்திருக்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 171. கூட்டு எண் ஒன்பது. தி. மு. க. வினர் வேட்பு மனுதாக்கல் செய்யும் போது அஷ்டமி, நவமி பார்த்தனர். செவ்வாய்க் கிழமை வேண்டவே வேண்டாம் என்றனர்.

கலைஞர் குடும்பத்தினர் தீவிர கடவுள் பக்தர்கள் என்பது தெரிந்த விஷயம். கலைஞர் வெற்றி பெற வேண்டுமென்று சிறிது நாட்களுக்கு முன்னர், தங்கள் குலதெய்வம் உள்ள கோயிலுக்குச் சென்று வந்தார் தயாளு அம்மையார். வேட்பாளர் பட்டியல் வெளியிடும் முன்னர், தமது தமக்கையிடம் (மாறனின் தாயார்) பட்டியலைக் கொடுத்து, ஆசீர்வாதம் வாங்குபவர் கலைஞர்.

பெரியார் கொள்கைகளில் முழுதும் ஊறியவர் என்று சொல்லப்படும் அன்பழகன் கூட தமது விரலில் ஒன்பது கல் கொண்ட கிரக சாந்தி மோதிரம் அணிந்து கொண்டிருக்கிறார். நாஞ்சில் மனோகரன் பார்த்தசாரதி பெருமானைச் சேவித்து விட்டுத்தான் பிரசாரத்தை ஆரம்பிக்கிறார்!

அரசியல்வாதிகள் எண் கணிதப்படி பெயரில் முன்னால் உள்ள இனிஷியல்களையும் மாற்றிக் கொள்கிறார்கள். உதாரணமாக, டி. தங்கபாலு, இப்போது கே. வி. தங்கபாலு ஆகி விட்டார்! ஜானகி அம்மையார், தாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் நாமக்கல்லில் உள்ள ஜோஸ்யர் ஒருவரைக் கேட்டுக் கொண்டுதான் செய்வார்.

சமீபத்தில் ஈரோட்டில், காங்கேயம் தொகுதிக்கான தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய வந்திருந்த ஜெ. மனுவில் கையெழுத்திடும் போது, இரண்டு பேனாக்கள் தகராறு செய்தன. மூன்றாவதாகக் கிடைத்த பேனாவில் கையெழுத்துப் போட்டார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கட்சிக்காரர் ஒருவர், முகத்தைத் திருப்பிக் கொண்டு 'என்னங்க சகுனமே சரியில்லையே!' என்றார்!

இவையெல்லாவற்றையும் விட வேடிக்கை என்னவென்றால், வாக்காளர்களைச் சந்திக்க ஆரம்பித்துள்ள பல வேட்பாளர்கள், ''ஞாயிற்றுக் கிழமை 4 1/2 - 6 ராகு காலம்; எமகண்டம் 12 - 1 1/2; அதனால் கடைசி நிமிஷம் வரை காத்திராமல் காலையில் நேரத்தோடு வோட்டுப் போட்டு விடுங்கள்; வெயிலில் வேகவும் வேண்டாம்'' என்று கூறிக் கொண்டிருப்பதுதான்!

– திலீப்பா.

ஃப்ரிஜ் பரிசு: கூப்பன் நெ. 4

நேற்று வரை நந்தவனம் தொடர்கதையில் ஒவ்வொரு வாரமும் வேண்டுமென்றே ஒரு தவறு செய்து விடுகிறோம். இந்த இதழில் என்ன? அதைக் கண்டுபிடித்துக் கீழே எழுதுங்கள். திருத்தத்தையும் கொடுங்கள். கூப்பனைக் கத்திரித்துப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். கதை முடியும் வாரம் எல்லாக் கூப்பன்களுடன் 5 – 10 வரி விமர்சனமும் எழுதி அனுப்புங்கள். ஃப்ரிஜ் பரிசு தவிர ஆறுதல் பரிசுகளும் உண்டு!

தவறு: ____________________

திருத்தம்: ____________________

சாந்தி எனது சாந்தி



தியேட்டரில் சற்றே ஒய்வு நேரத்தில் திருவாளர் மூட்டைப் பூச்சியாரும், மிஸ்டர் சயன்னாவும் எதேச்சையாகச் சந்தித்துக் கொள்கின்றனர்; ''வணக்கம் சயன்னா, வெளியில ஒரே சிலன் மயம். மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஜூஸ்னு.. அத விட்டுட்டுத் தியேட்டருக்கு.. ஒருவேளை நீங்க ராஜேந்தர் ரசிகரோ?''

வாயைச் சுழித்து, புன்னகைக்கிற பாவனை காட்டுகிறார் சயன்னா. பதில் பேசுகிறார். ''அவ்.... வணக்கம். எப்படி இருக்கீங்க தம்பி? நீங்க சொன்னது மாதிரி வெளியில சிலன்தான். நா ராஜேந்தர் ரசிகரும் இல்ல. ஆனா குடும்பத்தோட வந்திருக் கேன். ஒரு காரணத்தோட!''

மூட்டையார் உற்சாகமாகிறார்! 'அப்போ மத்தவங்க எல்லாம் எங்கே? அது என்ன விசேஷ காரணம்?''

''சொல்றேன் தம்பி சொல்றேன். அதுக்கு முன்னால படம் எப்படி? தினமும் அத்தினி காட்சியும் இருந்து பார்க்கறவனாச்சே நீ.''

''அத ஏண்ணே கேக்கறீங்க? டி. ஆர். அரசியல் போர்க்களம் புகும் நேரமாச்சே, தன்னோட இமேஜை நிறுத்தித் தட்டு வாங்கறத்துக்காகவாவது ஒரு நல்ல படம் எடுத்திருப்பார்னு ஆவலோட இருந்தோம். படம் ஒரு பப்படம்.''

''அப்படியா தம்பி?''

''ஆமாண்ணே, பார்க்கப் பார்க்க பளிங்கு மாளிகையே பார்வைக்குத் திகட்டி விடுகிறது. இது பபுள்கம் -- அதுவும் மென்று, இனிப்புத் தீர்ந்த பபுள்கம். ஒரே ரீதி பாசம், மோதல், பழிவாங்கல் கதை. அதையும் காதில் மைல்கணக்குப் பூச்சுத்தி எடுத்திருக்கார். முந்தின படத்தில் தங்கச்சி அவர் கச்சி. இதில் செல்லப் பெண்டாட்டி. அதுல சைக்கிள் ஜெயபால் கேரக்டர். இதுல புல்லட் ஜானி. அதே போல அரங்குகள், பையனை வைத்துச் சித்து விளையாட்டு, கண்ணீரும் கம்பலையுமா ராஜேந்தர். அஞ்சகிக்கபின் பாடல்கள். ஹூம்ம்ம்...''

''மெதுவாப் பேசுங்க தம்பி. நான் சிற்பம் வடிச்சிருக்கேன். அதை சில அற்பங்கள் அம்மிக்கல் என்கின்றனன்னு வீராவேசம் பேச ஆரம்பிச்சுடுவார்.''

''தேர்தல் நேரம். நம்பகிட்ட வர நேரம் இருக்காது.''

''அப்போ நல்லது. சரி தம்பி, நா உள்ள வர்ற போது ஒரே கைத்தட்டலா இருந்திச்சே. என்ன காட்சி அது?''

''நீளமா ஒரு காதல் வசனம் பேசறார் டைரக்டர். அதுக்குக் கைதட்டி இருப்பாங்க. அதே மாதிரி கத்திக் குத்துப்பட்ட ராதாவுக்குச் சிகிச்சை தரச் சொல்லி டாக்டர்கள்ட்ட கெஞ்சுவது, இறந்த மனைவியிடம் புலம்புவதுன்னு ஒருசில நல்ல காட்சிகள்னு... படம் கால், தண்டனை முக்கால்னு ஆயிடுச்சுங் களே. இழப்பு எனக்குத்தான்.''

''என்ன இழப்பு தம்பி?''

''படம் நல்லா இருந்தா முழுக்க உக்கார்ந்து பார்த்து ரசிப்பாங்க. தொடர்ந்து கூட்டம் இருக்கும். நமக்கும், நம்ப குடும்பத்துக்கும் தேவையான ஆகாரத்தை உறிஞ்சி வச்சுப்போம். இதில அரை மணியில நெளிய ஆரம்பிக்கறாங்க. இடைவேளையில பாதி ஜனம் பற்றி காணாமல் போனவர் பற்றிய அறிவிப்பு. எங்க திருப்திக்கு நிறையச் சண்டை காட்சிகள். வினோதத் துப்பாக்கி வச்சு மோதல் கொத்துக் கொத்தாய் மரணம்னு திரையில ரத்த ஆறு ஓடுது. உமிழ்நீர் வழியப் பார்த்துப் பெருமூச்சு விடறதோட சரிண்ணே. விடுங்க. நம்ப விதி!''

''புதுமுகங்கள் எப்படி தம்பி?''

''ஆளும் சுமார். அவங்க காதல்லயும் ஒரு அர்த்தம் இல்லை. கிளுகிளுப்புக்குப் பதில் முகச் சுழிப்புத்தான் ஏற்படுது. இருக்கட்டும்ணே. நீங்க குடும்பத்தோட வர்றதுக்கு ஏதோ காரணம்னு...''

''ஆமாம் தம்பி. சாஸ்திரம். தியேட்டர்ல காத்து வாங்கினா 'ஈ' ஓட்டறாங்கன்னு ஒரு சம்பிரதாய வாசகம் சொல்லுவாங்க. அந்த கௌரவத்தக் காப்பாத்திக்க வேணாமா? குடும்பத்தில மத்தவங்க டிக்கட் கவுண்ட்டர்கிட்ட இருக்காங்க தம்பி. வரட்டுமா?''

-- சுந்தர் ஜி

"எதிர்பாராதே துன்பப் படாதே!"

யாரைப் பார்த்தாலும், 'இவர் மூலம் நமக்கு என்ன கிடைக்கும்?' என்று கணக்குப் பார்க்கும் குணம் சிலருக்கு உண்டு. பஸ்ஸில் ஒரு நண்பரைப் பார்த்து 'ஹலோ!' என்று கூறிச் சிரித்தவுடனேயே 'இவன் நமக்கு டிக்கெட் எடுப்பானா?' என்று எதிர்பார்ப்பது சிலரது சில்லறைக் குணம்!

யார் வீட்டிலாவது டெலிபோனைப் பார்த்தால், யாருக்காவது போன் பண்ண வேண்டும் என்று சிலர் பரபரப்பார்கள்! டெக், காமிரா, கார் போன்ற எந்தப் பொருளை யார் வீட்டில் பார்த்தாலும் குறி வைத்துப் பயன்படுத்துவார்கள் சிலர்.

சில பேர் கடவுளைக் கூட இந்த விஷயத்தில் விட்டு வைப்பதில்லை! 'எல்லாம் தனக்குள் என்றிருக்கும் சர்வமகா சத்தியமாகிய இறைவனிடம், இதைக் கொடு, அதைக் கொடு என்று கேட்பது கோடீஸ்வரனிடம் கீரைக்கட்டு யாசிப்பது போல' என்கிறார் இராமகிருஷ்ண குருதேவர்.

எனக்கு ஒரு வேடிக்கையான அனுபவம். ஒரு கோயிலில் நான் பேசிக் கொண்டிருந்த போது, ஒரு பக்தர் பிரதட்சணமாகச் சுற்றாமல் எதிர்த் திசையில் (வலமிருந்து இடம்) சுற்றிக் கொண்டிருந்தார். வேறொருவர் மூலம் தடுத்து நிறுத்தியும் அவர் எதிர்மாறாகச் சுற்றிக் கொண்டிருந்தார். சொற்பொழிவை நிறுத்திவிட்டு, ''ஏன் இப்படி முறை மாறிச் சுற்றுகிறீர்கள்?'' என்றேன். ''என் ஜாதகத்தில் கோளாறு; 108 சுற்று முருகனைச் சுற்றும்படி ஜோசியர் சொன்னார்,'' என்றார்.

''108 முறையும் எதிர்ப் பக்கமாகவா சுற்றச் சொன்னார்?''

''இல்லை... இல்லை... இன்று ஏதோ ஞாபகமாக இருபது சுற்றுக் கூடுதலாகச் சுற்றிவிட்டேன். அது ஏதாவது தவறாகி விடுமோ என்று அதிகமாகச் சுற்றியதைப் பிரித்துக் கழற்றி விடுகிறேன்!'' என்றார்.

பக்தியில் இப்படி அளவு வைத்துக் கொண்டு கும்பிடுபவர்களை நாவுக்கரசர் கண்டிக்கிறார். இத்தனை லட்சம் ஜபம் செய்திருக்கிறேன். இத்தனை சுற்றுச் சுற்றி இருக்கிறேன், இத்தனை நமஸ்காரம் செய்திருக்கிறேன் என்று எண்ணி எண்ணி இறுமாந்து போகிறவர்களைப் பார்த்து 'அன்பில் என்ன அளவு வேண்டிக் கிடக்கிறது?' என்கிறார் நாவுக்கரசர்.

'அளவு படாததோர் அன்போடு ஐயாறு அடைகின்ற போது' என்ற சொல், அளவு படாத அன்பின் பெருமையைப் புலப்படுத்தும். 'உனக்காச்சு எனக்காச்சு'' என்று சகஸ்ரநாமத்தைச் சண்டைக்காரர் போல சத்தம் போட்டு ஊரைக் கூட்டும் சிலரது பக்தி சிந்தனைக்குரியது.

ஸ்ரீபுரத்தில், ரத்ன சிம்மாசனத்தில் ஸ்ரீராஜராஜேஸ்வரி உட்கார்ந்திருந்தாள். அவள் பாத மலர்களை மூடியபடி கோடி கோடி மலர்கள் குவிந்திருந்தன.

நாரத மகரிஷி - அம்பாளைத் தரிசிக்க வந்தவர் - இந்தக் காட்சியைப் பார்த்து அசந்து விட்டார். ''அடேயப்பா! எவ்வளவு மலர்கள்! எவ்வளவு மலர்கள்! அம்மா இவ்வளவு புஷ்பங்களால் உன்னை அர்ச்சித்த அந்த மகராஜன் யார்? குளிர்ந்து போயிருக்குமே!'' என்றார்.

''மகரிஷி! இந்தப் பூக்களால் நான் எவ்வளவு குளிர்ந்து போனேன் என்பதைக் காண உனக்கு விருப்பம் உண்டா?'' என்றாள் பராசக்தி.

''ஆம் தாயே!''

''இந்த மலர்களை உன் கையால் விலக்கி என் பாதங்களைப் பார்'' என்றாள் ஜகன் மாதா. பூக்களை விலக்கிய நாரதர் முகத்தில் 'பகீர்' என்ற கலவரக் கவலை... அதிர்ந்து போனார்.. ஏன்? பராசக்தியின் பாதங்கள் முழுவதும் கொப்புளங்கள்.. முத்து முத்தாக...

''தாயே... இது என்ன அநியாயம்? உன் மேனி புண் படாதே...? எப்படிப் பட்டது? யார் செய்தது இந்த அநியாயம்?'' நாரதர் பதறினார்.

''நாரதா... இந்திரன்தான் என்னை இப்படி பூஜித்தவன். அவன் அர்ச்சித்த பூவிலும் பயங்கர வெப்பம்.. பாதம் புண்ணாகியது!''

''பூவில் எப்படி வெப்பம் வரும்? புரியும்படியாகச் சொல்லுங்கள், தாயே!''

''நாரதா... ஒவ்வொரு பூவையும் அவன் எனக்காகத் தரவில்லை... கோடானு கோடி ஆசைகள் அவனுக்கு. ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு ஆசையை வைத்து என் மீது அர்ச்சித்தான். இவை புஷ்பங்களா? இல்லை; அவனது ஆசை வெப்பங்கள்.''

சுகி சிவம்



மனிதனது ஆசையும் எதிர் பார்ப்பும் கடவுளையே காயப் படுத்தும் என்ற கற்பனை பயங்கரமானது. வாழ்க்கையிலும் சரி; வழிபாட்டிலும் சரி, 'பலனை எதிர்பாராதே' என்ற பகவத்கீதை பலருக்குப் புரிவதே இல்லை!

பக்தி என்பது பின் எப்படி இருக்க வேண்டும்? கந்தபுராணம் இதைச் சரியாக விளக்குகிறது.

சூரபன்மன் மகன் பானுகோபன் பெரிய வீரன். அவனை வெல்வது முடியாத காரியம். அந்தச் செயற்கரிய செயலைச் செய்தவர் முருகனுடைய தம்பி வீரபாகுத் தேவர். வீரபாகு நவசக்தியரில் ஒருவர் மகன் என்பதால் முருகன் தம்பி.

பானுகோபனை வென்று வெற்றிச் செய்தியுடன் முருகனை வணங்குகிறார் வீரபாகு. ஆசி வழங்கிய ஆறுமுகக் கடவுள் கேட்கிறார்:

''வீரபாகு.... செயற்கரிய செய்தாய்... பதவியா! செல்வமா! என்ன வேண்டுமானாலும் கேள்... தருகிறேன்.''

இந்திரபதவி கேட்பாரோ என்று இந்திரனுக்குப் பயம்! பதவியில் இருக்கிற யார் தான் பயமின்றி இருக்கிறார்கள்? குபேரன் செல்வம் கேட்பாரோ என்று குபேரனுக்குப் பயம்! வீரபாகு வாய் மலர்ந்தார்:

''சுவாமி... குபேரன் செல்வம் கனவிலும் நினையேன்; இந்திர பதவி வேண்டேன்.;''

''பின் என்ன வேண்டும்?''

''ஒரே ஒரு வரம் வேண்டும். எப்போதும் உங்கள் திருவடியில் அன்பு செலுத்தும் இதயம் வேண்டும்!''

''தந்தோம்... வீரபாகு... இதைத்தவிர இன்னொரு வரம் கேள்....ம்...'' சோதிக்கிறார் முருகன்!

''சுவாமி... ஆம்... இன்னொரு வரம் வேண்டும். திருவடியில் அன்பு தவிர, இன்னொன்று வேண்டும் என்ற எண்ணமே என் மனத்தில் வராமல் இருக்கும் வரம் வேண்டும்!''

இந்த வீரபாகுவின் அன்புதான் பக்தியின் இலக்கணம். ''மற்றை நம் காமங்கள் மாற்று'' என்ற ஆண்டாளின் ஆன்ம வேட்கை.

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் கோயிலுக்குப் போய் வாருங்கள்... அந்த அனுபவமே ஒரு தனி சுகம் சுவாமி..!

(இன்னும் சொல்வேன்)

சொந்த ஊர் சொர்க்கம்



மாணவர் கட்டுரைப் போட்டி

ரூ. 50 முதல் பரிசு பெறும் கட்டுரை

என் சொந்த ஊரான திண்டுக்கல் என்றும் என் நினைவில் நிறைந்திருக்கக் காரணம் அங்கு கம்பீரமாக உயர்ந்து நிற்கும் மலைக் கோட்டைதான். மலை உச்சியில் ஒரு கோவில் இருக்கிறது. கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகமே இல்லாத அந்தக் கோவில் தான் எனக்கு ஏனோ மிகவும் பிடித்திருக்கிறது. விடுமுறை நாட்களில் புத்தகங்களுடன் மலையுச்சிக்குச் சென்று விடுவேன். மாலை வரை எந்தத் தொந்தரவும் இன்றி மனத்துக்குப் பிடித்த புத்தகம் படிக்கும் சுகம் இருக்கிறதே, அதை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை! எப்போதும் இதமாக வீசும் காற்று, எவ்வளவு வெயிலையும் குளுமையாக மாற்றித் தரும் மண்டபம், ஆழ்ந்து சிந்திப்பதற்கு உகந்த இடம் அது.

மலைக்கோட்டையிலிருந்து அருகிலுள்ள முத்தழகுப்பட்டியைப் பார்க்கும் போது பாரதிராஜா கிராமம் போலத் தோன்றும்! விமானத்திலிருந்து பார்ப்பது போன்ற பிரமை ஏற்படும். ஊருக்கு நடுவில் சிறிதாய் ஒரு தேவாலயம் இருப்பது மிகுந்த அழகு. மாலை வேளையில் நகரின் பல பகுதிகளிலிருந்து ஒலிக்கும் பாடல்கள் எல்லாம் கலந்து கேட்கும். காற்றடிக்கும் திசையைப் பொறுத்து, தேவாலயப் பாடலும் மாரியம்மன் கோவில் பாடலும் மாறி மாறிக் கேட்கும்!

அந்தி வேளையில் மலைக்கு அந்தப்புறம் சூரியன் அஸ்தமிப்பதைக் காண்பது ஒரு வசிகரமான அனுபவம். எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காதது. ஒவ்வொரு நாளும் வித்தியாசமான வண்ணக் கோலங்களை வானில் தீட்டும் கதிரவன் மறைந்த பின்பு, பகலும் இரவும் சந்திக்கும் அந்தச் சில நிமிடங்கள் உன்னதமானவை. நகரம் மெல்ல மின்னொளி வெள்ளத்தில் மூழ்கத் தொடங்கும். அதற்கு மேல் இரவும் அங்கேயே கழிக்க ஆசைதான். ஆனால் வாட்ச்மேன் வலுக்கட்டாயமாகப் பிடித்து வெளியேற்றி விடுவார்!

இறங்க மனமின்றி இறங்கிய பின்பும் மலைக்கோட்டையை ரசிக்கும் படலம் முடிவுறாது. மலைக் கோட்டையைச் சுற்றியுள்ள பாதையில் நிதானமாக ஒரு நடை போட்டு, பின்னால் உள்ள அமைதியான கோவில் ஒன்றில் சற்று நேரம் அமரலாம். மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள கர்ப்பக்கிரகம் கண்கொள்ளாக் காட்சி.

மலைக்கோட்டை உச்சியிலிருந்து ரசிப்பது ஒரு வகை என்றால், நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து மலைக்கோட்டையை ரசிப்பது மற்றொரு வகை. உதாரணமாக டட்லி ஸ்கூல் அருகில் நின்று பார்க்கும் போது சர்ச்சின் இரண்டு கோபுரங்களுக்கு நடுவில் மலைக்கோட்டை உச்சியிலிருக்கும் கோவில் தெரியும். நான் மெய்மறந்து இந்தக் காட்சியை ரசிக்கும் வேளையில், பலருடைய கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளாகியிருக்கிறேன். என் நண்பன் ஒருவன் தங்கம் லாட்ஜின் கடைசி மாடியில் தங்கியிருந்தான். திண்டுக்கல் நகரில் ஓரளவுக்கு உயரமான அந்த இடத்திலிருந்து பார்க்கும் போது, மலைக்கோட்டையின் முழுப் பரிமாணத்தையும் உணர முடியும். நான் அவனிடம் நட்பு ஏற்படுத்திக் கொண்டதே இந்த மலைக் கோட்டை தரிசனத்துக்காகத்தான்!

ஒரே ஒரு நாள் மட்டும் மலைக் கோட்டையின் அமைதி கெட்டு விடும். கார்த்திகையன்று அங்கு ஏராளமான கூட்டம் வந்து விடும். விளக்கு அலங்காரம்



நடைபெறும். அன்று மட்டும் என் பிரிய மலைக் கோட்டையைத் தூரத்திலிருந்து தரிசிப்பதோடு சரி! அதிலும் ஓர் அழகு.

ஒவ்வொரு விடுமுறையிலும் பேருந்தில் நகரை நெருங்கும் போது தூரத்திலிருந்தே மலைக் கோட்டையின் மகோன்னதமான காட்சி மனத்தை நிறைத்து விடும். மேலும் நெருங்க நெருங்கப் பொங்கிப் பெருகும் மகத்தான மகிழ்ச்சி வெள்ளத்திற்கு ஈடு இணையே இல்லை!

--எம். அன்புச் செழியன்,
II Semester,
P. G. Diploma in MIT
Scan Centre
Coimbatore Institute of Technology,
Coimbatore-641 014.

வறட்சி மாறும் போது மகிழ்ச்சி

குருவிகுளம் என்று அதன் பெயர். குளம், அதனைச் சுற்றி மரங்கள். மரங்களில் இனிமையாகக் குரல் எழுப்பிக் கொண்டும், சிறகடித்துப் பறந்து கொண்டும் இருக்கும் குருவிகள்.

நீர் ததும்பிக் கொண்டிருக்கும், அந்தக் குளமும், அருகில் அமைந்த கிணறுகளும் கோடையின் கொடுமையால் நீர் வற்றி, பாறைகள் எழும்பி நின்று, பாறைக் குளமாக ஆகிவிடுவதைப் பார்க்கும் போது, நமது மனமும் பாறையாக மாறி விடும். ஒரு குடம் நீருக்கு மக்கள் அலைவதைப் பார்க்கும் போது கண்களில் நீர் பெருகும்.

மழைக் காலம் வந்தவுடன், மக்கள் மனத்தில் மகிழ்ச்சி பெருகும். குளத்தில் எத்தனை படிகளுக்கு நீர் வந்திருக்கிறதோ என்று பேசிப் பேசி மாய்ந்து போவார்கள். மழை சற்று நிற்கும் போது, ஓடோடிச் சென்று பார்க்கும் அந்த ஆர்வம் இருக்கிறதே, அப்பப்பா!



ஊரில் உள்ள டூரிங் தியேட்டரில் சுவரில் சாய்ந்து, மண்ணில் உட்கார்ந்து, நான்கு இடைவேளைகள்; பிலிம் அறுந்து, அறுந்து போகும் நேரத்தில் மேலும் பல இடை வேளைகள், இவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டு படம் பார்த்து விட்டு வரும் மகிழ்ச்சியே அலாதி!

--ச. பத்மப்ரியா,
அஞ்சல் வழிக் கல்வித் துறை.
இளம் வணிகவியல் முதலாமாண்டு,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
(வீட்டு விலாசம் தேவை)

மாந்தோப்புச் சாலை



பரந்து கிடக்கும் மேட்டூர் அணை நீர்த் தேக்கத்தின் பின்புறத்திலே, அடர்த்தியான மாமரங்களின் இடையே எங்கள் வீடு இருக்கிறது. ஏப்ரல், மே மாதங்களில் மரங்களிலே அங்கொன்றும், இங்கொன்றும் கொத்துக் கொத்தாகத் தொங்கும் மாங்கனிகளைப் பறித்து, எனது தோழிகளுடன் மாந்தோப்பு ஓரத்திலே இருக்கும் மேடையில் அமர்ந்து, பழத்தைச் சுவைத்தபடியே கல்லூரிக் கதைகளைப் பரிமாறிக் கொள்ளும் சுகமே சுகம்.

இரவு உணவிற்குப் பின், எனது தாயாரும் நானும் மாமரங்களுக்கிடையே செல்லும் சாலையில் ஒரு 'வாக்' போவது வழக்கம். நிலவு படர்ந்து ஓர் அமைதியான குளு

மையான ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கும். மனித நடமாட்டம் மிகக் குறைவான அந்தப் பாதையிலே 'நானும், அம்மாவும் 'வாக்' போகும் பொழுது, தாயாரோடு விவரிக்க முடியாத ஒரு நெருக்கத்தை உணர்வேன். அப்போது எனது தாயார் எனக்கு அறிவும் அனுபவமும் மிக்க தோழியாகத் தெரிவார். எதுவுமே மறைக்கப்படாமல் எல்லா உணர்வுகளையும் எனது தாயாரிடம் கொட்டும் பொழுது, அந்த உணர்வுகளை மதித்து, எனது நன்மைக்கேற்ப எனது தாயார் தரும் அறிவுரை பலமுறை எனக்குத் தெளிவு பிறக்கச் செய்திருக்கிறது. அங்கு நானும் எனது அம்மாவும் மட்டும் ஒரு தனி உலகத்தை ஏற்படுத்திக் கொண்டு ஓர் இனிய நட்புணர்வைப் பெற்றிருக்கிறோம். அது எங்களுக்கு மட்டுமே சொந்தம்!

-- எம். ஜி. ஸ்ரீதேவி,
இயற்பியல் மூன்றாம் ஆண்டு,
வேளாளர் மகளிர் கல்லூரி,
திண்டல்,
ஈரோடு - 9.

உறங்கா நகரம்



கிராமத்திற்கேயுரிய சகமனித நேயமும், நகரத்திற்குரிய நாகரிகமும் ஒருங்கே இணைந்திருப்பது மதுரை. மேம்பாலத்துக்கு அருகில், வைகை நதிக்கு நடுவில், இருக்கும் பாழடைந்த மண்டபத்துக்கு அடிக்கடி செல்வேன். மாலைப் பொழுதை இனிமையாகக் கழிக்க எத்தனையோ பூங்காக்கள், திரையரங்குகள் இருந்த போதும் ஏனோ அந்த மண்டபத்தின் மேல் எனக்கு ஓர் ஆத்மார்த்தமான ஈடுபாடு. இத்தனைக்கும் இருபுறமும் சாக்கடை நீர்தான் ஓடும்; எருமை மாடுகள் குளித்துக் கொண்டிருக்கும்; சிலர் சீட்டு விளையாடிக் கொண்டிருப்பார்கள்; கஞ்சாக் கிராக்கிகளும் அங்கு வருவதுண்டு! ஆனால் இந்தச் சுற்றுப்புறத்தை முழுமையாக மறந்து விட்டால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் வளமான வரலாற்றில் திளைக்க முடியும். அந்த மண்டபம் யாரோ ஒரு மன்னன் இளைப்பாறுவதற்காகக் கட்டியதாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் காலத்தில் கரையிலிருந்து படகில்தான் இங்கு வந்திருக்க முடியும். இருபுறமும் தண்ணீர் சலசலக்க நடுவில் இவ்வளவு விஸ்தாரமான மண்டபத்தை நிர்மாணித்த மன்னன் எவ்வளவு கலாரசனையுள்ளவனாக இருந்திருக்க வேண்டும்!


பள்ளி நாட்களில் 'எங்கள் ஊர்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதும் போது, 'எங்கள் ஊரில் மீனாட்சி அம்மன் கோவில், தெப்பக்குளம், அழகர் கோவில், காந்தி மியூசியம், திருமலை நாயக்கர் மஹால் முதலான பார்க்கத் தகுந்த இடங்கள் உள்ளன...' என்று கடமையாக எழுதியதை நினைத்தால் சிரிப்பாக இருக்கிறது! அன்றோ அவை வெறும் மனப்பாடத்திற்கான வார்த்தைகள்; இப்போது அவற்றோடு உணர்ச்சிபூர்வமாக ஒன்ற முடிகிறது. கல்கத்தா, சென்னை, ஹைதராபாத் போன்ற நகரங்கள் 300 வது, 400வது என்று பிறந்த நாளைக் கொண்டாடும் போது மதுரைக்கு ஒரு பிறந்த நாளை நிர்ணயிக்க வேண்டுமென்றால் அது எத்தனை ஆயிரமாக இருக்க வேண்டுமென்று எண்ணினால் தானாகக் கை காலரைத் தூக்கி விட்டுக் கொள்கிறது!

மதுரையை ஓர் 'உறங்கா நகரம்' என்றே கூறலாம். இரவு இரண்டு மணிக்கும் சிம்மக்கல், யானைக்கல் ஏரியாக்களில் கடைகள் மூடப்பட்டுப் பார்க்க முடியாது. மதுரையின் நிஜமான சுகானுபவத்தைப் பெற இரவு முழுதும் இயங்கும் சாலையோரச் சிற்றுண்டிக் கடைகளில் சாப்பிட வேண்டும். இங்கு கிடைக்கும் உணவுப் பதார்த்தங்களின் வெரைட்டி கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டியது! பத்து வகைச் சட்னியுடன் இட்லி, ஊத்தப்பம், இடியாப்பம், புட்டு... என்ற நீண்ட பட்டியல்! செகண்ட் ஷோ பார்த்து விட்டுக் காலாற வீட்டுக்கு நடந்து வரும் வழியில் வாழைப்பழம் சாப்பிட்டு விட்டு மணக்க மணக்க மசாலாப் பால் குடிக்கும் சுகத்துக்காகவே ஒரு நாள் விடுமுறை கிடைத்தாலும் மதுரைக்கு ஓடி விடுவேன்!

-- மு. செந்தில், மூன்றாம் ஆண்டு,
கம்ப்யூட்டர் சைன்ஸ்,
மெப்கோ பொறியியற் கல்லூரி,
அர்னாத்தூர் போஸ்ட்,
சிவகாசி - 626 005.

ரீடிஃப்யூஷன்: நாட்டின் மிகப் பெரிய இந்த விளம்பர நிறுவனத்தின் பெயர், இப்போது பலருக்கும் அறிமுகமாகி இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இ. காங்கிரஸ்.

84 தேர்தலின் போதும், 89 தேர்தலின் போதும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் இ. காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு திரட்டிய இந்த ரீடிஃப்யூஷன் நிறுவனத்துக்குஇந்தத் தடவை விளம்பரம் செய்யும் வாய்ப்புக் கொடுக்கப் படவில்லை. காரணம், 89 தேர்தலில் இ. காங்கிரஸ் அடைந்த தோல்வி. 'தேஜும், நட்டு வாக்கினியும் பயமுறுத்திய, எதிர்மறையான விளம்பரங்கள் மூலம்தான் காங்கிரசுக்கு அதிக வோட்டுகள் கிடைக்காமல் போயிற்று என்று ராஜீவுக்கு ஓர் எண்ணம். அதனால் இந்த முறை விளம்பரங்கள் கொஞ்சம் மிருதுவாகவே இருக்கட்டும் என்று அவரும்,



★ சாதகம் : 79 ல் இ.காங்கிரஸ் விளம்பரம்

தேர்தல் விளம்பரங்கள்: கோடிக்கணக்கில் வியாபாரம்!

ப. சிதம்பரமும் அடித்துச் சொல்லிவிட, ரீடிஃப்யூஷனுக்கு வாய்ப்பே போய்விட்டது.

''நமக்குத் தராதது நல்லதாகப் போயிற்று. ஜெயித்தால், கட்சி பெயரைத் தட்டிக் கொண்டு போகிறது. தோற்றால் மட்டும் பழியை விளம்பர ஏஜென்சி மீது சுமத்துவதா?'' என்று ரீடிஃப்யூஷன் அதிபர் நந்தா கேட்கிறார். ''இன்ன கட்சிக்குத்தான் வோட்டுப் போடுவது என்று பல வாக்காளர்கள் தீர்மானமாக இருப்பார்கள்; இப்படி முடிவு செய்யாத வாக்காளர்களுக்கு, ஒரு முடிவுக்கு வர உதவுகிறவைதான் கட்சி விளம்பரங்கள்'' என்கிறார்.

'ரீடிஃப்யூஷன் செய்த விளம்பரங்கள் போலத்தானே நாட்டில் நிலைமை உருவாயிற்று? எத்தனை துல்லியமாகப் பிரதமர் பதவிச் சண்டையை அவர்கள் 89 இல் வெளியிட்டார்கள்! அதனால் ரீடிஃப்யூஷ னுக்கே மறுபடி வாய்ப்புக் கொடுக்க வேண்டும்' என்று ஜவகர் பவனில், ஜகதீஷ் டைட்லர், எஸ்.எஸ். அலுவாலியா முதல் பலரும் வாதாடியதாகத் தெரிகிறது. சர்ச் சைக்குரிய அரசு அதிகாரி சாம் பிட்ரோடா, ஆர்.டி. பிரதான் போன்றோர் வெவ்வேறு விளம்பர உத்திகளையும் தம் பங்குக்கு அளித்தார்கள். ஆளாளுக்கு ஒவ்வொரு விளம்பர நிறுவனத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். கடைசியில் ராஜீவ்- சிதம்பரம் குழு, பிரணாப் முகர்ஜி சிபாரிசு செய்த கிளாரியன் விளம்பர நிறுவனத்துக்கே வாய்ப்புக் கொடுப்பது என்று தீர்மானித்தது. (கிளாரியன், இ.காங்கிரசுக்காக 'ஜீரோ அவர்' என்ற மாத இதழை ஏற்கெனவே தயாரித்து வருகிறது.) விளம்பரங்களில் மிகப் பெரிய



★ பாதகம் : 89 ல் இ.காங்கிரஸ் விளம்பரங்கள்

பங்கு இளாரியனுக்குக் கிடைத்தது. 89 தேர்த லில் சுமார் 25 கோடி வரை ரீடிஃப்யூஷன் மூலம் செலவழித்த இ.காங்கிரஸ் இம்முறை பத்துக் கோடிக்குள் நிறுத்திக்கொண்டுவிடும் என்று தெரிகிறது - வகை, வகையான போஸ்டர்கள் உட்பட.

ஜனதாவுக்காக 79 இல் விளம்பரங்களை மேற்கொண்டவை உல்கா அட்வர்டைசிங்கும், விஷன் அட்வர்டைசிங்கும். பிறகு பி.ஜே.பி.க்கு உல்கா 84 இல் விளம்பரங்கள் செய்தது. இதில் ''45 லட்ச ரூபாயில் 30 லட்ச ரூபாயே வசூலாயிற்று. இன்னும் பழைய பாக்கி இருக்கிறது!'' என்கிறது உல்கா. வேறு சில அரசியல் விளம்பரங்களைக் கையாண்டிருக்கும், ரவி குப்தா, ('திரிகயா' விளம்பர நிறுவன அதிபர்) ''அரசியல் கட்சிகளின் விளம்பரங்களை ஏற்பதில் ரிஸ்க் உண்டு. நாலே வாரத்தில் 5 கோடி ரூபாய்க்கு விளம்பரம் செய்து விடலாம்; ஆனால் தேர்தலுக்கு முன்பு அரசியல் கட்சியிடமிருந்து வசூலாகிறவரைதான் லாபம். அப்புறம் பேசாமல் பாக்கியை மறந்துவிட வேண்டியதுதான்!'' என்கிறார். ரீடிஃப்யூஷனுக்கும் இ.காங்கிரஸ் மீது வைத்திருக்கிறது என்கிறது ஒரு செய்தி. அட்வர்டைசிங் ஏஜென்சிஸ் அசோசியேஷன் தலைவர் சஜீத் பிர்பாய் அலுத்துப் போய்ச் சொன்னார்: ''இந்த அரசியல் கட்சிகளின் விளம்பரங்களே வேண்டாம்டா சாமி. சுத்த 'டர்ட்டி பிஸினஸ்'. தலைக்குத் தலை 'சம்திங்' தள்ள வேண்டிய அமுக்குப் பிடித்த விவகாரம்!''

இந்தத் தடவை, பாரதிய ஜனதா கட்சிக்காக விளம்பரங்கள் செய்யும் வாய்ப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர் பிரபல விளம்பர நிறுவனம் 'ஆர்.கே. சுவாமி அசோசியேட்ஸ்' அதிபர் ஆர்.கே. சுவாமி. (ராஷ்ட்ரீய அட்வர்டைசிங் நிறுவனத்துக்கும் கொஞ்சம் கிடைத்திருக்கிறது.)

''நான் எந்தக் கட்சியையும் சாராதவன். எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமே இல்லை. ஒரு கட்சிக்காரர், விளம்பர ஏஜென்சி என்ற அளவிலேயே என்னுடைய பணியைச் செய்திருக்கிறேன். என்னுடைய வேலையை முடித்துக் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்!'' என்றார் ஆர்.கே. சுவாமி.

'எல்லாக் கட்சிகளுக்கும் இதுவரை வாய்ப்பு அளித்து விட்டீர்கள். இம்முறை பி.ஜே.பிக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்!' என்கிற வாசகம் இப்போது பிரபலமாகி வருகிறது. எளிய, நேரிடையான வேண்டுகோள் வாசகங்களே இவர்கள் விளம்பரங்களில் இடம் பெறுகின்றன.

விளம்பரங்கள் தவிர, ஏராளமான வீடியோ, ஆடியோ காஸெட்டுகள் வேறு தொகுதி தொகுதியாக ஒலி-ஒளி பரப்பப்படுகின்றன. இதில் கை தேர்ந்த நிபுணர் என்று கருதப்படுபவர் டாக்டர் ஜே.கே. ஜெயின். பாரதிய ஜனதாவுக்கு மட்டும் அல்லாமல், இ.காங்கிரசுக்கும் கூட இவர் வீடியோ காஸெட்டுகள் தயாரித்தவர்!

வாதி, பிரதிவாதி இரண்டு பேருக்காகவும் வாதாடும் வாய்ப்பு வக்கீலுக்குக் கிடைக்காது: விளம்பர நிபுணருக்குக் கிடைக்கிறது!

- சித்தார்த்

சொன்னது சொன்னபடி...

● தேர்தல் எனக்கு ஒருவித டைவர்ஷன் - வி. பி. சிங். ● அடுத்த பிரதமர் சந்திரசேகர்தான்; எனக்குச் சந்தேகமே இல்லை - சுப்பிரமணியம் சுவாமி. ● என்னையும், வி. பி. சிங்கையும் பிளவுபடுத்திப் பிரித்து வைத்தது பத்திரிகைகள்தாம் - தேவிலால். ● பி. ஜே. பி. மட்டும்தான் சிறுபான்மையினரின் உண்மையான நண்பன். - முஸ்லிம் இளைஞர் மன்றத் தலைவர் முக்தர் அப்பாஸ் நக்வி. ● மத்தியில் ஒரு கட்சி ஆட்சி என்பதெல்லாம் இனி முடிந்து போன கதை - பிஜு பட்நாயக். ● எங்களுக்கு இ. காங்கிரஸ்தான் பிரதான எதிரி; பி. ஜே. பி. அல்ல - ஹெக்டே. ● இ. காங்கிரஸ், இடதுசாரிக் கட்சிகள், ஜனதா தளம் எல்லாமே எங்களுக்கு எதிரானவை; ஆனால் நாட்டின் ஒற்றுமையைக் காப்பதற்காகப் பஞ்சாபில் இணைந்து பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடுவதுதான் நல்லது - பி. ஜே. பி. தலைவர் எஸ் பண்டாரி. ● எலக்ட்ரானிக் வோட்டு இயந்திரங்களை இந்தத் தேர்தலில் உபயோகிப்பதில்லை என்பதால், எண்பது கோடி ரூபாயை மிச்சப்படுத்த முடியாமல் போகிறது - பேராசிரியர் பி. வி. இந்திரேசன். ● முதலாளிகளின் கட்சியான பி. ஜே. பி. யின் தூண்டுதலால் , தொழிலதிபர்கள் சேர்ந்து கொண்டு தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்து விட்டார்கள் - தேவிலால். ● தேர்தலுக்காக நான் 'பிரும்மரிஷி விசுவாமித்திரர்' தயாரிக்கவில்லை; தற்செயலாகத்தான் தேர்தல் சமயத்தில் அது வெளியாகிறது - என். டி. ராமாராவ்.

தொகுப்பு : எஸ். வி. என்.

கல்லடி படாமல் போகுமா பஸ்?



சிறுவன் "அம்மா! நுங்கு வாங்கலாம்மா" என்று கேட்கவே பெரிய பெண்ணை மட்டும் பஸ்ஸில் அமர்ந்திருக்கச் சொல்லிவிட்டு மற்ற குழந்தைகளுடன் கீழே இறங்கினார். திரும்பி வந்ததும் அவர்கள் அமர்ந்திருந்த சீட்டில் வேறு இரு பெண்கள் அமர்ந்திருக்கவே கோபத்தோடு தனது பெண்ணைப் பார்த்து, "ஏண்டி கழுதை! ஆள் வர்றாங்க உட்காராதீங்கன்னு சொல்லி இடத்தைப் பிடிச்சு வைச்சிருக்க மாட்டே, எருமை மாடு," என்று திட்ட ஆரம்பித்து விட்டார்.

உடனே நடத்துனர், "அம்மா, இந்தப் பஸ் ஸிலே மனிதர்களை மட்டும்தான் ஏற்று வோம். உங்க கூடப் பிராணிகள் எதையாவது கூட்டிக்கிட்டு வந்திருந்தா தயவு செய்து கீழே இறக்கி விட்டுடுங்க" என்று சொன்னதும் பயணிகளின் சிரிப்பால் பஸ்ஸே குலுங்கியது!

-- இரா. சம்பத் குமார், இராசிபுரம்.


* * * * *

★ நானும் என் பேரனும் ஒரு சிறிய அறையில் தூங்க வேண்டியிருந்தது. ஒரே கட்டில். கீழே ஒரு படுக்கையை விரித்துவிட்டு, அவனைக் கட்டிலின் மீது படுத்துக் கொள்ளச் சொன்னேன். அவன் விழுந்து விடுவேனோ என்று பயந்து என்னையே கட்டிலின் மீது படுத்துக் கொள்ளச் சொன்னான்.

பின்னர், சிறிது யோசித்துவிட்டு, "தாத்தா, நானே கட்டிலின் மீது படுக்கிறேன். விழுந் தால் உன் மீதுதானே விழுவேன்! நீங்கள் கட்டிலில் படுத்திருந்து விழுந்தால் அடிபடுமே!" என்றான்.

-- எம். ஏ. பெரியசாமி, திருச்சி.

* * * * *



"பி. எஸ்ஸி முடிச்சுட்டீங்களாமே, அடுத்து என்ன செய்யப் போறீங்க?"

"அரியர்ஸ் எழுதப் போறேன்!"

--ஆர். லதா, உடுமலைப்பேட்டை.

* * * * *



★ 'இதயத்தைத் திருடாதே' படம் வெளிவந்த புதிது.

ஒரு மாணவன் மாணவியிடம் தமாஷாக: "நாமிருவரும் ஓடிப் போயிடலாமா?"

மாணவி: "செருப்புப் பிஞ்சிடும்!"

மாணவன்: அப்படின்னா ஸ்போர்ட்ஸ் ஷூ போட்டுக்கிட்டு வா, எவ்வளவு தூரம் ஓடினாலும் கிழியவே கிழியாது!"

--தக் கோலம் புகாரி.

* * * * *

★ தி. மு. க. ஆட்சியைக் கலைத்த சமயம், பேருந்துகளெல்லாம் கல்லடிக்குப் பயந்து ஓடிக் கொண்டிருந்த போது, நாங்கள் இருந்த பேருந்தை நெருங்கி ஒரு முதியவர்,

'ஏன் தம்பி, இந்த பஸ், செங்கல்பட்டு போவுங்களா?' என்று கேட்க,

உடனே கண்டக்டர், 'போவ் பெரிசு... அவ னவன் கல்லடி படாம பஸ் போய்ச் சேர னும்னு வேண்டிக்கிறான். நீ என்ன ஏறும் போதே இப்படிக் கேட்கிறியே?' என்றாரே பார்க்கலாம்!

--சிவ. சீனிவாசன், கும்பகோணம் - 1.

தேர்தல் வாக்குறுதிகளில் உங்களைக் கவர்ந்தது?

✱ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'எங்கள் ஆதரவில்லாமல் அ. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி தமிழகத்தில் மந்திரி சபை அமைக்க முடியாது' என்று சு. சுவாமி கூறுகிறாரே?

! சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். அவர் ஆதரவு காரணமாகத்தானே சட்ட மன்றத் தேர்தலே வந்தது!

✱ மஞ்சுதேவன், கல்கத்தா.

? மாரடோனா பற்றி...?

! போதை மருந்து வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்ட பின் மார்டரோனா.

✱ வை. ராஜப்பா, நெய்வேலி.

? ஜனாதிபதி பதவி வகித்தவரையே (சஞ்சீவ ரெட்டி) வைத்துக் கொண்டு வியாபாரம் செய்பவர்கள், உங்கள் கண்க ளில் மரபு மீறியவர்களாகப்படவில்லையா? சதுர்வேதி பற்றிக் குறை கூறுகிறீர்களே?

! ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதில் அரசியல் கண்ணோட்டம் நிறையவே உண்டு. அதிகாரங்கள் ரொம்பக் குறைவு. பதவியில் இருக்கும் போது நடுநிலை வகிக்க வேண்டியவர், பின்னால் அரசியலுக்கு மீண்டும் திரும்பினால் தவறாகக் கருதப்படு வதில்லை. ஸி. ஏ. ஜி. பதவி அப்ப டிப்பட்டதல்ல. அது நியமனப் பதவி. லஞ்ச ஊழல்களை அம்பலப்படுத்த அபாரமான அதிகாரங்களைக் கொண்டது. அதில் அமர்ந்து விட்டால் பதவிக் காலம் முடியும் வரை யாராலும் அவரை அசைக்க முடியாது. இத்தகையவர்கள், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக, எப்போதுமே இருக்க வேண்டும் என்ற மரபு உள்ளது.

✱ ப. வித்தியா, வில்லியநல்லூர்.

? ஜனதா தளத்தின் கடையாணி கழண்டுக்கிச்சே? சக்கரம் தொடர்ந்து ஓடுமா?

! இப்போதைக்குச் சக்கரம் சுழன்று கொண்டுதான் இருக்கிறது. விபத்தில்லா மல் வண்டி ஊர் போய்ச் சேருமா என்ப துதான் சந்தேகம்!

✱ எஸ். நாரம்பு நாதன், சுரண்டை.

? 'சமூக, பொருளாதார நிகழ்ச்சிகளுக்குப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்க வில்லை' என்று தமிழக ஆளுனர் வருத்தப்பட்டுள்ளாரே?

சரியாச் சொன்னார்! ஓய். ஜி. பி.



நீதி... ...வழங்குங்கள்!

! தமிழ் படிக்கத் தெரியாமல் இருக்கலாம்; ஆங்கிலம் கூடவா? ஆச்சர்யம்தான்!

✱ வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்.

? தேர்தல் வாக்குறுதிகளில் உங்களைக் கவர்ந்தது?

! பி. ஜே. பி. யின் தேர்தல் அறிக்கை, மைனஸ் ராம ஜன்ம பூமியும் இந்துத்து வமும்.

✱ பி. எஸ். கோவிந்தராஜன், திருச்சி.

? 'நான் கால்பந்து நடுவர் போல' என்று டி. என். சேஷன் கூறியிருப்பது பற்றி?

! போட்டி சூடுபிடிக்கும் போது, சில சமயம் நடுவரையே பந்தாடி விடுவார்கள் என்றும் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்!

✱ ஸ்ரீராஜ், பம்பாய்.

? கோடைவாசஸ்தலத்தில் உங்களுடைய வோட்டு நீலகிரிக்கா? கொடைக்கான லுக்கா? ஏற்காட்டுக்கா?

! ஹி. ஹி.. எல். டி. ஸி. வசதி இல்லாத என் போன்ற ஜன்மங்களுக்குக் கிழிந்த வேஷ்டி யை நனைத்துக் கொடியில் உலர்த்தி, ஃபானைப் போட்டுக் கொண்டு உட் கார்ந்தால் ஊட்டி, சிம்லா எல்லாம் வீட்டுக்கே வந்து விடும்!

✱ கே. கே. வஸந்த், மாப்பிள்ளை குப்பம்.

? போகிற போக்கைப் பார்த்தால் சசின் இந்திய காப்டன் ஆகி விடுவார் போலிருக்கு?

! அவரது அநாயாச பவுண்டரிகள் காரணமாகக் காப்டன் பதவி இப்போதே

தரப்பட்டாலும் போதிய அனுபவம் பெற்ற பின், அவர் அதை ஏற்றுக் கொள்வதே இந்திய கிரிக்கெட்டுக்கு நன்மை.

* டி. சீனிவாசன், சென்னை. *

? அகாலிகளிடையே பிளவு ஏற்பட்டிருப்பது விரும்பத்தகாத விஷயம் தானே?

! அகாலிகளிடையே ஒற்றுமை என்பது வன்முறையாளரின் ஆதிக்கத்துக்கு உட்படுவது எனில், அந்த ஒற்றுமை வரவேற்கத்தக்கதல்ல. தேர்தல் என்று அறிவித்ததும் சிதறியது, அந்த ஒற்றுமையில் வலுவில்லை என்பதையே நிரூபிக்கிறது. உள்ளாட்சித் தேர்தல்களில் பஞ்சாபில் பி. ஜே. பி. அடைந்துள்ள வெற்றிகளும் கவனத்துக்குரியன.

* சி. மணி, புத்தனாம்பட்டி.

? 'தி. மு. க. வைத் தோற்கடித்து, எனக்கு நீதி வழங்குங்கள்' என்கிறாரே ஜெயலலிதா?

! கலைஞரும் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டதற்கு நீதி வழங்கச் சொல்லித்தான் கேட்கிறார். அரசியல்வாதிகள் முதலில் கேட்பது நிதி; பின்னர் கேட்பது நீதி!

* எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய்நல்லூர்.

? அப்பாவுக்குப் பயப்படும் மகன்கள் அதிகமா? மகன்களுக்குப் பயப்படும் அப்பாக்கள் அதிகமா?

! தேவிலாலைக் கேட்டால் இருதரப்பிலும் பயப்படுவது போல் நடிப்பவர் அதிகம் என்பார்! எல்லாம் ஒரு ஸெட் அப்தானே!

* அ. முஸ்தபா, தக்கோலம்.

? சமீபத்திய மேடை நாடகங்களில் உங்களைக் கவர்ந்தது எது?

! சிமான் வீட்டுப் பிள்ளை, நாற்காலி இல்லாமல் கடைசி வரை நின்று கொண்டே ஜெக்கு அஞ்சலி செலுத்தியது சிலரைக் கவர்ந்தது; இந்த மட்டில் பாதம் பணியாமல் விட்டாரே என்பது என்னைக் கவர்ந்தது!

* ரகுராமன், சென்னை.

? ஒய். ஜி. பீ.?

! உள்ளத்தால் கடைசி வரை இளைஞர். அதனால் ஒய் - யங். நடிப்பிலே சிறந்தவர். ஜி - கிரேட். ஏராளமான நடிகர்களை உருவாக்கியதிலே குறிப்பிடத்தக்கவர். பி-

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**
டி. சீனிவாசன்,
54, (மாடி), காளத்தி பிள்ளை தெரு,
சௌகார்பேட்டை, சென்னை - 79.

Phenomenon. சிரிப்புத் தோரணங்களாக அவர் தயாரித்த சில நாடகங்கள் நாடக உலகுக்கு ஊறு செய்தாலும் அற்புதமான, கனமான பல நாடகங்களையும் அரங்கேற்றியதை மறக்க முடியாது. தமிழ் நாடக வரலாற்றில் அவருக்கு ஒரு சிறப்பிடம் உண்டு.

* போஸ்டல் பிரபாகரன், குடியாத்தம்.

? அரசியலில் குதிக்க என்ன தகுதி வேண்டும்?

! பிரபலமாக இருந்தால் குதிக்க வைத்து விடுவார்கள். பட்டோடி நவாப் போன்ற கிரிக்கெட் வீரர்கள்; சினிமா நட்சத்திரங்கள்; டீவி ராவணர்கள் - சீதைகள் எல்லாருக்கும் அடிக்குது யோகம்!

* எஸ். வாணிசங்கர், சென்னை - 5.


? சிவனை, 'இன்னொரு தியாகையர்' என்று கூறுவதில் என்ன பிழை? மதுரை ஏ. வைத்தியநாத அய்யரை அன்றே 'மதுரைக் காந்தி' என்றுதானே குறிப்பிடுவோம்?

! நான் 'மிகை' என்றுதான் கூறினேனே தவிர, 'பிழை' என்று சொல்லவில்லை. 'மதுரைக் காந்தி', 'இன்னொரு தியாகையர்', 'தமிழ் நாட்டு பெர்னார்ட் ஷா' என்றெல்லாம் வர்ணிக்கும்போதே, அவை மிகைப்படுத்தப்பட்ட சொற்கள் என்பது ஒப்புக் கொள்ளப்படுகின்றன. நமது சகோதரியையோ தாயாரையோ 'பொறுமையில் பூமி தேவி' என்று கூட வர்ணிப்பது உண்டு.

* ப. ஜெயசந்திரன், மணப்பாறை.

? 'ஒவ்வோர் ஆண்டும் புதிய முதல் அமைச்சரை நியமிப்போம்' என்று பா. ம. கட்சி கூறுகிறதே?


! போதாக்குறைக்கு சந்திரசேகர் வேறு, சிறிய சிறிய மாநிலங்களைத் தோற்றுவித்து, அதன் மூலம், மேலும் பல முதல்வர்களுக்கும், அதிகாரவர்க்கத்துக்கும், வீண் செலவுகளுக்கும் வழி வகுப்பதாகக் கூறுகிறார். இவர்களெல்லாம் பதவிக்கு வராமல் வாக்காளர்கள்தான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும்!




ஸெட் அப்!'



சிமான் வீட்டுப் பிள்ளை...



கால்பந்து நடுவர்...



அரசியலில் குதித்தார்!

கொடியது கேட்கின்...

பன்னாட்டுப் படைகள் நடத்திய குண்டு வீச்சில் இறந்துபட்ட ஈராக்கிய மக்களின் குவியல், ஒரு பாம்புப் புற்று அளவானது எனில், ஈராக்கிய ராணுவத்தாலேயே தாக்கப்பட்டு மடிந்து போன ஈராக்கிய குர்திஷ் மக்களின் பிணக் குவியல் மலை போன்றது! கையோ காலோ இழந்து, உடல் வெந்து புண்ணாகி, அண்டை நாட்டின் எல்லை நோக்கி ஓடினார்கள். அங்கேயும் தடுத்து நிறுத்தப்பட்டுத் தவித்தார்கள். ஒரு துண்டு ரொட்டிக்கு ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டார்கள். அமெரிக்கா விமானத்திலிருந்து வீசிய உணவுப் பொருள்களை அடைவதில் காட்டிய பரபரப்பு காரணமாக, அந்த உணவுப் பார்சல்களின் அடியிலேயே சிக்கிப் பலர் மாண்டார்கள்!

நல்லவேளை, இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு ஏற்படும் போல் தோன்றுகிறது. 'குர்திஷ் மக்களும் நம் மக்களே', என்றுணர்ந்து, சத்தாம் உசேன் சமாதானமாகப் போவது போல் காணப்படுகிறது. குர்திஷ் புரட்சியாளரும், 'கஷ்டமோ நஷ்டமோ ஒன்று பட்டால் வாழ்வு; ஒற்றுமை நீங்கிடில் தாழ்வு' என்று புரிந்து கொண்டு, விட்டுக் கொடுப்பதாகத் தோன்றுகிறது. முழு அமைதி திரும்பி, ஈராக், போரின் புண்களை ஆற்றிக் கொண்டு வளம் பெற வேண்டும்; மக்களும் நலம் பெற வேண்டும்.

ஒரு நாட்டின் மக்களை, அந்த நாட்டு ராணுவமே தாக்கிக் கொல்ல நேர்வது பயங்கரமானதுதான். அந்தக் கொடுமைக் குச் சற்றும் குறைந்தது அல்ல, ஒரு நாட்டின் அரசு, தனது மெத்தனத்தால் தனது நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் சாக விடுவது. வங்கக் கடலில் புயல் உருவாகி, கடற்கரையோரமாக வடக்கே முன்னேறியது. இது கடந்த சில நாட்களாகவே சகலரும் அறிந்த செய்தி. 'சென்னை' என்றார்கள்; பிறகு, 'விசாகை' என்றார்கள்; அப்புறம், 'இல்லை, இன்னும் வடக்கே விரைகிறது' என்றார்கள். நமது வங்கமும் கிழக்கு வங்கமும் எச்சரிக்கை அடைந்து முன்னேற்பாடுகளைச் செய்திருக்க வேண்டாமா? நமது அதிர்ஷ்டம், வங்க தேசத்தின் துரதிர்ஷ்டம், புயல் வங்க தேசத்தையே தாக்கியது. 2,00,000 பேர் மாண்டதாகக் குறைந்த பட்ச மதிப்பீடு. இப்படி மக்களைச் சாகவிடுவது என்றால், விண் வெளி விஞ்ஞானம், செயற்கைக் கோள்கள், நவீன தகவல் தொடர்புகள், வாகன வசதிகள் எல்லாம் எதற்கு? அரசாங்கம் என்பதாகத்தான் ஒன்று எதற்கு? புயல் தாக்கக் கூடிய பகுதிகளிலிருந்து முன்னேற்பாடாக மக்களை எச்சரித்து அப்புறப்படுத்துவது அவ்வளவு கஷ்டமா?

அதுவாவது இயற்கையின் கோபம்; ஆனால் மனிதன் தனது பேராசை காரணமாகத் திட்டமிட்டு, லட்சக்கணக்கான சிசுக்களைக் கொல்வது அரக்கத்தனம் அல்லவா? அதன் மறு பெயர் 'அபார்ஷன்'! இன்று சர்வ சாதாரணமாகி விட்ட அபார்ஷன் என்ற சொல், எத்தனை கொடுமை புரிகிறது என்பதை, மதுரை நேயர் எஸ். காந்திராஜ் எனக்குப் புள்ளி விவரத்துடன் எழுதித் தெரிவித்திருக்கிறார். முதல் உலக மகா யுத்தத்தின் போது மடிந்தவர்களின் எண்ணிக்கை 1,16,516. இரண்டாம் உலகப் போரின் போது மாண்டவர்கள் 4,07,316. கொரிய யுத்தத்திலும் வியட்நாம் யுத்தத்திலும் மேலும் ஒரு லட்சம் பேர் இறந்தனர். எல்லாமாகச் சேர்ந்தால் கூட ஆறு அல்லது ஆறரை லட்சம்தான் ஆகும். ஆனால் சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அபார்ஷன் மூலம் சாகடிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 1990 ஜனவரி கணக்குப்படி இரண்டரைக் கோடி! ஓர் ஆண்டில் சுமார் பதினைந்து லட்சம் குழந்தைகள் சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அபார் ஷன் மூலம் கொல்லப்படுவதாக மற்றொரு கணக்கு. இந்த லட்சணத்தில் நமது தலைவர்கள், 'கர்ப்பிணிப் பெண்களின் பராமரிப்புக்கு அரசு உதவி' என்று பேசுகிறார்கள்; பொதுக் கூட்டத்தினிடையே குழந்தைக்குப் பெயர் சூட்டி முத்தமிட்டு நாடகமாடுகிறார்கள்! மறுபுறம் அபார்ஷனுக்கு வரிப் பணம் ஒதுக்குகிறார்கள்!

அபார்ஷனுக்கு அமெரிக்காவில் உருவாகியுள்ள எதிர்ப்பு, நம் நாட்டில் எப்போது பரவப் போகிறது?

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

REGISTERED NO. M 4392
Registered as Newspaper in Srilanka

